விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 வைகாசி 13 வெள்ளிக்கிழமை (27.05.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 159

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# மனிதவுரிமையை மீறாத படையினர்

# இலங்கையுடன் ஐ.நா. உடன்பாடு!

## பாலித ஹோகன ஒப்பமிட்டார்

(கொழும்பு)

**ஐ.நா. அமைதிப் படைக்கு அனுப்பப்படும் படையினர் மனிதவுரிமை மீறல் குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடையவர்களாக இல்லாதிருப்பதை உறுதி செய்யும் உடன்பாட்டில் இலங்கை கையெழுத்திட்டுள்ளது. இதில் ஐ.நாவுக்கான இலங்கையின் வதிவிடப் பிரதிநிதி பாலித ஹோகன கையெழுத்திட்டுள்ளார்.**

ஐ.நா. அமைதிப்படை நடவடிக்கைகளுக்கான திணைக்கள அதிகாரிகளை இலங்கையின் ஐ.நாவுக்கான தூதுவர் மேஜர் ஜெனரல் சவீந்திர சில்வா இந்த வாரம் சந்தித்துப் பேசியுள்ளார். இதன்போது ஐ.நா. அமைதிப்படைக்கு அனுப்பப்படும் படையினர் மனிதவுரிமை மீறல் குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடையவர்களாக இல்லாதிருப்பதை உறுதி செய்யும் உடன்பாட்டில் இலங்கை கையெழுத்திட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐ.நா. அமைதிப் படையின் கெளரவத்தை உறுதிசெய்யும் வகையிலேயே ஐ.நா. அமைதிப்படைக்கு படையினரை அனுப்பும் உறுப்பு நாடுகளுடன் இத்தகைய உடன்பாட்டை ஐ.நா. செய்து வருகிறது.

இதன்படி எதிர்காலத்தில் எத்தகையவர்களை (20ஆம் பக்கம் பார்க்க)

## போர் வெற்றி விழா இன்று கொழும்பில்

(கொழும்பு)


விடுதலைப்புலிகளைத் தோற்கடித்த இரண்டாவது ஆண்டு வெற்றி விழா நிகழ்வுகள் இன்று நடைபெறவுள்ளன. காலி முகத்திடலில் இன்று காலை பிரமாண்டபடை அணிவகுப்பு நிகழ்வு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் இராணுவம், கடற்படை, விமானப்படை, பொலிஸ் மற்றும் குடிமக்கள் பாதுகாப்புப் படை ஆகியவற்றைச் சேர்ந்த 471 அதிகாரிகள் மற்றும் 7ஆயிரத்து 806 படையினர் பங்கேற்கும் பாரிய அணிவகுப்பு இடம்பெறும்.

இந்த அணிவகுப்புக்கு படைகளின் கிளிநொச்சிப் படைத் தலைமையக தளபதி மேஜர் ஜெனரல் நந்தன உடவத்த தலைமை தாங்குவார்.

391அதிகா (20ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்புச் செயலாளர் மீது வழக்கு தொடர ஐ.தே.க திட்டம்



(கொழும்பு)

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மீது பொதுச் சொத்துக்களை முறைகேடு செய்த குற்றச்சாட்டின் கீழ் வழக்குத் தாக்கல் செய்ய ஐ.தே.க. நடவடிக்கை எடுத்துள்ளது.

நான்காவது ஈழ யுத்தத்தின்போது இராணுவத் தளபாடங்கள் கொள்வனவு செய்யும் சாக்கில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாஜ ராஜபக்ஷ அறுபத்தி இரண்டு கோடி ரூபாயை முறைகேடாக சுருட்டிக்கொண்டுள்ளதாக வெள்ளைக்கொடி விவகாரம் தொடர்பான வழக்கில் சாட்சியமளிக்கையில் சரத் பொன்சேகா வெளிப்படுத்தியுள்ளார்.

அதன் அடிப்படையில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மீது பொதுச் சொத்துக்களை முறைகேடாக பயன்படுத்திய குற்றச்சாட்டின்கீழ் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுப்பதற்கான முயற்சிகளை ஐ.தே.க. மேற்கொண்டுள்ளது.

அவ்வாறான குற்றச்சாட்டின்பேரில் தொடுக்கப்படும் வழக்குகளின் போது குற்றம் சாட்டப்பட்டவர்கள் இலகுவில் பிணையில் வெளிவரமுடியாது என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் பிரஸ்தாப விடயம் குறித்து இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவிடம் முறையிடவும் ஐ.தே.க. முக்கியஸ்தர்கள் முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர். (ச–5)

## சீனாவின் பிரதித் தளபதி இலங்கைக்கு விஜயம்!

(கொழும்பு)

சீன இராணுவப் பிரதித் தளபதி ஜெனரல் மா சியாவோதியன் இலங்கைக்கு பயணம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

அடுத்த மாதம் முதல் வாரம் அவர் வரவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர் வரும் வழியில் புதுடில்லியில் ஒருநாள் தங்கியிருந்து இந்தியப் பாதுகாப்புத்துறையின் உயர்மட்டங்களுடன் பேச்சுநடத்த விருப்பம் தெரிவித்துள்ளதாக கூறப்படுகின்றது. ஆனால் (20ஆம் பக்கம் பார்க்க)

## இன்டர்போலின் பட்டியலில் மீண்டும் குமரன் பத்மநாதன்!



(கொழும்பு)

இன்டர்போல் பொலிஸாரின் தேடப்படுவோர் பட்டியலில் கே.பி. எனப்படும் குமரன் பத்மநாதனின் பெயர் மீண்டும் சேர்க்கப்பட்டுள்ளது.

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் படுகொலைச் சம்பவத்தை விடுதலைப்புலிகளே திட்டமிட்டு மேற்கொண்டதாக அவர் வழங்கியிருந்த பேட்டி ஒன்றே அவர் மீண்டும் இந்தியாவின் நீதிமன்ற தேடப்படுவோர் பட்டியலிலும் அதன் மூலமாக இன்டர்போல் பொலிஸாரின் தேடப்படுவோர் பட்டியலிலிலும் இடம்பிடிக்கக் காரணமாக அமைந்துள்ளது.

அதற்கு முன்பு சர்வதேச ஆயுதக் கடத்தல்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்களின் பேரில் அவரது பெயர் இன்டர்போல் பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருந்த போதும் அவர் கைது செய்யப்பட்டதை அடுத்து அது நீக்கிக் கொள்ளப்பட்டிருந்தது.

நோர்வேயில் புலிகளின் தலைவர் நெடியவன் ஹொலண்ட் நாட்டு விசேட குற்றத்தடுப்பு விசாரணைப் பிரிவினரால் விசாரிக்கப்பட்டதைத் தொடர்ந்து கே.பி. எனப்படும் குமரன் பத்மநாதன், முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியைப் புலிகளே கொன்றனர் என்று பரபரப்பான பேட்டியொன்றை இந்திய ஊடகம் ஒன்றுக்கு வழங்கி (20ஆம் பக்கம் பார்க்க)

## கே.பி. அரசின் கைதி; நான் அரசியல் கைதி

### சரத் பொன்சேகா நேற்று சாட்சியம்

(கொழும்பு)

கைது செய்யப்பட்ட கே.பி. அரசாங்கத்தின் கைதியாகவும், தான் அரசியல் கைதியாகவும் சிறையில் வைக்கப்பட்டுள்ளதாக முன்னாள் படைத்தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

வெள்ளைக்கொடி விவகார வழக்கில் நேற்று ஐந்தாம் நாளாக சாட்சியம் அளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தனது சாட்சியத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அரசியல் (20ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தத்தில் கொல்லப்பட்ட மக்களுக்கு யாழ்.மாநகரசபையில் அஞ்சலி நிகழ்வு

### ஆளும்தரப்பு கடும் எதிர்ப்பு

(யாழ்ப்பாணம்)

வன்னியில் இடம்பெற்ற யுத்தத்தின்போது கொல்லப்பட்ட பொது மக்களுக்கு யாழ்.மாநகர சபையில் எதிர்க்கட்சியினரால் அஞ்சலி செலுத்தப்பட்டது. எனினும் இதற்கு ஆளும் தரப்பினர் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

யாழ்.மாநகரசபையின் இவ் வருடத்திற்கான ஐந்தாவது மாதாந்தப் பொதுக்கூட்டம் நேற்று நடைபெற்றது.

முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்ட அப்பாவித் தமிழ்ப் பொதுமக்களுக்கு இக் கூட்டத்தின்போது அஞ்சலி செலுத்துமாறு எதிர்த்தரப்பான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இக் கோரிக்கையை ஆளும் தரப்பு உறுப்பினர்கள் முற்றாக நிராகரித்ததோடு தமிழ் மக்கள் கொல்லப்பட்டதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் புலிகளும்தான் காரணம் என ஒத்துக்கொண்டால் தாம் அஞ்சலி செலுத்தத்தயார் எனவும் தெரிவித்தனர்.

இதற்குப் பதிலளித்த எதிர்த்தரப்பு உறுப்பினர்கள், போரின்போது அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டது யாரால் என்பது தொடர்பாக ஐ.நா. அறிக் (20ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு, கிழக்கில் இடம்பெற்ற மனிதவுரிமை மீறல்களை விசாரிக்க நீதிபதிகள் கொண்ட மற்றொரு குழு

(கொழும்பு)

வடக்குக் கிழக்கில் இடம்பெற்ற மனிதவுரிமை மீறல்கள் மற்றும் ஏனைய அடிப்படை உரிமை மீறல்கள் குறித்த விசாரணைகளை மேற்கொள்ள 5 நீதிபதிகளைக் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டவுள்ளதாக இந்த ஆணைக்குழுவின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ள ஓய்வுபெற்ற நீதியரசர் பிரியந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் அனுசரணையுடன் கடந்த வாரம் ஜெனீவாவில் இடம்பெற்ற ஆசிய பசுபிக் மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத்தில் இலங்கையின் மனிதவுமை மீறல்கள் குறித்து விமர்சனங்கள் முன் (20ஆம் பக்கம் பார்க்க)

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

**Study & Work in UK and Canada**

Intake Get Register Now
Collecting the application until March 31st 2011
start the academic on August 2011
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
Administration & Documentation
என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான வீசா பெறுவதற்கான Sponsorship பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.
சகல தொடர்புகளுக்கும்: 0729994777
London City College
No.01, Deanston House, Deanston Place, Colombo-03
(C-2291)

# மின்சாரம் தடைப்படும்

(யாழ்ப்பாணம்)

உயரழுத்த மின் மார்க்கங்களில் கட்டமைப்பு வேலைகள் செய்யும் பொருட்டு நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை புத்தூர், வாதரவத்தை, வீரவாணி, ஆவரங்கால், ஊறணி ஆகிய இடங்களிலும்,

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை கொட்டடி, நாவாந்துறை, மீனாட்சிபுரம், காக்கைதீவு ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ்.பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ச)

**வர்த்தகப் பெருமக்களே...**

பெருமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு:-0729994777
(C-2290)

## ஆயுள்வேத பாதுகாப்பு சபை உருவாக்கல் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை பிரதேச செயலகப் பிரிவில் ஆயுள்வேத பாதுகாப்புச்சபை உருவாக்கல் தொடர்பான கூட்டம் எதிர்வரும் 30ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பதிவு செய்யப்பட்ட சகல ஆயுள்வேத வைத்தியர்களையும் இக் கூட்டத்தில் பங்கு பற்றுமாறு பிரதேச செயலர் எஸ்.முரளிதரன் கேட்டுள்ளார். (ஸ்ரீ-2)

## அதிபர் பதவி வெற்றிடம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலயத்திற்கு உட்பட்ட யாழ்/ஆனைக்கோட்டை அ.மி.த.க. பாடசாலைக்கு (தரம்-III பாடசாலை) அதிபர் பதவி வெற்றிடமாகவுள்ளது.

இலங்கை அதிபர் சேவை தரம் 3 ஐச் சேர்ந்தவர்களிடமிருந்தும், இலங்கை ஆசிரியர் சேவை தரம் 1,2-I, 2-II (பட்டதாரி ஆசிரியர்) ஐச் சேர்ந்தவர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மேற்படி பதவிக்கு வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்தவர்களே விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பிக்க விரும்புவோர் மாதிரி விண்ணப்பப்படிவத்தை வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்று பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்தை எதிர்வரும் 6ஆம் திகதிக்கு முன்னர் உரிய முறைப்படி வலயக்கல்வி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு ஆ.ராஜேந்திரன் அறிவித்துள்ளார். (எ)

# இந்தியாவுக்கு எதிராக செயற்பட்டால் கொழும்பு மீண்டும் ஒருமுறை தண்டிக்கப்படும்

## சிங்கப்பூர் பேராசிரியர் எச்சரிக்கை

(கொழும்பு)

இந்தியாவுடன் கொழும்பு முரண்பட்டுக் கொண்டால் ஏனைய நாடுகளுடன் இணைந்து கொழும்பை இந்தியா தண்டிக்கும் என சிங்கப்பூர் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் றொகான் குணரட்ன எச்சரித்துள்ளார்.

இந்தியாவின் பூகோள மற்றும் வெளிவிவகார நலன்களுக்கு எதிராக கொழும்பு அரசியல் நகர்வுகளை மேற்கொள்ளுமானால் கொழும்பை மீண்டும் ஒரு முறை தண்டிக்கவும் இந்தியா தயங்காது எனவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பில் இலங்கை வர்த்தக சம்மேளனத்தில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் தனதுரையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

2009ஆம் ஆண்டில் முடிவுக்கு வந்த 30 ஆண்டு காலப் போரின் ஆரம்ப காலங்களில் தமிழ் தீவிரவாதிகளுக்கு இந்தியா முழு ஆதரவு வழங்கியது.

இத்தகையதொரு சந்தர்ப்பத்தை மீண்டும் இடம்பெற வாய்ப்பை ஏற்படுத்துவோமானால், அதனால் இலங்கை மிகவும் பாதிப்புக்கு உள்ளாகும்.

தென்னாசிய பிராந்தியத்தியத்தில் சீனாவுடன் அதிக நெருக்கத்தை ஏற்படுத்தி இந்தியாவுடன் பகைத்துக் கொள்வது கொழும்புக்கு மிகவும் ஆபத்து நிறைந்தது.

சீனாவுடன் கொழும்பு நெருங்கிய உறவுகளை வளர்த்துக் கொண்டால், இலங்கையை மீண்டும் ஒரு முறை இந்தியா தண்டிக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. இந்தியாவை பகைத்துக் கொள்ளாமல் சீனாவிடம் இருந்து இலங்கை தொடர்ந்தும் பொருளாதார உதவிகளை பெறலாம்.

ஆனால் இந்தியப் புலனாய்வுத்துறையினருக்கு விரோதமாக கொழும்பு நடந்து கொள்வதாக இந்தியா கருதினால் 1980களில் தமிழ்த் தீவிரவாதிகளுக்கு ஆயுதப் பயிற்சிகளை வழங்கியது போன்று மீண்டும் ஒருமுறை இந்தியா ஆயுதப் பயிற்சிகளை வழங்கும்.

ஆயுதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலங்களில் தமிழ்த் தீவிரவாதிகள் தென்னிந்தியாவில் இருந்து வந்தே தாக்குதல்களை மேற்கொண்ட போது, கொழும்பின் அரசியல் தலைவர்கள் பலரும் மேற்கத்தேய நாடுகளைச் சார்ந்து நின்றனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரின் இறுதிக்கட்டத்தில் மேற்கத்தேய நாடுகள் போரை நிறுத்துமாறு கொழும்புக்கு அழுத்தம் கொடுத்த போது, இந்தியா வழங்கிய ஆதரவு முக்கியத்துவம் வாய்ந்தது.

அப்போது தமிழீழ விடுதலைப் புலிகளுடனான போரை தடுத்து நிறுத்தக் கூடிய ஆற்றல் பெற்ற ஒரே நாடாக இந்தியாவே இருந்தது. இலங்கை அரசாங்கம் இந்தியாவுடன் கொண்டிருந்த நெருங்கிய உறவுகள் காரணமாக போரை நிறுத்துவதற்கான முயற்சிகளை அந் நாடு மேற்கொள்ள வில்லை.

இந் நிலையில் இந்தியாவுடன் கொழும்பு முரண்பட்டுக் கொண்டால் ஏனைய நாடுகளுடன் இணைந்து கொழும்பை இந்தியா தண்டிக்கும் என பேராசிரியர் றொகான் குணரட்ன தனது உரையில் எச்சரிக்கை விடுத்துள்ளார். (ச-5)

## யாழ்.ஆயுள்வேத பாதுகாப்புச் சபை விசேட கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஆயுள்வேத பாதுகாப்புச் சபையின் பொதுச் சபைக் கூட்டத்தின் தீர்மானப்படி விசேட பொதுக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை யாழ்.பிரதேச செயலக மண்டபத்தில் பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெறும்.

இதில் யாழ். பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட சித்த ஆயுள்வேத வைத்தியர்கள், பரம் பரைவைத்தியர்கள், சோதிடர்கள், மாந்திரிகர்கள் போன்ற வைத்திய சம்பந்தப்பட்டவர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு செயலாளர் அறிவித்துள்ளார். (எ)

## நெல்லியடி ம.மகாவித்தியாலயம் தேசிய மட்டத்தில் முதலிடம்

(கரவெட்டி)

வளர்ந்துவரும் சரணர் சமூகம் என்னும் தொனிப்பொருளில் பாடசாலை ஆண், பெண் சாரணர் அமைப்பு மற்றும் அவற்றின் செயற்பாடுகள் பற்றிய தேசிய மட்டத்திலான மதிப்பீட்டில் யா / நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் முதலாமிடத்தினைப் பெற்றுக் கொண்டது.

இவர்களுக்கான விருது வழங்கும் வைபவம் நாளை சனிக்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு சாரணர் தலைமைச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன மாணவ அணியினருக்கு விருது வழங்கி கௌரவிக்கவுள்ளார். (ஸ்ரீ-24)

## சமூக விஞ்ஞானப் போட்டி பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

வலயமட்ட சமூகவிஞ்ஞானப் போட்டி தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது. போட்டி நடைபெறும் தினம் பின்னர் அறிவிக்கப்படும் என வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன் அறிவித்துள்ளார்.

இப்போட்டி நாளை நடைபெறவிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ)

**காணி விற்பனைக்கு**

மீசாலை டச்சு வீதி, கேணியடி சந்தியில் விக்னேஸ்வரா பாடசாலைக்கு அருகில் 20 பரப்பு காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு. பகுதியாகவும் கொடுக்கப்படும்.
தொடர்புக்கு :-
0772261690

**மனோதத்துவ வைத்தியம்**
(General Psychotheraphy)
பிரபல மனோதத்துவ நிபுணர்
**Dr.P.ஆறுமுகம்**
T.P.: 0719315664 , 0777569205
**மீண்டும் யாழில்**
**28.05.2011 முதல் 03.06.2011 வரை உடன் பதிவுகளை மேற்கொள்ளவும். பதிவுக் கட்டணம் ரூபா: 300/-**

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு.ஆஸ்துமா, மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளைபடுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல் முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு ,கல்வியில் நாட்டம் குன்றிப் பயம்,நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோ தத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர்.

கமால் ஸூரிஸ் இன் (சிவதர்சன் எலெக்ரிக்கல்ஸ் அருகில்)
வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோவிலுக்குமிடையில்,
392, மணிக்கூட்டு கோபுர வீதி,யாழ்ப்பாணம்.
(C-3277)

**சகல பாடசாலை அதிபர்களுக்கும்**

**யாழ் வலயம்**

**துணைநல உள்ளீடு கணக்கறிக்கை QUANTITY INPUT**

மேற்படி கணக்கில் 30.05.2011 இல் நிலுவையாக உள்ள மீதியின் விபரத்தையும், ஏப்ரல் அல்லது மே 2011 வங்கி கணக்கிணக்க கூற்றையும் 03.06.2011 இற்கு முன்பதாக யாழ்.வலயக் கல்வி அலுவலக கணக்கு கிளையில் ஒப்படைக்குமாறு யாழ்.வலயக் கல்வி பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அவர்கள் கேட்டுக்கொள்கின்றார்.

**திருமதி அ.வேதநாயகம்**
**வலயக் கல்வி அலுவலகம்**
**யாழ்ப்பாணம்.**

(C-3299)

**காணி விற்பனைக்கு**

தாண்டிக்குளம் வவுனியாவில் A9 வீதியில் இருந்து 200m தூரத்தில் சாந்தசோலை பிரதான வீதியில் ஒரு ஏக்கர் காணி விற்பனைக்குண்டு. ஒரு பரப்பு 5 லட்சம். 4 பரப்பாகவும் பிரித்துக் கொடுக்கலாம்.
தொடர்பு :0244903188/077087911O
◆ உறுதியை நீங்களே காணிக் கச்சேரியில் சரிபார்த்துக் கொள்ளலாம்.
(5010)

ஒரே நாளில் சகல வகையான கைத்தொலைபேசிகளையும் நீங்களே திருத்துவதற்கான சுய தொழில்வாய்ப்புடன் கூடிய
பயிற்சிக் கருத்தரங்கு
**Mobile Phone software & Hardware Repair**
பயிற்சிக் கட்டணம்: 3000/- மட்டுமே
காலம் : 29.05.2011 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம் : மு.ப. 10.30
இடம் : UNI - ICT Campus, No.83, Palaly Road, Kantharmadam, Jaffna.
Free Note & CD
(48,21,24)

முக்கிய குறிப்பு:
சகல வகையான கைத்தொலைபேசிகளையும் நீங்களே திருத்துவதற்கான இப் பயிற்சிக் கருத்தரங்கில் 16 வயதுக்கு மேற்பட்ட ஆர்வமுள்ள ஆண், பெண் இருபாலாரும் பங்குபற்றலாம். பங்கு பற்றும் அனைவருக்கும் போதிய விளக்கங்களும் பயிற்சியும் அன்றைய தினம் வழங்கப்படும். இக்கருத்தரங்கில் பங்குபற்றுவதன் மூலம் நீங்களே உங்கள் கைத்தொலைபேசிகளைத் திருத்திக்கொள்ளவும். மேலும் Phone Shop ஒன்றை ஆரம்பிக்கவும் உங்களுக்கு பயனுள்ளதாக அமையும். எனவே ஆர்வமுள்ள அனைவரும் தவறாது கலந்துகொண்டு பயன்பெறவும்.
இந்தக் கருத்தரங்கில் பங்குபற்ற விரும்புவோர் 29.05.2011 ஆம் திகதிக்கு முன்னர் எமது நிறுவனத்திற்கு நேரடியாக வருகைதந்து பயிற்சி நெறிக் கட்டணமான ரூபா 3000/- செலுத்தி உங்கள் வரவினை உறுதிப்படுத்தல் வேண்டும்.
மேலதிக விபரங்களுக்கு: 021 321 6433/ 0777110862

# இன்று ஒரு தகவல்

## தாவும் மனிதர்கள்

உண்மையும் நேர்மையும்தான் வாழ்க்கையில் உண்மையான உயர்வு பெறுவதற்கான வழிகள். அதை விட்டுவிட்டு உட்கார்ந்த இடத்தில் இருந்து கொண்டே, உயரத்திற்குப் போக வேண்டும் என்று வீணான கற்பனைகளில் ஈடுபடக் கூடாது.

இரண்டாவதாக ''செய்யும் தொழிலே தெய்வம்'' என்ற உண்மையைப் புரிந்து கொண்டு அதற்கேற்ப நாம் வாழ வேண்டும். நாம் எந்தத் தொழிலைச் செய்தாலும் நாம் அதன் பெருமையை உணர்ந்து பாடுபடவேண்டும்.

அதை விட்டு விட்டு ''என்ன பிழைப்பு சேர். இது... இந்தத் தொழிலை மனுஷன் செய்வானா?'' என்றெல்லாம் சொல்லிக் கொண்டு அந்தத் தொழிலையே செய்து கொண்டிருப்பவர்கள் பலபேர் உண்டு. இந்தக் கருத்துக்குப் பொருத்தமான கதை ஒன்றை நாம் இப்போது பார்க்கலாம்.

ஒரு பெரிய மலைப்பகுதி. அந்த மலை அடிவாரத்தில் சிற்பி ஒருவன் சிலை வடித்துக் கொண்டிருந்தான். அவன் தன் கையில் ஒரு சிறிய உளியை வைத்துக் கொண்டும் ஒரு பெரிய கருங்கல் பாறையைக் கொஞ்சம் கொஞ்சமாக உடைத்துக் கொண்டிருந்தான்.

சிற்பம் செய்வது என்பது எப்படிப்பட்ட உயர்ந்த தொழில்... எல்லோராலும் அது முடியுமா?

அப்படியிருந்தும் அந்தச் சிற்பிக்கு மனநிறைவு இல்லை. வெயிலில் உட்கார்ந்து வேலை செய்வது அவனுக்கு கஷ்டமாக இருந்தது. ''சிற்பியாக நாம் இருப்பதால் தானே சூரியன் கடுமையான வெயிலை நம்மீது வீசகிறான்? நாமே அந்தச் சூரியனாக இருந்து விட்டால் நமக்கு இந்தக் கஷ்டம் இருக்காதே! நம்மைக் கஷ்டப்படுத்துபவன் நம்மைவிட வலிமை உள்ளவன். அதனால் நாம் அவனாகவே மாறிவிடுவது நல்லது'' என்று நினைத்தான் சிற்பி. உடனே அவனது எண்ணம் நிறைவேறியது.

இயற்கை அந்தச் சிற்பியை ஒரு சூரியனாக மாற்றி விட்டது. சிற்பி இப்போது சூரியனாக மாறிவிட்டான்.

அவன் ''இனிமேல் இந்த உலகத்தில் நம்மை விட வலிமை உள்ளவன் வேறு யாரும் கிடையாது!'' என்று நினைத்து மகிழ்ச்சியாக இருந்தான்.

இந்த நேரத்தில் கரிய மேகங்கள் அந்தப் பக்கமாக நகர்ந்து வந்தன... அவை கூட்டமாக வந்து சூரியனை மறைத்துக் கொண்டன.

இப்போது சூரியனாக இருந்த ''சிற்பி என்ன இது என்னையே இந்த மேகம் மூடி மறைக்கிறதென்றால் இது என்னைவிடப் பெரிய ஆளாகத்தான் இருக்க வேண்டும்... எனவே இனி நாம் சூரியனாக இருக்க வேண்டாம். மேகமாகத்தான் இருக்க வேண்டும்'' என்று நினைத்தான்.

உடனே இயற்கை அவனது எண்ணப்படியே அவனை மேகமாக மாற்றி விட்டது. இப்போது மேகமாக மாறிய அவன் வான வீதியில் ஜாலியாக உலா வந்து கொண்டிருந்தான். எதிரே பெரிய பெரிய மலைகள் ... உயர உயரமாக இருந்த அவை மேகம் செல்லும் வழியை அடைத்துக் கொண்டிருந்தன.

மேகம் வேகமாக சென்று மலையில் முட்டிக் கொண்டது. அதனால் மேகத்தால் மலையைத் தாண்டிச் செல்ல முடியவில்லை. இப்போது அந்த மேகம் , ''நாம் எந்தத்தடையும் இல்லாமல் அந்தரத்தில் மிதந்து வருகிறோம். நம்மையே போக விடாமல் இந்த மலை தடுக்கிறது என்றால் அதற்கு எப்படிப்பட்ட வலிமை இருக்கவேண்டும்.. இனிமேல் நாம் மேகமாய் இருந்தும் பயனில்லை! நாம் இனிமேல் மலையாகத் தான் இருக்க வேண்டும்! அதுதான் பெருமை!'' என்று அது நினைத்தது.

உடனே மேகமாக இருந்த சிற்பி மலையாக மாறி விட்டான். பெரிய மலை! பூமிக்கும் வானத்திற்குமாக நின்றது. ''இனிமேல் நமக்கு எந்த ஒரு கஷ்டமும் இல்லை'' என்று மலை நினைத்தது.

இப்படி நினைத்துக் கொண்டிருக்கும் போதே கீழே ஏதோ சத்தம் கேட்டது... மலை கீழே குனிந்து பார்த்தது. மலை அடிவாரத்தில் சிற்பி ஒருவன் உட்கார்ந்து உளியால் அதை செதுக்கிக் கொண்டிருந்தான். அவன் ஏதோ ஒரு சிற்பம் செய்து கொண்டிருந்தான். இப்போது அந்த மலை சிந்தித்தது: ''மலையையே ஒருவன் உடைக்கிறான் என்றால், அவன் எப்படிப்பட்ட வலிமையுடையவனாக இருக்கவேண்டும்? இனிமேல் நாம் மலையாய் இருந்து ஒரு பிரயோசனமும் இல்லை; மனிதனாக மாற வேண்டும்'' என்று மலை நினைத்தது.

உடனே மலை மனிதனாக மாறியது. மறுபடியும் ஓர் உளியை வைத்துக்கொண்டு பழையபடியே அந்தச்சிற்பி பாறையை இப்போது செதுக்கிக்கொண்டிருந்தான்.

இந்தக் கதையிலிருந்து என்ன தெரிகிறது என்றால், ''தன்னுடைய உண்மையான பலம் என்ன என்பது தெரியாமலேயே மனிதன் தாவித்தாவி தடுமாறி கொண்டிருக்கிறான்'' என்பது தான். இந்த உண்மையை இனிமேலாவது நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# நல்லூர் பிரதேச செயலக கலாசார பேரவை நடத்தும் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலக கலாசாரப் பேரவையானது தனது பிரதேச பிரிவுக்குட்பட்ட பாடசாலை, மன்றங்கள், பொது நபர்களுக்கான நடன, நாடக, இசை,பேச்சு ஆகிய போட்டிகளை நடாத்தவுள்ளது.

இதில் சகல போட்டிகளும் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதற்கமைய கனிஷ்ட, மத்திய, விசேட பிரிவு போட்டிகள் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கும் கனிஷ்ட,சிரேஷ்ட பிரிவு- தனிப் பாடல் மற்றும் கனிஷ்ட,சிரேஷ்ட பிரிவு- குழுப்பாடல்கள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கும் நடைபெறவுள்ளது.

அத்துடன் கனிஷ்ட,சிரேஷ்ட பிரிவு- தனி நடனப் போட்டிகள் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கும் குழு நடனம் மற்றும் கிராமிய நடனப் போட்டிகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கும் நடைபெற வுள்ளது.

நாடகப் போட்டியில் சிந்து நடனக் கூத்துப் போட்டியானது எதிர்வரும் ஜூன் மாதம் 4ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கும் சமூக நவீன நாடகப் போட்டியானது எதிர்வரும் ஜூன் மாதம் 4 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கும் நடைபெற வுள்ளது.

பாடசாலை மட்ட நாடகப் போட்டியானது எதிர்வரும் ஜூன் மாதம் 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம் பெறவுள்ளது.

அத்துடன் இசை நாடகப் போட்டியானது எதிர்வரும் ஜூன் மாதம் 5ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கும் வட மோடி நாட்டுக் கூத்தானது எதிர் வரும் ஜூன் மாதம் 5 ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை காலை 11 மணிக்கும் இடம் பெறுமென நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் அறிவித்துள்ளார்.

(ஸ்ரீ-2)

# இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான துடுப்பாட்ட இறுதிப்போட்டி

இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கிடையிலான துடுப்பாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டி நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் கொழும்பு பல்கலைக்கழகமும் சிறிஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகமும் பங்குபற்றுகின்றன.

இந்நிகழ்வில் கௌரவ விருந்தினராக யாழ். பல்கலைக்கழக விளையாட்டு ஆலோசனைச் சபை தலைவர் கலாநிதி எஸ்.என் சுரேந்திரன் கலந்து கொண்டு போட்டியினை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

மேற்படி போட்டியைக் கண்டுகளிப்பதற்கு துடுப்பாட்ட ஆர்வலர்கள் அனைவரையும் பங்கேற்குமாறு யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவை கேட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 60 | 70 |
| உருளைக்கிழங்கு | 75 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 70 | 60 | 90 |
| தக்காளி | 50 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 40 |
| கோவா | 80 | 80 | 70 |
| கரட் | 80 | 100 | 90 |
| பூசணி | 25 | 40 | 30 |
| புடோல் | 40 | 40 | 60 |
| வாழைக்காய் | 25 | 30 | 30 |
| சின்ன வெங்காயம் | 140 | 120 | 130 |
| பெரிய வெங்காயம் | 60 | 50 | 50 |
| பாகற்காய் | 70 | 100 | 90 |
| வெண்டிக்காய் | 40 | 60 | 70 |
| கருணைக் கிழங்கு | - | 80 | - |
| பயற்றங்காய் | 10-20 | 40 | 80 |
| லீக்ஸ் | 70 | 60 | 70 |
| பீற்றூட் | 60 | 80 | 60 |
| கறிமிளகாய் | 100 | 60 | 90 |
| முருங்கைக்காய் | 300 | 400 | 300 |
| போஞ்சி | - | 80 | 90 |
| கத்தரிதம்புள்ள | - | 40 | 40 |
| கீரை - 1 பிடி | 10-12 | 30 | 30 |
| தேசிக்காய் | 150 | 130 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 30-50 | 50 | 50 |

# இராசி பலன்

27.05.2011
(வைகாசி 13,வெள்ளிக்கிழமை)
சூரியஉதயம் காலை 5.53 மணிக்கு
தசமி முன்னிரவு 7.50மணிவரை
உத்தரட்டாதி பின்னிரவு 5.21 மணிவரை
இராகுகாலம் 10.22-11.52 மணிவரை
சுபநேரம் 5.52-7.22 மணிவரை
சித்தாமிர்தம்

**மேடம்** விநாயகர் வழிபாட்டால் சந்தோசம் காணவேண்டிய நாள், தொழில் நலன்கருதி வெளியூர் பயணமொன்றை மேற்கொள்ளும் சூழ்நிலை அமையலாம்.

**இடபம்** ஒளிமயமான வாழ்வுக்கு வழி சமைக்கும் நாள், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும், புதிய தகவல்கள் வந்து சேரும்.

**மிதுனம்** தொட்ட காரியம் வெற்றி பெறும் நாள்,அரசு வழி அனுகூலமுண்டு, புதிய தொழில் தொடங்க திட்டம் தீட்டுவீர்கள், தூரதேசச் செய்திகள் வந்து சேரலாம்.

**கடகம்** முன்னேற்றம் காண்பதற்கு முயற்சி எடுக்கும் நாள், மங்கையரால் ஏற்பட்ட மனக்கலக்கம் அகலும், உடல் நலம் சீராகும், அதிகாரிகள் அனுசரணையாக நடந்து கொள்வர்.

**சிங்கம்** சஞ்சலம் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், வார்த்தைகளில் நிதானம் தேவை, உடல்நலக் குறைவுண்டு, குடும்பத்தில் சிறு சிறு குழப்பங்கள் தோன்றிமறையும்.

**கன்னி** நண்பர்கள் மூலம் சுப செய்திகள் வந்து சேரலாம், குடும்பத்தில் பந்தபாசங்கள் அதிகரிக்கும், பயணத்தால் பலன் கிடைக்கும், உறவினர் வருகையுண்டு.

**துலாம்** தொழில் வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், சுவாரஸ்யமான நாள், தேகநலன் புத்துணர்வு பெறும், பழைய பாக்கிகள் வசூலாகலாம்.

**விருச்சிகம்** பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, பிள்ளைகளால் பெருமை சேரும், இன்பங்கள் இல்லம் தேடி வரலாம், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**தனுசு** திட்டமிட்ட காரியங்கள் திட்டமிட்டபடியே நடைபெறும், வாகன சுகமுண்டு, பெற்றோர் நலனில் அக்கறை காட்டுவீர்கள், உத்தியோக நன்மையுண்டு.

**மகரம்** விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும் நாள், குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும், அன்பு நண்பர்களின் ஆதரவு கூடும், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கும்பம்** நன்மைகள் நடைபெறும் நாள், குடுப்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், வாக்கு மேன்மையுண்டு.

**மீனம்** கணபதி வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், பொருளாதார நலன் கருதி பயணமொன்றை மேற்கொள்வீர்கள், தடைப்பட்ட காரியம் நடைபெறலாம்.

வளவன்

# நுகர்வோர் அதிகார சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள தீர்மானம்

(கொழும்பு)

அனுமதியின்றி விலை உயர்த்தப்படும் பொருட்களை மீண்டும் பழைய விலைக்கு கொண்டு வரும் வகையில் நுகர்வோர் அதிகார சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

குறித்த திருத்தங்கள் அடங்கிய சட்ட மூலம் தயாரிக்கப்பட்டு வருவதாக நுகர்வோர் அதிகாரசபையின் தலைவர் ரூமி மர்ஸுக் தெரிவித்துள்ளார்.

இந்த சட்டமூலம் தற்போது சட்டமா அதிபர் திணைக்களத்தினால் நெறிப்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

புதிய திருத்தம் விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

நுகர்வோர் அதிகார சபையின் அனுமதியின்றி பல்வேறு நிறுவனங்களினால் பொருட்களின் விலைகள் உயர்த்தப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

புதிய திருத்தத்தின் ஊடாக பொருட்களின் விலை உயர்வுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் நுகர்வோர் விவகார அதிகார சபையிடம் காணப்படும் என அதன் தலைவர் மேலும் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

# திருமலைக்கு அழைத்து செல்லப்பட்டு கைவிடப்பட்ட தாய்மார்கள் மீட்பு

திருகோணமலை பிரதேசத்துக்கு தமது பிள்ளைகளால் அழைத்துச் செல்லப்பட்டு கைவிடப்பட்ட இருதாய்மாரை மீட்டுள்ள திருமலை துறைமுக பொலிஸார் அவர்களை திருகோணமலை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

இவ்வாறு கைவிடப்பட்டவர்களில் ஒருவர் பத்தரமுல்ல பகுதியைச் சேர்ந்த 64 வயதான பெண்ணாவார். அவரின் மகன் திருகோணமலைக்கு அவரை அழைத்து வந்து பஸ் நிலையமொன்றுக்கு அருகில் கைவிட்டுச் சென்றுள்ளார் என பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

தனது மகன் ஒரு பொறியியலாளர் என தெரிவித்த அந்தத்தாய் தனது மகனின் முகவரி உள்ளிட்ட மேலதிக தகவல்களைக் கொடுக்க மறுத்து வருவதாக துறைமுக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இருப்பினும் தனது மகனுக்கு தான் சுமையாக இருக்க விரும்பவில்லை என்று தெரிவிக்கும் அவர் தன்னை ஒரு முதியோர் இல்லத்தில் விட்டுவிடும்படி கோரிக்கை விடுத்து வருவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, திருகோணமலை வைத்தியசாலைக்கு அருகாமையில் கைவிடப்பட்ட நிலையில் மற்றொரு தாய் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

கண்பார்வை குறைவான இவர் தனக்கு நான்கு மகன்மார் உள்ளதாகவும் அதில் ஒருவர் வெளிநாட்டில் தொழில் செய்வதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இவரும் தான் முதியோர் இல்லத்தில் வாழ விரும்புவதாக பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். திருகோணமலை துறைமுக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஸ்ரீ-2)

# இலங்கை-இந்திய நட்புறவை சீர்குலைக்க ஜே.வி.பி. முயற்சி

## ஆளும் கட்சியின் பிரதம கொறடா குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையிலான நெருங்கிய நட்புறவைப் பலப்படுத்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நடவடிக்கை எடுத்துள்ள வேளையில் இந்த நட்புறவைச் சீர்குலைக்கும் செயற்பாடுகளையே ஜே.வி.பி. மேற்கொள்வதாக ஆளும் கட்சியின் பிரதம கொறடா தினேஷ் குணவர்த்தன நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் ஜே.வி.பி. எம்.பி. அநுரகுமார திசாநாயக்க இலங்கை-இந்திய வெளிநாட்டமைச்சர்களின் அண்மைய கூட்டறிக்கை தொடர்பான விசேட அறிக்கையொன்றை முன்வைத்தார்.

இது தொடர்பில் அவர் உரையாற்றுகையில்,

இவ்வறிக்கையானது இலங்கையின் இறைமை-பாதுகாப்பு-பொருளாதார நடவடிக்கைகளில் இந்தியா தலையீடு செய்வதையே காட்டுகிறது எனவும் இதற்கு ஒரு போதும் இடமளிக்கக்கூடாது எனவும் குறிப்பிட்டார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் தினேஷ் குணவர்த்தன, வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தற்போது வெளிநாட்டு விஜயமொன்றில் ஈடுபட்டுள்ளதால் அவர் நாடு திரும்பியதும் அநுரகுமார திசாநாயக்கவின் கேள்விகளுக்கு அவர் விரிவான பதிலளிப்பார் எனவும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# எண்மிய நூலக ஒன்றுகூடல் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

நூலக நிறுவனத்தின் ஏற்பாட்டில் மாதாந்தம் எண்மிய நூலக ஒன்றுகூடல் நிகழ்வு பிரதி மாதமும் இறுதி ஞாயிற்றுக்கிழமைகளில் இடம்பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாண்டு மே மாதத்திற்கான எண்மிய நூலக மாதாந்த ஒன்றுகூடல் நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணி முதல் 6 மணி வரை இல. 106, 4ஆம் குறுக்குத்தெருவில் அமைந்துள்ள அகதிகள் புனர்வாழ்வு நிறுவனக் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.


பேராசிரியர் இரா.சிவசந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறை விரிவுரையாளரும் இலக்கிய விமர்சகருமான பாக்கியநாதன் அகிலன் **காத்தலும் பேணுதலும் இலங்கையில் மரபுரிமைகள்** எனும் தலைப்பில் சிறப்புரையாற்றவுள்ளார்.


எண்மிய நூலகத்தை பயன்படுத்தும் வழிமுறைகள், அதனால் பெறக்கூடிய பயன் பற்றி யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறை விரிவுரையாளர் செல்வி கோசலை மனோகரன் பயனாளர் உரை ஆற்றவுள்ளார்.

அதனைத் தொடர்ந்து புதிய நூலகம் செய்திமடல் இலக்கம் 5 இன் வெளியீடு இடம்பெறவுள்ளது.


எனவே, இந்நிகழ்விற்கு ஆசிரியர்கள், மாணவர்கள், ஆர்வலர்கள் ஆகியோர் சமுகமளித்து பயன்பெறும்படி ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொள்கின்றனர். (ஸ்ரீ-2)

# உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி 2011 வினா-விடைப் போட்டி பரிசளிப்பு விழா









MCS நிறுவன இயக்குநர் - எஸ்.சிவாஸ்கரன் பிரதம விருந்தினருடன் இணைந்து தினமொரு கேள்விக்கான பரிசுக் கூப்பனை வழங்குவதையும், பரிசுக் கூப்பனை வென்றவர்கள் விருந்தினர்களுடன் காணப்படுவதையும் படங்களில் காணலாம்.

தொடரும்...

# போர் வெற்றிவிழாவையொட்டி காலி முகத்திடல் மூடப்படுகின்றது

போர் வெற்றி விழா நிகழ்வுகள் முடிவடையும் வரை காலி முகத்திடல் மூடப்படுவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காலி முகத்திடலில் முப்படையினரின் ஒத்திகைகள் இடம் பெறவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சகருமான பிரஷாந்த ஜயகொடி கூறினார்.

குறிப்பாக காலி முகத்திடலில் முப்படையினரின் வாகனங்கள் நிறுத்தப்படுவதாலும் யுத்த உபகரணங்கள் வைக்கப்படுவதாலும் நேற்று காலை முதல் இன் றைய நிகழ்வுகள் முடிவடையும் வரை அந்த பிரதே சத்திற்குள் பொதுமக்கள் பிரவேசிக்க அனுமதி வழங்கப்படமாட்டாது என அவர் குறிப்பிட்டார்.

வெற்றி விழா நிகழ்வுகளின் ஒத்திகைகள் காரண மாக விசேட வாகனப் போக்குவரத்து திட்டம் ஒன்றும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சுட்டிக்காட்டினார்.

இதன் பிரகாரம் காலி வீதியூடாக கொழும்பிற்குள் பிரவேசிக்கும் சகல கனரக வாகனங்களும் கொள்ளுப் பிட்டி சந்தியால் வலப்புறமாக திரும்பி பித்தளை சந்தியால் பயணிப்பதற்கு வசதிகள் செய்து கொடுக்கப் பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அதேபோன்று காலி வீதியூடாக கொழும்பிற்குள் நுழைகின்ற சகல இலகுரக வாகனங்களும் கொள்ளுப் பிட்டி சந்தியால் வலப்புறமாக மாக்கான் மாக்கார் வீதியால் கொம்பனித் தெரு ஊடாக பயணிப்பதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் கூறினார். (ஸ்ரீ-2)

# காலநிலையில் திடீர் மாற்றம்; அங்கொடையில் அதிக மழை

காலநிலையில் நேற்று முன்தினம் முதல் திடீரென மாற்றம் ஏற்பட்டிருப்பதாக வானிலை அவதான நிலையத்தின் வானிலையாளர் கயனா ஹெந்த விதாரண தெரிவித்தார்.

காலநிலையில் ஏற்பட்டிருக்கும் திடீர் மாற்றத்தின் காரணமாகவே குறுகியகால நேரத்தில் கனத்த மழை பெய்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

நேற்று முன்தினம் காலை 8.30 மணியுடன் முடிவுற்ற 24 மணிநேர மழைவீழ்ச்சிப் பதிவுப்படி ஆகக்கூடிய மழை அங்கொடையில் 113.5 மில்லிமீற்றர்களாகப் பதிவாகியுள்ளதெனவும் அவர் குறிப்பிட்டார்.

தென்மேல் பருவப்பெயர்ச்சி மழைக்காலம் ஆரம்பமாவதற்கு முன்னர் காலநிலையில் இவ்வாறு திடீர் மாற்றங்கள் ஏற்படுவது வழமை எனவும் அவர் கூறினார்.

இதன் விளைவாக மேற்கு கடற்பரப்பிலும் சிறிய கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

## குழுக்கூட்டம்

(குருநகர்)

யாழ்.பிரதேச மீன்பிடி, விவசாயம், சிறு கைத்தொழில் தொடர்பான குழுக்கூட்டம் எதிர்வரும் 31 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்குழுவில் அங்கம் வகிக்கும் அனைவரையும் சமூகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். (ஸ்ரீ-39)

## ஏழாலை புனித இசிதோர் ஆலயத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

ஏழாலை புனித இசிதோர் ஆலயத் திரு விழாவின் திருநாள் திருப்பலி நாளை மறு தினம் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளதாக பங்குத் தந்தை அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## நடமாடும் சேவை

(அச்சுவேலி)

வலிகாமம் கிழக்கு ஆயுர்வேத பாதுகாப்புச் சபையின் நடமாடும் சேவை நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை நீர்வேலி தெற்கு றோமன் கத்தோலிக்க பாடசாலையில் நடைபெறவுள்ளது. இந்நடமாடும் சேவையில் பொதுமக்கள் கலந்துகொண்டு வைத்திய சேவையினையும் மருந்துகளையும் சிகிச்சைகளையும் பெற்றுக் கொள்ள முடியுமென ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-70)


குருவருள் சிறக்க வாழ்த்துகின்றோம்



எமது பிரதேசத்தில் குருக்களாக 27/05/2011
சிவாச்சார்யாபிஷேகம் நிகழ்த்தப் பெறும்
பிரம்மஸ்ரீ நடராஜசர்மா பிரசாந்தசர்மா
(சிவநெறிச்செம்மல் , சிவானு பூதி)
அவர்கள் பல்வேறு கலைகளைக் கற்று வேதாகம
விற்பன்னராகத் திகழ எல்லாம்வல்ல கண்ணகாம்பிகா
சமேத கண்ணலிங்கேஸ்வரப் பெருமானையும், கண்ண
காம்பிகையையும் வேண்டி வாழ்த்துகின்றோம்.
"அன்னையின் அருள் மகத்தானது"

கண்ணலிங்கேஸ்வரர் ஆலயம்,
கண்ணகியம்மன் ஆலயம்.
வட்டுக்கோட்டை.

சிவாச்சார்யாபிஷேகம்
சிறப்புற வாழ்த்தும்:-
பரிபாலன சபையும்,
தொண்டர் சபையும்.

(சி-3293)



# kalaimagal International College

## ஆங்கில மொழி மூல ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, கொக்குவில்

எமது கலைமகள் சர்வதேசக் கல்லூரியின் ஆசிரியர் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் எம்மால் நிர்வகிக்கப்படும் கலைமகள் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் இணைந்து ஒருவருட கற்கை நெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்தவர்கள் தற்போது எமது சர்வதேச பாடசாலையில் ஆசிரியராகப் பணியாற்றுகிறார்கள் என்பதைப் பெருமையுடன் அறியத் தருகின்றோம்.

எமது கல்லூரியின் 2 ஆம் தொகுதி மாணவர்கள் ஜூன் மாதத்துடன் அவர்களது கற்கை நெறியை வெற்றிகரமாக முடித்து எமது ஆசிரியர் குழாமுடன் இணைகிறார்கள். எமது தேவை சுமார் 300 க்கு மேற்பட்ட ஆசிரியர்கள் என்பதால் 4 ஆம் தொகுதி மாணவர்களுக்கான நேர்முகத்தேர்வு 29.05.2011 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் நடைபெறவுள்ளதால் ஆற்றலும் தகுதியும் உடைய மாணவர்கள் நேர்முகத் தேர்விற்கு உங்களுடைய ஆவணங்களுடன் நேரில் சமுகம் தரவும்.



தகுதி:-

1. க.பொ.த (உ/த)த்தில் சித்தி எய்தியவராக இருக்கவேண்டும்.
2. க.பொ.த (சா/த)த்தில் அல்லது (உ/த) இல் ஆங்கிலப்பாடத்தில் சித்தியடைந்தவராக இருக்கவேண்டும்.
3. 2011 இல் 30 வயதுக்கு மேற்படாதவராக இருக்க வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு:-

kalaimagal International College
Church Lane, Kulappiti Junction,Kokuvil.
தொ.பே: 0778834592, 0774904286






பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் நிதியுதவியுடன் கற்கோவளம் கிராம சேவை செயலகம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. இதில் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் டபிள்யூ.டி.ஜோன் செனவிரத்ன பெயர்ப்பலகையை திரைநீக்கம் செய்து வைப்பதனையும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, பொது நிர்வாக உள்நாட்டமைச்சின் செயலாளர் பி.அபயகோன் ஆகியோர் உரையாற்றுவதனையும் படங்களில் காணலாம்.

*(படங்கள்: அலுவலகச் செய்தியாளர்)*

## பசுப்பால் விநியோகம் தொடர்பான கலந்துரையாடல்

(அச்சுவேலி)

வலி.கிழக்கு பிரதேச முன்பள்ளிகளுக்கு வழங்கப்பட்டு வரும் தூய பசுப்பால் விநியோகத்தினை மேலும் சிறப்பாகச் செய்வதற்கு அப்பிரதேச முன்பள்ளி ஆசிரியர்கள், கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், செயலக முன்பிள்ளைப் பருவ உத்தியோகத்தர்கள் ஆகியோருடனான கலந்துரையாடல் கடந்த 25ஆம் திகதி அன்று ம.பிரதீபன் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் முன்பள்ளி ஆசிரியர்கள் பால் விநியோகத்தின்போது எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டு அதனை நிவர்த்தி செய்யும் நடவடிக்கைகள் எடுக்கப்படுமென பிரதேச செயலர் உறுதியளித்தார். (ஸ்ரீ-70)

## குணமாக்கல் வழிபாடு

(குருநகர்)

புனித யாகப்பர் ஆலய 150ஆவது வருட யூபிலியை முன்னிட்டு "கிறிஸ்துவில் மீண்டும் எழுவோம்" என்ற தொனிப்பொருளில் நடைபெற்று வரும் ஆராதனைகள் வரிசையில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு அமலமரித் தியாகிகள் அருட்பணியாளர்களால் குணமாக்கல் வழிபாடு குருநகரில் அமைந்துள்ள ஜெற்றி முன்றலில் நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-39)

## குழு விளையாட்டுக்கள்

(துனங்கிளப்பு)

பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்குட்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையில் இளைஞர் சேவை மன்றத்தினால் நடாத்தப்படும் வருடாந்த விளையாட்டுப்போட்டியில் கரப்பந்தாட்டம், மென்பந்தாட்டம், ஆண், பெண்களுக்கான விளையாட்டுக்கள் என்பன நாளையும் நாளை மறுதினமும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இதில் பதிவுசெய்யப்பட்ட இளைஞர் கழகங்களை தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. (ஸ்ரீ-37)

## மாணவத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் விழா

(அல்வாய்)

யாழ்ப்பாணம் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய சிரேஷ்ட மாணவத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் விழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் கல்லூரி அதிபர் செ.சேதுராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கரவெட்டி கோட்டக் கல்வி அதிகாரி சி.நற்குணலிங்கம் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ஸ்ரீ-19-24)

# வீதியை புனரமைத்து தருமாறு கோரிக்கை

(வல்வெட்டித்துறை)

பருத்தித்துறை மெதடிஸ்த பாடசாலையிலிருந்து காங்கேசன்துறை வரை செல்லும் பிரதான வீதி குன்றும் குழியுமாகச் சேதமடைந்து காணப்படுகின்றது.

அத்துடன் மெதடிஸ்த பாடசாலையிலிருந்து காங்கேசன்துறை நோக்கிச் செல்லும் கடற்கரை வீதியில் கடற்கரையோரமாக பாதுகாப்புத் தூண்கள் அற்ற நிலை காணப்படுகின்றது.

குறித்த வீதியால் இரவு வேளைகளில் சாதாரணமாக துவிச்சக்கர வண்டிகளிலேயே பயணம் செய்ய முடியாதுள்ளதாக பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் வல்வெட்டித்துறை பல்வேறு வீதிகளில் மின்விளக்குகள் இல்லாமையால் இரவு வேளையில் பயணம் செய்வது மிகவும் கடினமாகவுள்ளது.

மேலும் வல்வெட்டித்துறை ஸ்ரீமுருகன் குடியேற்றத்தில் சுமார் 50 குடும்பங்களுக்கு மேல் வசித்து வருகிறார்கள். எனினும் இங்கு போக்குவரத்து வீதி அமைக்கப்பட்டு கொடுக்கப்படவில்லை.

நீண்டகாலமாக சம்பந்தப்பட்டவர்களுக்கு அப்பகுதி வாழ் மக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டும் இது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் விரைவாக நடிவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கேட்டுள்ளனர். (ஸ்ரீ-63)

# ஈழத்துச் சிதம்பரத்தில் மகா கும்பாபிஷேகம்

(காரைநகர்)

காரைநகர் ஈழத்துச் சிதம்பர மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் ஜுன் மாதம் 6ஆம் திகதி நடைபெறவுள்ளது. அதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் யாவும் தற்போது நடைபெற்று வருகின்றன.

இதில் மூல விக்கிரகங்களுக்கான எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு எதிர்வரும் 4ஆம் திகதியும் மறுநாள் 5ஆம் திகதி முதல் விநாயக வழிபாட்டுடன் ஆரம்பித்து 6ஆம் திகதி காலை 6 மணி முதல் 7 மணி வரையான சுபநேரத்தில் கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

மகா கும்பாபிஷேக தினத்தன்று தென்னிந்தியாவிலிருந்து விசேடமாக வரவழைக்கப்பட்ட வேத விற்பன்னர்களின் வேதம் முழங்க விசேட நாதஸ்வர மேள கச்சேரிகளுடன் இந்நிகழ்வு சிறப்பாக நடைபெறும்.

ஜுன் மாதம் 6ஆம் திகதி அதிகாலை முதல் யாழ்.பஸ் நிலையத்திலிருந்து விசேட பஸ் சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடியார்களின் நலன் கருதி விசேட பால் காப்பு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் காரைநகர் மாணிக்கவாசக அன்னதான சபை மற்றும் ஈழத்துச் சிதம்பர அறப்பணி நிலையம் ஆகியன அன்னதான நிகழ்வை நடத்தவுள்ளன. (ஸ்ரீ-246)

# வயல் கிணற்றிலிருந்து 6 அடி நீளமான முதலை மீட்கப்பட்டது

(உடுப்பிட்டி)

உடுப்பிட்டி பகுதியில் கடந்த 24ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வயல் கிணற்றிலிருந்து வயலுக்கு நீர் இறைத்துக்கொண்டிருந்தபோது கிணற்றுக்குள் சுமார் 6 அடி நீளமான முதலை ஒன்று காணப்பட்டது.

இதனைப் பார்ப்பதற்காக பெருமளவிலான மக்கள் அங்கு கூடினர். பார்வையாளர்களுக்காக முதலையினை கிணற்றுக்கு வெளியில் எடுத்துவிட்டிருந்தார்கள்.

வழமையாக முதலை கருமை நிறத்திலேயே காணப்படும். ஆனால் இது இளமஞ்சள் நிறமாகக் காணப்பட்டது.

இந்த முதலை செம்மூக்கன் இனத்தைச் சேர்ந்த முதலை என அங்கு நின்ற பெரியவர் ஒருவர் தெரிவித்தார். (ஸ்ரீ-32)

# கஞ்சா வைத்திருந்த இருவருக்கு தலா 10 ஆயிரம் அபராதம்

(யாழ்ப்பாணம்)

கஞ்சாவைத் தமது உடைமையாக வைத்திருந்தார்கள் என்ற குற்றச்சாட்டின்பேரில் கைது செய்யப்பட்ட இருவருக்கு யாழ்.நீதிவான் நீதிமன்றம் 20 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்துள்ளது.

யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் இருந்தே இந்த நபர்களை யாழ்ப்பாணம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர்கள் தொடர்பாக யாழ்.நீதிவான் நீதிமன்றில் நேற்று பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்ததோடு குறித்த நபர்களையும் மன்றில் ஆஜர்படுத்தினர்.

குறித்த வழக்கை விசாரித்த நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராசா குற்றம் சாட்டப்பட்ட இருவருக்கும் தலா 10 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதித்து தீர்ப்பளித்தார்.

யாழ்.மாவட்டத்தில் இதுபோன்ற குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக பொலிஸாரும் நீதிமன்றமும் கடுமையாக நடவடிக்கை எடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-6)

## ஆசிரியர் சந்திப்பும் வழிகாட்டலும்

(சாவகச்சேரி)

வடக்கு மாகாண கல்வி அமைச்சினால் ஆரம்பக் கல்வி மாணவர்களுக்கு நடாத்தப்படவுள்ள சித்திரப் போட்டிகளுக்கான ஆசிரியர் சந்திப்பும் வழிகாட்டலும் தென்மராட்சி பிரதேச பாடசாலை ஆசிரியர்களுக்கு தென்மராட்சி வலயக் கல்வி அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

தரம் 4இல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சந்திப்பு எதிர்வரும் 31ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும் தரம் 5இல் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சந்திப்பு ஜுன் மாதம் 2ஆம் திகதி வியாழக்கிழமையும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-29)

## ஈஸ்ரர் விழா

(அல்வாய்)

பருத்தித்துறை மெதடிஸ்த உயர்தரப் பெண்கள் பாடசாலையில் இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு ஈஸ்ரர் விழா நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு கிறிஸ்தவ மாணவர் மன்றத் தலைவி செல்வி இனித்தா மரிய எட்மன் ராஜ்குமார் தலைமையில் நடைபெறவுள்ளது.


பருத்தித்துறை மெதடிஸ்த திருச்சபை சேகர முகாமைக்குழு அருட்திரு சிறிஸ்திகுமார் அருளுரையினை வழங்குவார். அத்துடன் பாடசாலை மாணவிகளின் கலை நிகழ்வுகள் நடைபெறும். (ஸ்ரீ-19)

## புலமைப் பரிசில் பயிற்சிப் பரீட்சை

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலயத்தினால் நடாத்தப்படும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையின் பயிற்சிப் பரீட்சை இன்று வெள்ளிக்கிழமை தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் நடைபெறவுள்ளது.

அதற்கான விடைத்தாள்களை பெற்றுக் கொள்ளாத பாடசாலைகள் இன்று காலை வலயக் கல்வி அலுவலகத்தில் வினாத்தாள்களைப் பெற்று பரீட்சைகளை நடாத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-29)




## மனனப் போட்டி

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலய ஆரம்பக் கல்வி மாணவர்களுக்கான அறநெறி மனனப் போட்டி எதிர்வரும் 30ஆம் திகதி திங்கட்கிழமை கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலையில் நடைபெறும் என்று ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் த.ஸ்ரீஸ்கந்தராசா அறிவித்துள்ளார். (ஸ்ரீ-29)

# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை

## 2011 (ஆகஸ்ட்) மாதிரி வினாத்தாள் - 05

ஆசிரியர் :- எஸ்.ஏ.சந்திரபவன்,
கொழும்பு

பகுதி – II

01)

அ)
கோண கோண மலையேறி
கோப்பிப் பழம் பறிக்கையிலே
ஒரு பழம் தப்பிச்சுன்னு
உதைச்சானய்யா சின்னத்துரை

ஆ)
பொட்டுப்பொட்டா கையெழுத்தாம்
பொன் பதிச்ச பேனாவாம்
ஆதரிச்சு பேரு போடும்
ஐயா கணக்குப்பிள்ளை

இ)
பாட்டுக்குப் பணிய லயம்
பந்தடிக்க மேட்டு லயம்
பேச்சுக்கு பீலிக் கரை
வாச்சுதடா உந்தனுக்கு

ஈ)
திண்ணயத் திண்ணயக் கூட்டுங்களேன்
தெருவுத் திண்ணயக் கூட்டுங்களேன்
நம்மையா கங்காணி சாஞ்சிருக்க
சருகுத் திண்ணயக் கூட்டுங்களேன்

1) இப்பாடல் இலங்கையின் எப்பிரதேசத்திற்குரியது?

..............................................

2) பாடலில் கூறப்பட்டுள்ள மலைநாட்டுப் பயிர் எது?

..............................................

3) லயம் என்பது அப்பிரதேசத்தில் எதனைக் குறித்து நிற்கின்றது?

..............................................

4) ஒரு பழம் என்பதன் எதிர்ப்பொருளை எழுதுக.

..............................................

5) "வாச்சுதடா" எனும் பேச்சு மொழியின் செம்மையான மொழி நடையை எழுதுக.

..............................................

6) பந்தடிக்க - என்பதைப் பிரித்தெழுதுக.

..............................................

7) பெருந்தோட்டங்களை நிர்வகிக்கும் நபர்கள் மூவரின் பெயர்கள் பாடலில் உள்ளன. அவற்றுள் ஒருவரின் பெயரை எழுதுக.

..............................................

8) பாடலிலுள்ள அடுக்குத் தொடர் ஒன்றினை எழுதுக.

..............................................

9) மேலுள்ள பாடல் பகுதி எந்த வகைப் பாடலினுள் அடங்கும்.

..............................................

10) "திண்ணை" என்பது யாது? கருத்து விளக்கம் தருக.

..............................................

(10 புள்ளிகள்)

02) இடைவெளிக்குப் பொருத்தமான சொற்களை எழுதுங்கள்.

1) யானையை மேய்ப்பவன் ........................ என அழைக்கப்படுவான்.

2) பசுவின் இளையது நாகு என்பது போல எருதின் இளையது .................... எனப்படும்,

(02 புள்ளிகள்)

03) கீழ்வரும் ஒவ்வொரு கருத்துக்குமுரிய பொருத்தமான பழமொழிகளை எழுதுக.

1) முயற்சி செய்தால் அதற்குரிய பயனை அடையலாம்.

..............................................

2) இளமையிற் கற்கும் கல்வியே உறுதியானது.

..............................................

(02 புள்ளிகள்)

04) முதலில் தரப்படும் சொல்லுக்குரிய ஒத்த கருத்துச் சொல்லின் கீழ் கோடிடுக.

1) அந்தரங்கம் — 1) பரகசியம் 2) இரகசியம் 3) அரங்கம்

2) சிம்மாசனம் — 1) கவியரங்கம் 2) அந்தப்புரம் 3) அரியாசனம்

(02 புள்ளிகள்)

05) கீழ்வரும் சுருக்க எழுத்துக்களின் விரிவான சொற்றொடரை எழுதுக.

1) தொ.பே.இல - ..............................................

2) இ.மி.ச - ..............................................

(02 புள்ளிகள்)

06) கீழ்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் சரியான விடையின் கீழ் கோடிடுக.

1) நீண்டநாள் பாவனைக்குரிய உணவுப்பொருள் எது?
1) முட்டை 2) இறைச்சி 3) பழப்பாகு

2) இன்று நிலத்தையும் சூழலையும் மாசுபடுத்தும் பொருளாக மாறியுள்ள முக்கிய பாவனைப் பொருள் எது?
1) கைத்தொலைபேசி 2) பொலித்தீன் 3) இறப்பர்

3) எந்த அத்தியாவசிய தேவையைக் கருத்திற் கொண்டு, தபால் சேவை ஆரம்பிக்கப்பட்டது?
1) கடிதப் பரிமாற்றம் 2) பொதி அனுப்புதல்
3) தந்தி அனுப்புதல்

4) இலங்கை மக்கள் தமது குடி நீர்த் தேவையை நிவர்த்தி செய்வதற்கு அதிகளவில் பின்பற்றும் நீர் முறை யாது?
1) நீர்பாசனக்குழாய் நீர் மூலம்
2) கிணறுகள், குழாய்க் கிணறுகள் மூலம்
3) ஆறுகள், குளங்கள் மூலம்

5) தரைப்போக்குவரத்து ஊடகங்களில் மக்களுக்கு குறைந்த கட்டணத்தில் பயணிக்கக் கூடிய ஊர்தி எது?
1) தொடருந்து 2) பேருந்து 3) சிற்றூர்தி

6) கீழ் தரப்பட்டுள்ள கலத்தல் முறைகளில் கலப்படம் என்பதன் பொருளாக அமையாத விடை யாது?
1) பாலுடன் நீர் கலத்தல்
2) மிளகுடன் பப்பாசி விதை கலத்தல்
3) மிளகாய்ப் பொடியுடன் மல்லிப் பொடி கலத்தல்

7) குளிர்சாதனப் பெட்டியில் வைத்துப் பேணமுடியாத பழம் பின்வருவனவற்றுள் எது?
1) வாழைப்பழம் 2) தக்காளிப்பழம் 3) அப்பிள்பழம்

8) பனம்பழச்சாற்றின் மூலம் தயாரிக்கப்படும் உணவுப்பொருள் எது?
1) கருப்பட்டி 2) புழுக்கொடியல் 3) பனாட்டு

9) இலங்கைவாழ் முஸ்லிம்களின் தாய்மொழி எது?
1) தமிழ்மொழி 2) சிங்களமொழி 3) அரபுமொழி

10) சிங்களம், தமிழ், முஸ்லிம் ஆகிய மூன்று இனப் பெண்களும் அணிந்து கொள்ளும் பொதுவான ஆடையாகக் கருதக் கூடியது எது?
1) பஞ்சாபி 2) பாவாடை - சட்டை 3) சேலை

(10 புள்ளிகள்)

(14ஆம் பக்கம் பார்க்க)

# பூநகரி ஊடாக சேவையிலீடுபடும் பஸ்கள் ஜெயபுரம் வரை வந்து திரும்ப வேண்டும்

## பொதுமக்கள் கோரிக்கை

(பூநகரி)


பூநகரி ஊடாக யாழ்ப்பாணத்திலிருந்து மன்னார் செல்லும் பேருந்துகளும் மன்னாரிலிருந்து யாழ்ப்பாணம் செல்லும் பேருந்துகளும் ஜெயபுரம் வரை சென்று பயணத்தை தொடங்குவது வழமை.

தற்போது ஜெயபுரம் செல்லாமல் நேரடியாக பயணத்தை தொடர்வதால் பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் ஏனைய உத்தியோகத்தர்களும் பொது மக்களும் பெரும் சிரமம் அடைவதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

ஜெயபுரம் வரை சேவை இடம்பெறாததால் 2 கிலோமீற்றர் வரை நடந்தே செல்ல வேண்டிய நிலை இருக்கின்றது.

இதனால் நோயாளர்கள்,.வயோதிபர்கள், சிறுவர்கள் எனப் பலரும் பல்வேறு அசெளகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

ஆகவே சகல சேவையில் ஈடுபடும் பஸ்களையும் ஜெயபுரம் வரை வந்து திரும்ப வேண்டுமென பொதுமக்கள் சார்பாக கோரிக்கை விடுவிக்கப்படுகின்றது. (ஸ்ரீ-84).



சுன்னாகம் விழிப்புல வலுவிழந்தோர் வாழ்வக நிறுவனத்துக்கு நல்லூர் பழமுதிர்ச்சோலை உரிமையாளர் இந்திரநாதன் தேநீர் தயாரிக்கும் இயந்திரமொன்றை நன்கொடையாக வாழ்வகத்தில் வைத்து அண்மையில் வழங்கியுள்ளார். இந்நிகழ்வில் வாழ்வக நிர்வாக அங்கத்தவர் சிவகுமாரன், வாழ்வக நலன்விரும்பி திருமதி சண்முகநாதன், வாழ்வகத் தலைவர் ரவீந்திரன், நிர்வாக அங்கத்தவர் யசிந்தன், வாழ்வக நலன் விரும்பியும் சங்கானை கலைமகள் விலாஸ் உரிமையாளருமான சரவணபவன், நல்லூர் பழமுதிர்ச்சோலை உரிமையாளர் இந்திரநாதன், வாழ்வகப் பொருளாளர் கமலநாதன், உப செயலாளர் ரவீகரன் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# தனியார் ஓய்வூதிய முறைமை குறித்து மக்களை தெளிவுபடுத்த அரசு தீர்மானம்

(கொழும்பு)

உத்தேச ஓய்வூதிய முறைமை தொடர்பாக ஊழியர்களை தெளிவுபடுத்தும் திட்டமொன்றை ஆரம்பிக்கவுள்ளதாக தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்த ஓய்வூதிய முறைமை குறித்து ஊழியர்கள் மத்தியில் நிலவுகின்ற தெளிவின்மையை போக்குவதற்காகவே தெளிவுபடுத்தும் நடவடிக்கையை முன்னெடுக்கவுள்ளதாக அமைச்சர் காமினி லொக்குகே குறிப்பிட்டார்.

வேலைத்தளங்களிலும் நிறுவ னங்களிலும் இந்த நடவடிக்கையை மேற் கொள்ளவுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

இதன்பொருட்டு தொழிற்சங்கள் சிலவற்றின் ஒத்துழைப்பும் கிடைத்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இது தவிர துண்டுப்பிரசுரங்களை விநியோகிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

தனியார் ஓய்வூதிய முறைமை தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில் சிறந்த கருத்துக்களை ஏற்றுக் கொள்ள தயாராகவுள்ளதாக அமைச்சர் காமினி லொக்குகே மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# பல்கலை. வெட்டுப்புள்ளிகள் இன்று வெளியிடப்படும்

(கொழும்பு)

2010 ஆம் ஆண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளிகள் இன்று காலை வெளியிடப்படுமென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு உயர்தர பரீட்சையில் தோற்றிய மாணவர்களுக்கான பல்கலைக் கழக வெட்டுப் புள்ளிகள் இன்று வெளியிடப்பட்ட பின்னர் பல்கலைக்கழக நுழைவுக்கான விண்ணப்பங்களும் விநியோகிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ஸ்ரீ-2)

# வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் ஆலய வருடாந்தப் பொங்கல் உற்சவம்

(கொழும்பு)

வரலாற்றுப் புகழ்மிக்க வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் ஆலய வருடாந்தப் பொங்கல் உற்சவம் எதிர்வரும் ஜூன் மாதம் 13 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

இதனை முன்னிட்டு ஆரம்ப நிகழ் வுகளான பாக்குத்தண்டல் எதிர்வரும் 30 ஆம் திகதி திங்கட்கிழமை உதயத்தின் முன்பும் தீர்த்தமெடுத்தல் நிகழ்வு எதிர்வரும் ஜூன் மாதம் 6 ஆம் திகதி திங்கட்கிழமையும் நடைபெறவுள்ளன.

இவற்றுக்கான பூர்வாங்க ஆயத்தங்கள் ஆலயப்பரிபாலன சபையினராலும் அரச அதிபர் தலைமையிலான திணைக்களத் தலைவர்களாலும் மேற்கொள்ளப்படுவதாக ஆலய பரிபாலன சபைத் தலைவர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# காரைநகர் கோட்டமட்ட தமிழ்த்தினப் போட்டி முடிபுகள்

(காரைநகர்)

காரைநகர் கோட்டக்கல்வி அலுவலகத்தினால் நடத்தப்பட்ட தமிழ்த்தினப் போட்டி முடிபுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்றோர் விபரம் வருமாறு,

**வாசிப்பு**

பிரிவு-1

பே. வனஸ்பதி (வலந்தலை வடக்கு அ. மி.த.க. பா), சு. புயலிசை (யாழ்ற்ரன் கல்லூரி), மு.அபிதரன் (சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம்)

பிரிவு 2

த. சங்கவி (யாழ்ற்ரன் கல்லூரி), ம. நிரோசனா (வியாவில் சைவ வித்தியாலயம்) த. ரேவதி (சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம்)

**பேச்சு**

பிரிவு 1

சு.விதுர்சன் (ஊரி அ.மி.த.க.பா) , அ. ரவீந்திரன் (சுந்தர மூர்த்தி நாயனார் வித்தியாலயம்), கோ. சங்கீதா (மெய்கண்டான் வித்தியாலயம்)

பிரிவு 2

செ. கீர்த்தனா (யாழ்ற்ரன் கல்லூரி), க. அபினோசா (கலாநிதி தியாகராஜா ம.ம.வி.), சோ. உசாந்தினி (சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம்) ,

பிரிவு 3

சி.விசாளினி (கலாநிதி தியாகராஜா ம.ம. வி.), த. ஆரணி (யாழ்ற்ரன் கல்லூரி),

பிரிவு 4

ப. கௌரிதரன் (யாழ்ற்ரன் கல்லூரி), ந. டினோஜா (தியாகராசா ம.ம.வி) ,சி.லோகவதனி (யாழ்ற்ரன் கல்லூரி)

**இசையும் அசைவும்** பிரிவு 1

கி.ரிதர்சனா (சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம்) , கி.கீர்த்திகா (கலாநிதி தியாகராசா ம.ம.வி) , கி. அறிவொளி (தோப்புக்காடு மன்ற ஞானசம்பந்தர் வித்தி,

**தனி இசை**

பிரிவு 2

கி.துர்க்காயினி (சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம்), சி.சிவப்பிரியா (யாழ்ற்ரன் கல்லூரி), நா. மகிந்தா (வியாவில் சைவ வித்தியாலயம்)

பிரிவு 3

ப. மகிபன் (கலாநிதி தியாகராசா ம.ம.வி) , தே. கிருசாந்தினி (வியாவில் சைவ வித்தியாலயம்), வே.தனேஸ்வரராசா (சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம்)

பிரிவு 4

இ. சிவகௌரி (யாழ்ற்ரன் கல்லூரி), ச. கிரிஜா (கலாநிதி தியாகராசா ம.ம.வி) ,

பிரிவு 5

மு.புவித்திரா (யாழ்ற்ரன் கல்லூரி),

**குழு இசை**

பிரிவு 1

(யாழ்ற்ரன் கல்லூரி), (வியாவில் சைவ வித்தியாலயம்), (சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம்) ,

பிரிவு 2

(கலாநிதி தியாகராசா ம.ம.வி) ,(யாழ்ற்ரன் கல்லூரி),

**பாவோதல்**

பிரிவு 1

ர. சயுவண்ணன் (கலாநிதி தியாகராசா ம.ம.வி) , சி. வஸ்வர்யா (யாழ்ற்ரன் கல்லூரி), ப.டனிஸ்ரா (வலந்தலை வடக்கு அ.மி.த.க.பா)

பிரிவு 2

சி.சிவரஞ்சன் (யாழ்ற்ரன் கல்லூரி), கோ. சிந்துஜா (வியாவில் சைவ வித்தியாலயம்)

**தனிநடனம்**

பிரிவு 2

இ. நிரூபமா (கலாநிதி தியாகராசா ம.ம.வி) ,

பிரிவு 3

க. நாகசிந்துஜா (கலாநிதி தியாகராஜா ம.ம.வி.)

**குழு நடனம்**

(கலாநிதி தியாகராஜா ம.ம. வி), (சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம் ), (யாழ்ற்ரன் கல்லூரி)

**ஆக்கத்திறன் வெளிப்பாடு**

பிரிவு 1

கி.சிந்துஜா (வலந்தலை வடக்கு அ.மி. த.க.பா)

பு. ஞானஜெஸ்ரின் (ஊரி.அ.மி.த.), ச.கஜமாலன் (சுந்தரமூர்த்தி நாயனார் வித்தி)

**பாவோதல்**

பிரிவு 3

சு. மனோகரி (யாழ்ற்ரன் கல்லூரி),பே. சரண்யா (சுந்தரமூர்த்தி நாயனார் வித்தி,

பிரிவு 4

ஞா. கலைச்செல்வி (யாழ்ற்ரன் கல்லூரி),

பிரிவு 5

அ.ரேவதி (யாழ்ற்ரன் கல்லூரி),

**தமிழறிவு வினாவிடை**

(கலாநிதி தியாகரா சாம.ம.வி), (யாழ்ற்ரன் கல்லூரி), (சுந்தரமூர்த்தி நாயனார் வித்தி,

**வில்லுப்பாட்டு**

(யாழ்ற்ரன் கல்லூரி),

**சமூகநாடகம்**

(சுந்தரமூர்த்தி நாயனார் வித்தி,

**விவாதம்**

(யாழ்ற்ரன் கல்லூரி), (கலாநிதி தியாகராஜா ம.ம.வித்தி.

(ஸ்ரீ-246)

# காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் புதிய கிளைகள் திறப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் மன்னார் கிளையின் திறப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 10.18 மணிக்கு புகையிரத நிலைய வீதி (பாக்கியா ஸ்ரூடியோவுக்கு முன்பாக) மன்னாரில் நடைபெறும் என்றும் சங்கானைக் கிளையின் திறப்பு விழா நாளை சனிக்கிழமை காலை 10.27 மணி க்கு இல.44, பொன் னாலை வீதி, சங்கா னையில் நடைபெறும் என்றும் யாழ். பிராந்திய முகாமையாளர் ஆர்.எப். அரியநாயகம் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# இன்னிசை விரிவுரை

(யாழ்ப்பாணம்)

சங்கானை நிற்சாமம் ஸ்ரீஞானவைரவர் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா கடந்த திங்கட்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.


இதில் இன்று வெள்ளிக்கிழமை இரவு 9 மணிக்கு கப்பல் திருவிழா நடைபெறும்.

சிறப்பு நிகழ்ச்சியாக இரவு 7 மணிக்கு நல்லைக் குருமணியின் பிரதம வாரிசு கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானசந்தசர்மா சிறந்த பக்கவாத்திய சகிதம் அபிராமிப்பட்டர் எனும் பொருள்பற்றி இன்னிசை விரிவுரை ஒன்றை நிகழ்த்தவுள்ளார். (ஸ்ரீ-2)

# இலங்கையை உலுப்பிவரும்

# ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை

202. தன்னால் பிரகடனப் படுத்தப்பட்ட யுத்தசூன்ய வலயங்களில் அமைந்துள்ள மற்றும் ஆஸ்பத்திரிகள் உணவு விநியோகவரிசைகளை உள்ளிட்ட வித்தியாசமின்றிப் பொதுமக்களைத் தாக்கக்கூடிய ஆனால் குறிப்பிட்ட இராணுவ இலக்குகளை மாத்திரம் குறிவைக்காத விதத்தில் இலங்கை இராணுவம் பீரங்கிகளைப் பிரயோகிப்பதன் மூலம் மீறல் ஒன்றைச் செய்ததாக நம்பகமான குற்றச்சாட்டுக்கள்



குறிப்பிடுகின்றன.

அதிகமாகப் பொதுமக்கள் உள்ள இலக்குப்பார்த்த பிரதேசங்களுக்கு எதிராக கனரகஆயுதங்களைப் பாவித்ததாக அல்லது அவ்விடங்களில் பரவலாகப் பீரங்கிளைப் பாவிப்பது தொடர்பான குற்றச்சாட்டுக்கள் தாமாகவே அவை கண்மூடித்தனமானவையாகும் என்பதைக் குறிப்பிடுவனவாகவுள்ளது.

203. எதிர்பார்க்கப்படும் உறுதியான மற்றும் நேரடி இராணுவப் பயனை விஞ்சக்கூடிய, தற்செயலாகப் பொதுமக்கள் உயிரிழப்பை, பொதுமக்கள் காயமடைவதை, பொது இடங்களைச் சேதப்படுத்துவதை அல்லது அவை இணைந்தவற்றை ஏற்படுத்தக்கூடிய விதத்தில் தாக்குதல் ஒன்றை நடத்துவதையும் சட்டம் தடை செய்கிறது (விதி14, ஐ.சி.ஆர்.சி.) எதிர்பார்க்கப்படும் அளவுக்கதிகமான பொதுமக்கள் மரணத்தை மற்றும் காயத்தை ஏற்படுத்துவது தொடர்பாக அளவுக் கதிகமான பலத்தைப் பிரயோகிப் பதையும் இவ்விதிமுறை தடை செய்கிறது.

சகல சம்பவங்கள் பற்றிய தகவலுடன் குழுவிடம் இல்லாத அதே

**தமிழாக்கம் தொடர் 26**

வேளையில், யுத்தசூன்ய வலயங்கள் மீதான தாக்குதல்கள் அத்தகைய தாக்குதல்கள் மூலம் எதிர்பார்க்கப்படும் இராணுவப்பயனைவிட அதிகமாக இருந்ததால் இவ்வேறுபாடு பலமுறை மீறப்பட்டதை நம்பகமான குற்றச்சாட்டுக்கள் குறிப்பிடுகின்றன. யுத்தசூன்ய வலயங்களில் கனரஆயுதங்களின் பாவனையை நிறுத்தியுள்ளதாக பலதடவை அரசாங்கம் தெரிவித்துள்ளதைக்கொண்டு அவற்றின் பிரயோகம் அளவுக்கு அதிகமாக இருக்கும் என்பதுபற்றி அது அறிந்திருந்தது. என்பதைச் சுட்டிக்காட்டுவதாக உள்ளது.

### (உ) தாக்குதல்களுக்கு முன்பும் அவற்றின் போதும் முன்னேற்பாடுகளின் தேவை

204. இலக்குகள் இராணுவம் சம்பந்தப்பட்டவையா? என்பதை உறுதிப்படுத்திக் கொள்வது, பொதுமக்கள் இறப்பு மற்றும் காயமடைவதைக் குறைப்பதற்கான யுத்த முறைகளையும் வழிகளையும் தேர்ந்தெடுப்பது மற்றும் சந்தர்ப்ப சூழ்நிலைகள் இடமளிப்பின் பயனுறு முன்னெச்சரிக்கை ஆகியவற்றை உள்ளிட்ட பொதுமக்கள் கொல்லப்படுதை அல்லது காயமடைவதை குறைப்பதற்கான முடியுமான சகல தற்பாதுகாப்பு நடவடிக்கைகளையும் தரப்பினர் மேற்கொள்வதை சர்வதேச மனிதாபிமானச் சட்டம் தேவைப்படுத்துகிறது. (விதி1520 ஐ.சி.ஆர்.சி. ஆய்வு)

(71) 205. பொதுமக்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய விதத்தில் இராணுவ இலக்குகள் மீதான தாக்குதல்கள் உள்ளிட்ட தாக்குதல்கள் பற்றிப் பொதுமக்களுக்கு எந்தவித அல்லது போதிய முன்னெச்சரிக்கையை இராணுவத்தினர் வழங்கவில்லை என்பதாக இவ்வேற்பாடு மீறப்பட்டதை நம்பகமான குற்றச்சாட்டுக்கள் குறிப்பிடுகின்றன. வன்னியில் இடைக்கிடையே விநியோகிக்கப்பட்ட துண்டுப்பிரசுரங்கள் குறிப்பான தாக்குதல்கள் பற்றிய போதிய முன்னேற்பாடாக அமையவில்லை.

மேலும், பொதுமக்களைச் செல்லுமாறு அரசாங்கம் பணித்த யுத்தசூன்யவலயங்களை, இவ்விதியைக் கவனிக்காது இலங்கை இராணுவம் பின்னர் செல்வீசித்தாக்கியது காயம் சாதிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட சாதுரியமான செயலாகவே இருக்கிறது.

### 2. ஆஸ்பத்திரிகள் மற்றும் மனிதாபிமான இலக்குகள் மீதாதன செல்வீச்சு

(அ) ஜெனீவா உடன்படிக்கைகளின் பொது உறுப்புரை 3

206.அவை தெளிவாக அடையாளமிடப்பட்டு அவற்றின் அமைவிடங்கள் அரசாங்கத்திற்குத் தெரிந்திருந்த போதிலும், மேலே குறிப்பிட்ட ஆஸ்பத்திரிகள் மற்றும் மனிதாபிமானத் தலங்கள் மீதான தாக்குதல்கள் பற்றியநம்பகமான குற்றச்சாட்டுக்கள், உறுப்புரை 3இல் தெளிவாகக் கூறப்பட்டுள்ள "நோயாளர் மற்றும் காயமுற்றோருக்குப் பராமரிப்பு வழங்குதல்" என்ற கடப்பாட்டின் மீறலாக அமைகிறது.

அறிந்திருந்தும் பொதுமக்கள் அதிகமாக உள்ள ஆஸ்பத்திரி அமைவிடங்களை மற்றும் மனிதாபிமானத் தலங்களை நேரடியாகவோ அல்லது கண்மூடித்தனமாகவோ குறிவைப்பது, அத்தாக்குதல் மரணத்தை ஏற்படுத்தக் கூடும் என்பதை தாக்குதல் நடத்தியவர்கள் அறிந்துள்ளார்கள் என்பதைக் குறிப்பதாகவுள்ளதோடு அவை பொதுஉறுப்புரை 3இனை மீறிய கொலை என்பதாகவும் உள்ளது.

### (ஆ) மருத்துவ மற்றும் மனிதாபிமான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்கள் மற்றும் தலங்களுக்கான விசேட பாதுகாப்புக்கான தேவை.

207. தரப்பினர் சகல மருத்துவ ஆளணியினர், மருத்துவ அலகுகள், மருத்துவப்போக்குவரத்துகள், மனிதாபிமான உதவியாட்கள் அத்துடன் மனிதாபிமான உதவித்தலங்கள் ஆகியவற்றை மதித்துப் பாதுகாக்க வேண்டும் என்பதை சர்வதேச மனிதாபிமான சட்டம் தேவைப்படுத்துகிறது.

(விதிகள் 25, 28, 31 மற்றும் 32 ஐ.சி.ஆர்.சி. ஆய்வு) குறிப்பான ஜெனீவா உடன்படிக்கையின் சின்னங்கள் இலங்கையைப் பொறுத்தவரை செஞ்சிலுவை அல்லது ஐ.சி.ஆர்.சி. கொடியினை தெளிவாகக் காட்டும் வைத்திய ஆளணியினர் மற்றும் தலங்களை, தரப்பினரை தாக்கலாகாது (விதி30 ஐ.சி.ஆர்.சி. ஆய்வு)நேரகாலத்தோடு இலங்கை அரசாங்கத்துக்கு அறிவிக்கப்பட்ட தெளிவான சின்னங்கள் அல்லது அறிவிக்கப்பட்ட எல்லைகளைக் கொண்ட பல்வேறு ஆஸ்பத்திரிகள் மற்றும் மனிதாபிமானத் தலங்கள் மீதான செல்தாக்கு தல் பற்றிய நம்பகமான குற்றச்சாட்டுக்கள் இவ்விதியின் மீறலைக் குறிக்கின்றன.

அதே போன்று, ஐக்கியநாடுகள் கொடி தெளிவாகப் பறக்கவிடப் பட்டிருந்த முதலாவது யுத்த சூன்ய வலயம் போன்ற ஐக்கியநாடுகள் வளாகம் மீதான தாக்குதல்களும் இதே தீர்மானத்தையே குறிக்கின்றன.



### (72) (இ) பொதுமக்கள் மீது அல்லது பொதுமக்கள் தலங்கள் மீதான தாக்குதலுக்கான தடை

208. ஆஸ்பத்திரிகள் மற்றும் மனிதாபிமான தலங்கள் மீதான தாக்குதல்களும் பொதுமக்கள் தலங்கள் மீதான சட்டவிரோத தாக்குதலைக் குறிக்கின்றன.

சில ஆஸ்பத்திரிகளில் (புதுக்குடியிருப்பு, புதுமாத்தளன், மற்றும் முள்ளிவாய்க்கால்) காயமடைந்த எல்.ரி.ரி.ஈ. உறுப்பினர்களுக்குச் சிகிச்சை அளிக்க வேறொரு பிரிவு இருந்தது. இத்தலங்களில் பொதுமக்கள் சுபாவத்தில் மாற்றத்தை ஏற்படுத்தாது. ஆயினும், இவ்வாஸ்பத்திரிகள் பல முறை தாக்கப்பட்டன அவை வேண்டுமென்றே குறிபார்க்கப்பட்டன என்ற ஊகத்தை ஏற்படுத்துகிறது.

### 3.மனிதாபிமான உதவியை மறுத்தல்

ஜெனீவா உடன்படிக்கைகளின் பொது உறுப்புரை 3

209.யுத்தத்தின் இறுதிக்கட்டங்களில் "நோயாளிகளுக்கும் காயமடைந்தவர்களுக்கும் பராமரிப்பை வழங்குதல்" என்ற கடமை தொடர்பாக ஐ.நா ஒழுங்குசெய்த வாகனத் தொடர்கள் அல்லது ஐ.சி.ஆர்.சி. கப்பல்கள் மூலமான அடிப்படைப் பொருட்கள் மூலமான அடிப்படை மருந்துப்பொருட்கள் குறிப்பாக அறுவைச்சிகிச்சைக்கான பொருட்கள், யுத்தவலயத்தை சென்றடைவதை அரசாங்கம் அதிகமாகக் கட்டுப்படுத்தியது. உயிரைப் பாதுகாப்பதற்கான சத்திரசிகிச்சைக்குத் தேவையான மருந்துப்பொருட்களை பிரதேச, மாவட்ட வைத்திய அத்தியட்சகர் பல முறை வேண்டிய போதும் அது அதனைக் கவனத்துக்கெடுத்துக் கொள்ளவில்லை. அது கப்பல் மூலமாக அனுப்பும் மருந்துப் பொருட்கள்மீது கட்டுப்பாடுகளை விதித்தும் காயமடைந்தவர்கள் எடுத்துச் செல்வதற்காக வந்த கப்பல்களுக்கு அருகில் துப்பாக்கியால் சுட்டும் செல்வெடிகளைச் செலுத்தியும் காயமடைந்த பொதுமக்களுக்கு உதவுவதில் பாரபட்சமான முறையில் மனிதாபிமான உதவியை அது வழங்குகிறது என சர்வதேசரீதியில் ஏற்றுக்கொள்ளப் பட்டிருந்த போதிலும், ஐ.சி.ஆர்.சி.க்குக் கடுமையான தடைகள் ஏற்படுத்தப்பட்டன.

ஆ)மருத்துவ மற்றும் மனிதாபிமான நடவடிக்கையில் ஈடுபட்டவர்களுக்கும் தலங்களுக்குமான விசேட பாதுகாப்புக்கான தேவைப் படுத்தல்கள்

210. மேலே இரண்டில் கலந்துரையாடப்பட்ட ஆஸ்பத்திரிமீதான செல் தாக்குதலுக்குப் புறம்பாக, இலங்கை இராணுவத்தினால் பல மனிதாபிமானத் தளங்கள், குறிப்பாக வாகனத்தொடர் 11, புதுமாத்தளனுக்கு அருகில் ஐக்கிய நாடுகள் வளாகம், முதலாவது யுத்த சூன்ய வலயத்தில் மற்றும் அம்பலவன் பொக்கணையில் உணவு விநியோகப் பாதை மற்றும் ஐ.சி.ஆர்.சி. கப்பல்களுக்கு அருகே செல்தாக்குதலை மேற்கொள்ளல் இந்த விதியின் மீறலைக் குறிக்கின்றன.

(தொடரும்)

# நாடுமுழுவதும் படைமுகாம்களை நிறுவி குடும்ப ஆட்சியை இராணுவ ஆட்சியாக மாற்றத் திட்டம்

## சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி. தெரிவிப்பு



(கொழும்பு)

**நாடு முழுவதிலும் படை முகாம்களை நிறுவுதற்கான பாதுகாப்பு அமைச்சின் தீர்மானமானது தற்போதிருக்கும் குடும்ப ஆட்சியை எதிர்காலத்தில் இராணுவ ஆட்சியாக மாற்றி அமைப்பதற்கான முதற்கட்டமாக அமைந்துள்ளது என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.**

அவசரகாலச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என பல்வேறு தரப்புக்களிடமிருந்தும் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வருகின்ற நிலையில் நாடு முழுவதிலும் படை முகாம்களை அமைப்பதற்கான அரசாங்கத்தின் திட்டம் குறித்து கருத்து வெளியிடும் போது அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

விடுதலைப்புலிகளின் அமைப்பு ஒழித்துக் கட்டப்பட்டு விட்டதாக சர்வதேசத்துக்கு தம்பட்டம் அடிக்கின்ற நிலையில் உள்ளூரிலோ அல்லது அந்நிய சக்திகளிடமிருந்தோ இலங்கைக்கு பாதகம் இல்லை என்பது தெளிவுபட்டிருக்கின்ற போதிலும் இவ்வாறான படை முகாம்கள் நிறுவப்படுவதற்கான அவசரம் என்ன என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில்,

இன்றைய சூழலில்அவசரகாலச்சட்டம் என்பது அவசியமற்றது.

எனவே அது இரத்துச் செய்யப்பட வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபை அரசாங்கத்தை வலியுறுத்தியிருக்கின்றது. இதனையே தமிழ்த் தேசியக்கூட்டமைப்பாகிய நாமும் தொடர்ச்சியாக கூறிவருகின்றோம்.

அதே போல் அவசரகாலச் சட்ட நீடிப்புக்கு நாடாளுமன்றத்துக்கு எமது எதிர்ப்பையும் வெளிக்காட்டி வருகின்றோம். எமது வரிசையில் அண்மைக்காலமாக ஐக்கிய தேசியக் கட்சியும், ஜே.வி.பி.யும் இணைந்து கொண்டிருக்கின்றன.

அவசர காலச் சட்டத்துக்கான தேவை அற்றுப் போய்விட்டதை அக்கட்சிகள் வலியுறுத்தி வருகின்ற அதேவேளையில் நாடாளுமன்றில் அதற்கான பிரேரணைக்கு எதிராகவும் அக்கட்சிகள் செயற்பட்டு வருகின்றன.

கடந்த சில வாரங்களுக்கு முன்பதாக இந்தியாவும் இவ்விடயம் தொடர்பில் அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுத்திருக்கின்றது. எனினும் எந்தத் தரப்பினதும் அறிவுறுத்தல்களை அல்லது வலியுறுத்தல்களையும் ஏற்றுக் கொள்கின்ற நிலையில் அரசாங்கம் இல்லை என்பது தெளிவாகின்றது.

விடுதலைப்புலிகள் அழிக்கப்பட்டு விட்டதாக அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கின்ற அதேவேளை தமது படையினரால் விடுதலைப்புலிகள் அழிக்கப்பட்டுவிட்டதாக உலக நாடுகளுக்கு அரசாங்கம் தம்பட்டம் அடித்துக் கொண்டிருக்கிறது.

இந்நிலையில் இங்கு அவசர காலச் சட்டம் தொடர்ந்தும் நீடிக்கப்பட்டு வருவது எந்த விதத்திலும் ஏற்கத்தகாத விடயம் என சுரேஸ் பிரேமச்சந்திரன் வலியுறுத்தியுள்ளார்.(ஸ்ரீ-2)

## கட்டாரிலிருந்து நாடு திரும்பியவர் விமான நிலையத்தில் கைது

(கொழும்பு)

கட்டாரில் கடந்த 5 வருட காலமாக தொழில் புரிந்து விட்டு நேற்று முன்தினம் காலை நாடு திரும்பிய மட்டக்களப்பைச் சேர்ந்த நபர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவாக்கலைப் பிரதேசமான கடுக்காமுனை கிராமத்தைச் சேர்ந்த ஒரு குழந்தையின் தந்தையான அழகிப்போடி அழகேசன் .(வயது 38) என்பவரே கைது செய்யப்பட்டவராவார்.

5 வருடங்களாக கட்டாரில் தொழில் புரிந்து விட்டு நாடு திரும்பிய வேளையில் விமான நிலையத்தில் வைத்து இராணுவ புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவரது கைது தொடர்பாக குடும்பத்தினர் மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரனிடம் முறையிட்டுள்ளனர்.(ஸ்ரீ-2)

## சிறைச்சாலை கைதிகளின் போராட்டம் நியாயமானது

### சரத் பொன்சேகா தெரிவிப்பு



(கொழும்பு)

தற்போது நாட்டின் பல பகுதிகளிலும் சிறைக் கைதிகளினால் மேற்கொள்ளப்பட்டு வரும் போராட்டங்கள் நியாயமானவை என ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் அசமந்தமான போக்கே சிறைக் கைதிகளின் போராட்டத்திற்கு வழி கோலியது என அவர் குறிப்பிட்டுள்ளார். வெள்ளைக் கொடி வழக்கு விசாரணைகளின் பின்னர் சிறைச்சாலை திரும்பும் வழியில் ஊடகவியலாளர்களுக்கு கருத்து வெளியிட்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கைதிகளின் நிலைமை கவலையளிக்கும் வகையில் அமையப் பெற்றுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை சண்டே லீடர் ஆசிரியர் பெட்ரிக்கா ஜேன்ஸ் தம்முடன் நேர்காணல் நடத்தவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

நட்பு ரீதியாக உரையாடிக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்த கருத்துக்களை பிழையாக செய்தியாக்கியுள்ளதாக அவர் குற்றம்சுமத்தியுள்ளார். (ஸ்ரீ-2)

## தண்ணீர் வாளிக்குள் விழுந்த குழந்தை பரிதாப மரணம்

பெற்றோரின் கவனயீனத்தால் 18 மாதக் குழந்தையொன்று பரிதாபமாக தண்ணீர் வாளிக்குள் வீழ்ந்து உயிரிழந்துள்ளது.

இச்சம்பவம் கடந்த 23 ஆம் திகதி மாலை 5 மணியளவில் கிளிநொச்சியில் இடம்பெற்றுள்ளது.

வீட்டில் விளையாடிக் கொண்டிருந்த குழந்தையைக் காணவில்லையென்று வீட்டிலுள்ளவர்கள் தேடிய போதே குழந்தை நிவாரணத்துக்கு வழங்கப்பட்ட 25 லீற்றர் கொள்ளளவுடைய வாளிக்குள்ளே சடலமாக கண்டு பிடித்துள்ளனர்.

இதன் பின்னர் சடலம் கிளிநொச்சி வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. பிரேத பரிசோதனைகளின் பின்னர் சடலம் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது. சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஸ்ரீ-2)








வலி.கிழக்கு சைவ சமய அருள்நெறி மன்றம் நடத்திய புத்தாண்டு சமூகப் பணி விழாவில் யாழ். பல்லைக்கழக முன்னாள் துணைவேந்தரும் சமூகவியல் பேராசிரியருமான நா.சண்முகலிங்கன் , பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி.அ.வேதநாயகம் ஆகியோர் உரையாற்றுவதையும் இம்மன்றத்தின் தலைவரான சிவஸ்ரீ சோ.இ. பிரணதார்த்திஹர குருக்கள் நலிவுற்ற மாணவருக்கு கல்வி ஊக்குவிப்புத் தொகையினை வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# பாகிஸ்தான் பாராளுமன்ற உறுப்பினர் அடங்கிய குழு இலங்கைக்கு விஜயம்

(கொழும்பு)

பாகிஸ்தான் நாடாளுமன்றத்தை சேர்ந்த இருவர் அடங்கிய குழுவொன்று நேற்று முன்தினம் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கைக்கும் - பாகிஸ்தானுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்தும் நோக்கத்துடன் பாகிஸ்தான் நாடாளுமன்றக் குழு இலங்கைக்கு விஜயம் செய்துள்ளது.

கஸ்மலாதாரிக் மற்றும் பலோசிஸ்தான் பேரவையின் பேச்சாளர் மொஹமட்அஸ்லம் , பூதனி ஆகிய இருவர் அடங்கிய குழுவினரே இலங்கைக்கு வந்துள்ளனர். இந்தக் குழு எதிர்வரும் 29 ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருக்கவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

பாகிஸ்தான் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ மற்றும் பல அரச உயரதிகாரிகளை சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளனர். (ஸ்ரீ-2)

# சவுதி அரேபியாவில் பணியாற்றிய இலங்கை பணிப்பெண் தற்கொலை

(கொழும்பு)

சவுதி அரேபியாவில் பணியாற்றிய இலங்கைப் பணிப்பெண் ஒருவர் காரில் பாய்ந்து தற்கொலை செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குடும்பத் தகராறு காரணமாக குறித்த பெண் தற்கொலை செய்துள்ளதாக வெளிநாட்டுத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

மதினாவிலிருந்து ரியாத் நோக்கி அதிவேக மார்க்கத்தில் பயணித்துக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் அவர் காரிலிருந்து பாய்ந்துள்ளதாக கூறப்படுகின்றது.

மொனராகலையைச் சேர்ந்த பெண்ணொருவரே இவ்வாறு தற்கொலை செய்துள்ளார். (ஸ்ரீ-2)

# சீன வெளிநாட்டமைச்சருடன் அமைச்சர் பீரிஸ் சந்திப்பு

## தற்போதைய நிலைமை குறித்து விளக்கம்

(கொழும்பு)

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் சீன அமைச்சரை சந்தித்து நாட்டின் தற்போதைய நிலைமைகள் தொடர்பான விடயங்களை தெளிவுபடுத்தியுள்ளார். தாருஸ்மன் அறிக்கை, கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு மேற்கொண்ட தீர்மானங்கள் தொடர்பாக அமைச்சர் அதிகாரிகளுக்கு விளக்கமளித்துள்ளார்.

சீன வெளிநாட்டலுவல்கள் அமைச்சருக்கும் அவர் இந்த விடயங்களை தெளிவுப்டுத்தியுள்ளார். வெளி நாட்டலுவல்கள் அமைச்சருடன் நடத்திய பேச்சுவார்த்தையின் போது இரு நாடுகளுக்குமிடையிலான வர்த்தகம் தொடர்பான விடயங்களில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தையின் போது சீன வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் இலங்கைக்கு தமது பிரச்சினைகளுக்கு தீர்வுகளைக் காணக்கூடிய சக்தி இருப்பதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார். இலங்கையில் மேற்கொள்ளப்படும் கட்டுமான பணிகளுக்கு சீனா தொடர்ந்தும் உதவி வழங்கும் என்றும் அவர் உறுதியளித்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் பயங்கரவாதத்தை முற்றாக ஒழிப்பதற்காக மேற்கொண்ட தீர்மானத்தை அவர் பாராட்டினார்.

இலங்கையில் மேற்கொள்ளப்படும் பாரிய திட்டங்களுக்கு சீனா வழங்கிய உதவிகளுக்கு அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் நன்றி தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்குமிடையில் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் தொடர்பாக விரிவாக ஆராயப் பட்டது. (ஸ்ரீ-2)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2011.05 27

★ 1703-ரஷ்ய சார் மன்னன் முதலாம் பீற்றர் புனித பீட்டர்ஸ்பேர்க் நகரை அமைத்தான்.

★ 1860-இத்தாலியின் ஒற்றுமைக்காக கரிபால்டி சிசிலியின் பலேர்மோ நகரில் தாக்குதலை ஆரம்பித்தான்.

★ 1883-ரஷ்யாவின் மன்னனாக மூன்றாம் அலெக்சாண்டர் முடி சூடினான்.

★ 1937-கலிபோர்னியாவில் கோல்டன் கேட்பாலம் திறக்கப்பட்டது.

★ 1940-இரண்டாம் உலகப் போர்: பிரான்சில் டன்கேர்க் என்ற இடத்தில் ஜேர்மனியரிடம் சரணடைந்த ஐக்கிய இராச்சியத்தின் நோர்ஃ போக் பிரிவைச் சேர்ந்த 99 பேரில் 97 பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

★ 1941-இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியின் பிஸ்மார்க் போர்க் கப்பல் வட அட்லாண்டிக்கில் மூழ்கடிக்கப்பட்டதில் 2 ஆயி ரத்து 100 பேர் கொல்லப்பட் டனர்.

★ 1960-துருக்கியில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியின் போது செலால் பயார் ஜனாதிபதி பதவியில் இருந்து அகற்றப்பட்டார்.

★ 1965-வியட்நாம் போர்: அமெரிக்கப் போர்க் கப்பல்கள் தெற்கு வியட்நாம் மீது குண்டுகள் வீசித் தாக்குதலைத் தொடுத்தன.

★ 1967-அவுஸ்திரேலியாவில் நடந்த வாக்கெடுப்பில் ஆதிவாசிகளை மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் அடக்கவும் அவர்களின் வாழ்க்கை முறையை மேம்படுத்தவும் அரசாங்கத்திற்கு அதிகாரம் வழங்க மக்கள் அங்கீகாரம் அளித்தனர்.

★ 1994-சோவியத் அதிருப்தியாளர் அலெக்சாண்டர் சொல்ஷெனிட்சின் 20 ஆண்டுகளின் பின்னர் ரஷ்யா திரும்பினார்.

★ 2006-ஜாவாவில் நிகழ்ந்த (உள்ளூர் நேரம் காலை 5:53:58 UTC நேரம் மே 26 இரவு 10:53:58) நிலநடுக்கத்தில் 6 ஆயிரம் பேர் வரை பலியாகினர்.

### பிறப்புக்கள்

★ 1907-ராச்சேல் கார்சன், அமெரிக்க உயிரியியலாளர் (இ.1964)

★ 1923-ஹென்றி கிசின்ஜர், நோபல் பரிசு பெற்றவர்.

★ 1956-கிசெப்பே டோர்னடோரே, இத்தாலிய திரைப்பட இயக் குநர்.

★ 1975-மைக்கேல் ஹசி, அவுஸ்திரேலிய துடுப்பாட்ட வீரர்

★ 1977-மகேல ஜயவர்த்தன, இலங்கை துடுப்பாட்ட வீரர்

### இறப்புக்கள்

★ 1910-ரோபர்ட் கோக், ஜேர்மனிய அறிவியலாளர் (பி.1843)

★ 1964-ஜவஹர்லால் நேரு, முதலாவது இந்தியப் பிரதமர் (பி.1889)


★ 1597-டொன் யுவான் தர்மபால, இலங்கை கோட்டை மன்னன்.





கொக்குவில் இந்துக் கல்லூரியில் உள்ளகப் பயிற்சியினை மேற்கொ ள்ளும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி உள்ளகப் பயிற்சி ஆசிரியர்களால் சமூகம் சார் செயற்றிட்டமாக "மரம் நடுவோம் பயன் பெறுவோம்" எனும் தொனிப்பொருளில் மரம் நாட்டல் வைபவம் அண்மையில் கல்லூரியில் நடைபெற்றது. இந் நிகழ்வில் கல்லூரி பிரதி அதிபர் மரம் நடுவதையும் நிகழ்வில் பங்கேற்ற ஒரு தொகுதி மாணவர் களையும் படங்களில் காணலாம்.

# கொஞ்சம் அமுதம் கொஞ்சம் விஷம்



## ஆன்மீகம் 07

"கோயில் சொத்தைத் திருடி விற்றுப் பணக் காரரான ஒரு நபர் எங்கள் ஊரில் இருக்கிறார். கடவுள் அவரைத் தண்டிப்பார் என்று ஊரார் சொன்னார்கள். ஆனால் பதவி உயர்வு, மேலும் அதிகாரம் என்று மற்றவர்களை மிரட்டிக்கொண்டு அவர் வித்தியாசமாகத்தான் வாழ்கிறார். அக்கிர மங்கள் செய்பவருக்கான தண்டனைகளை தெய்வம் தள்ளிப்போடுகிறதா? அல்லது மொத்தமாகத் தூக்கியேவிட்டதா?"

எங்கேயோ பார்வைக்கு எட்டாத தொலை வில் அமர்ந்து குற்றம் செய்பவர்களைப் பற்றிய குறிப்புக்களைத் தன் நோட்டுப்புத் தகத்தில் கடவுள் பதிவு செய்து கொண்டு இருக்கிறார். என்று நீங்களாக கற்பனை செய்து கொண்டால் அதற்கு யார் பொறுப்பு?

உங்கள் கடமையையும் எனது கடமை யையும் கடவுள் ஆற்றிவிடுவார் என்று வாழாவிருப்பது எந்த விதத்தில் புத்திசாலித் தனம்? நீங்கள் குற்றம் புரிந்த போதும் கடவுள் வேடிக்கைதானே பார்த்துக்கொண் டிருக்கிறார். ஒருவரிடம் இருந்து எதையோ நீங்கள் தட்டிப்பறித்தால்தான் குற்றம் என் றில்லை... அது அவருக்குக் கிடைக்காமல் செய்வதுகூட குற்றம்தான்.

அடுத்தவரின் வறுமை என்பது அன்றாடம் நாம் நிகழ்த்தும் குற்றம்தான். உலகில் பாதி சனத்தொகை பசியோடு இருக்கும் போது உங்கள் வயிற்றை நிறைத்துக் கொள்வது கூட, பட்டினிகிடப்பவரின் வயிற்றுக்கு எதிராக நிகழ்த்தும் குற்றம்தான்!

உங்கள் வசதிகளுக்காக சுற்றுச் சூழலை மாசுபடுத்துவதும், இயற்கையை சிதைக்க முற்படுவதும் பல்லாயிரக்கணக்கான உயிர் களுக்கு எதிராக நீங்கள் நடத்தும் குற்றம் தான்.

சகமனிதனை மொழி, நிறம், மதம், இனம் என்று எந்த வேறுபாடு காட்டி குறைத்துப் பார்த்தாலும் அது மாபெரும் குற்றம்தான்.

ஆனால் பல இலட்ச வருடங்களாக மனி தன் புரிந்து வரும் இக்குற்றங்களை கடவுள் தட்டிக்கேட்கவில்லை; எதையும் திருத்தித் தரவில்லை என்பது கண்கூடு.

இன்னும் 'அவர் பார்த்துக்கொள்வார் என்றிருந்தேன் என்று சொல்வது பொறுப் பற்ற பேச்சு!

**"அப்படியானால்,தவறு செயபவரைக் கடவுள் தண்டிக்கப்போவதில்லையா? நல்ல வர்களுக்குத்தான் துன்பங்கள் தருவாரா?"**

அக்பரின் அரசவை கூடியிருந்தது.

"இந்தப்பூமியிலேயே நீதான் மகச்சிறந்த வீரன்" என்றார் ஒரு அமைச்சர். "உனக்கு இணையான கொடைவள்ளல் இவ்வுலகில் இல்லை" என்றார் ஒரு புலவர்.

இப்படி ஒவ்வொருவரும் பரிசுகளுக்காக வும் பதவிகளுக்காகவும் பலவாறு அக்பரை புகழ்ந்துகொண்டிருந்தார்கள். பீர்பாலின் முறைவந்தது. அவர் என்ன சொல்லப்போகி றார் என்று அரசர் ஆவலோடு கவனித்தார்.

"மன்னா, நீங்கள் கடவுளை விடப் பெரி யவர்" என்றார் பீர்பால்.

கூடியிருந்தவர்கள் திடுக்கிட்டனர்.

அக்பர் அதிர்ந்தார். "என்னது... அல்லா வைவிட நான் பெரியவனா? கடவுளையே குறைத்து மதிப்பிட்டதற்காக உன்னை நாடு கடத்துகிறேன்" என்று சீறினார்.

பீர்பால் சிரித்தார். "மன்னா... இப்போது தெரிகிறதா, நீங்கள் கடவுளைவிட பெரியவர் என்று? உங்கள்இராஜ்யத்திலிருந்து என்னை வெளியேற்ற முடியும். ஆனால் கடவுள் எங்கே என்னை இடம்பெயர்த்தாலும் தன் இராஜ்யத் திலிருந்து என்னை வெளியேற்ற முடியாது!"

அரசன்தண்டனைஅளிக்கமுடியும். ஆனால் கடவுளின் சாம்ராஜ்யத்தில் யாருக்கும் தண் டனை கொடுக்கப்படவதில்லை.

உங்கள் வாழக்கையை ஒழுங்காக வாழத் தெரியாமல், துன்பங்கள் வரும்போது கடவுள் உங்களை தண்டிக்கிறார் என்று அவர்மீது பழிபோடுவது அறிவீனம்.

ஒரு விடயத்தப் புரிந்துகொள்ளுங்கள்... செல்வமோ, இராஜ்யமோ,பதவியோ,போரில் வெற்றியோ அடைந்தவர்கள் அனைவரின் பின்னாலும் தந்திரங்களும், ஏமாற்று வேலை களும் நிறைந்திருக்கின்றன.

## யார் குற்றம் புரியவில்லை?

நீங்கள் அமர்ந்திருக்கிறீர்களே, அந்த அறை உங்களுக்கு வசதியாக இருப்பதற்காக எத்தனை உயிர்கள் அங்கிருந்து இடம் பெயர்க்கப்பட்டன? உங்களுக்குப் பூச்சிகள் சிறியனவாக தோன்றுவது போலவே, வேறொரு மனிதருக்கு நீங்கள் சிறியவராக இருக்கிறீர்கள்.

ஓர் எறும்பை நசுக்கும் அதே வேகத்தில் சகமனிதனையும் ர சுக்முடியும். பல நூற் றாண்டுகளாக, தங்கள் நோக்கத்தை நிறை வேற்றிக்கொள்வதற்குத் தடையாக இருந்த மற்ற மனிதர்களை இப்படித்தான் வலிய வர்கள் சுலபமாக நசுக்கி வந்திருக்கிறார்கள்.

ஒவ்வொரு வசதிக்குப்பின்னாலும் ஒரு குற்றம் இருக்கிறது.

சமூகத்தின் ஒப்புதல் கிடைக்கும் வண் ணம் அதைச் சாதுர்யமாக நிகழ்த்தினீர் களா அல்லது சமூகத்தின் எதிர்ப்போடு நிகழ்த்தினீர்களா? என்பதுதான் மாறுபடும்.

"அப்படியானால் குற்றங்கள் புரிந்து விட்டுத் தப்பித்துவிடலாமா?"

அப்படியல்ல வாழ்க்கைச்சக்கரம் அதற் கென்று சில நியதிகளை வைத்திருக்கிறது எது உங்களால் மற்றவருக்கு அளிக்கப் பட்டதோ அது உங்களுக்கே திரும்பவந்து சேரும். மனிதர்களை வேண்டுமானால் விரட்டி உங்கள் விருப்பப்படி இயங்கச் செய் யலாம்.ஆனால் வாழ்க்கை அதன் போக்கில் உங்கள் கையை மீறியல்லவா நடக்கிறது?

துரதிஷ்ட வசமாக , குற்றங்கள் பற்றிய நம் கருத்தில் குழப்பம் இருக்கிறது. ஒரு காலத்தில்,1000யானைகளைக் கொன்ற வனை வீரன் என்று புகழ்ந்தார்கள். இன்று யானைகளைக் கொல்பவன் சமூகவிரோதி!

குற்றங்கள் பற்றிய நம் பார்வை சமூ கத்தைச்சார்ந்ததாகவே இருக்கிறது. அத னால், இடத்துக்கு இடம் காலத்துக்குக்காலம் அது வளைகிறது; உடைகிறது; சிதைகிறது.

நம்பார்வை உயிர்த்தன்மையைப் பற்றி யதாக இருக்கவேண்டும். உயிர்தன்மைக்கு எது சாதகமானது, எது எதிரானது என்று கவனிக்கும் பக்குவம் வேண்டும். உயிர்த் தன்மைக்கு எதிரானவற்றை குற்றங்களாக அறிந்திருந்தால், உண்மையான அமுதம் எது, விஷம்எது என்று புரிந்துவிடும். எத்தனை இலட்சம் வருடங்களானாலும் அது மாறாது!

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# இலக்கியத்தில் இணைந்த நண்டு

## 01

நண்டுக்கும் எனக்குமான முதல் அறிமுகம் கடற்கரையில் நிகழ்ந்தது. அப்போது நாமெல்லாம் ஐந்து வயதுக்குட்பட்ட சிறுமிகள். கடற் கரை மணலில் இருக்கின்ற சிறுசிறு குழிகளைப்போல இருக்கின்ற பொந்துகளுக்குள் ஓடி ஒளியும் சின்னஞ்சிறு நண்டுகளைக் கலைத் துக் கலைத்து ஓடிப்பிடித்து விளை யாடிய ஞாபகம்.

"எட்டுக்காலூன்றி ஒரு கால் படமெடுத்து வட்டக் குடைபிடித்து வருகிறாராம் வன்னி யார்." அவர்யார்? என்று யாரோ விடுகதை கேட்டு யாரோ பதில் சொல்ல இருபுறத்தையும் மாறிமாறி கண்விரியப் பார்த்தபடி இருக்க நண்டு அதற்குரிய தோற்றத்தோடு மனதில் இடம்கொண்டது.

பிறகு கொஞ்சம் வளர "வழி கோலிகள் பாலங்கட்டுகிறார்கள்" என்றொரு பாடம் படித்த தமிழ்ப் புத்தகத்தில் இருந்தது. அதில் சில சிறுவர்கள் சேர்ந்து நண்டுபிடிக்க கடலுக்குச் செல்வதுபோல அந்தப் பாடம் அமைந்திருந்தது. அதனால் அது சாப்பிடச் சுவையான தென் பதும் ஐயோபாவம் என்றொரு பரிதாபமும் மனதில் மேலாங்கியது.

அதன் உருவம் சற்றே வினோத மானது தலையில்லாத கடினமான ஓடு. உள்ளே அதற்கு முற்றிலும் பொருத்தமில்லாமல் மென்மையான சதை. ஓட்டின் இரு ஓரத்திலும் 360 பாகையில் உருளும் கண்கள், ஆறு கால்கள், முன்னாலே இரண்டு கொடுக்குகள். நேராக முன்னால் போகாமல் (கரையால்) பக்கமாக நடக்கும் அதன் தனித்துவப்பாணி. நீலம் , வெள்ளை , பவள நிறத்தில் இருந்து கறுப்புநிறம் வரையானததாக இருக்கும் அதன் வர்ணங்கள். கண் ணாடிபோல இருக்கும் பெருவாரியாக ஓடும் குஞ்சுகள். கடற்கரை வளை களுக்குள்ளும் கடலுக்குள்ளும் அவை ளின் வாழ்வென அது ஒரு வினோதப் பிராணியாகத் தோன்றியது.என் வளர் பருவத்தில்.

கான்சர் என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் இவ்வுயிரினம் இராசி அமைப்பில் விருட்சிக இராசிக்கு அடயாளமாகவும் சுட்டப்படுகிறது. இந்த இராசியினால் சுட்டப்படும்

**"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"**

மக்களும் வெளிபப்டையாக கடின மானவர்களாகத் தோன்றினாலும் அவர்கள் மனம் நண்டின் உட்புறச் சதைகள் போல மென்மையான மன இயல்பைக் கொண்டிருப்பார்கள் என்று அவ்இராசியினரை ஜோதிடர் கள் இந்நண்டை உவமையாக்கிக் கொள்வதும் வர்ணிப்பதும் வழக்கம்.

இதன் கண்களைப்பற்றிச் சொன் னேன் அல்லவா? அதன் கண்களைச் சங்கத்துப்புலவர்கள் எப்படிப் பார்த் திருக்கிறார்கள் தெரியுமா? அவை நொச்சி அரும்பினைப்போல என்று கார் நாற்பது என்ற இலக்கியத்தில் கண்ணங்கூத்தனாருக்குப் பட்டிருக் கிறது. வீணையின் நுனிப்புறத்தில் நரம்புகளை முறுக்கேற்றுவதற்காக இருக்குமே சுற்றத்தக்கதான கட்டை. அதுபோலத்தோன்றி இருக்கிறது பெரும்பாணாற்றுப் படைப்புலவ ருக்கு. அதன் பாடல்வரி இதுதான்..

*அலை வாழ் அலவன் கண்கண்டன்ன*
*துளை வாய் தூர்ந்த துரப்பு அமை ஆணி*
பெருநாராற்றுப்படை:10)

நண்டுக்கு எட்டுக்கால்கள் இருந் தென்ன பயன்! அதற்கு நேராக நடக்கத்தெரியாதே என்று சமூகத்தில் தமக்கெனத் தனித்துவமான பாதையை அமைத்துக்கொண்டவர்களைப் பற்றி சமூகம் நண்டை முன்வைத்து ஒரு விமர்சனம் முன்வைக்கும். முன்னோக் கிப்போகாமல் கரைப்புறமாக) பக்கமாக அது ஓடுவதை பார்ப்பதும் வெகுவினோதம்தான் அது தோற்றத் திலும் நடக்கும் இயல்பிலும் நீரிலும் நிலத்திலும் வாழும் தன்மையிலும் தனித்துவமானது.

அவுஸ்திரேலியாவில் ஆசிய நாட்ட வரின் பெருக்கம் அதிகமாக இருப்ப தாலோஎன்னவோ கடல் உணவுகள் இங்கு மகாபிரசித்தம். வினோதமான இந்தப்பிராணியை மீன் மாக்கெற் களில் அதன்கொடுக்கு இரண் டையும் சணல் கையிற்றினால் கட்டி உயிரோடு விற்பனைக்கு வைத்திருப்பார்கள். சினை உள்ள நண்டு, ஆண் நண்டு, பெண்நண்டு எவையெவை என்பது பற்றியும் பௌர்ணமி நாட்களில் பிடிக்கப்படும் நண்டு நல்லதில்லை என்றும் அமாவாசைகளில் பிடிக்கப் படும் நண்டு நல்ல சதைப்பிடிப் பானவையாக இருக்கும் என்றெல் லாம் அவர்களிடம் ஒரு கணக்கு இருக்கும். சந்தைகளில் அதனை தூக்கிப் பார்த்தே அதன்சுவை தரம் சொல்லத்தெரிந்தவர்கள் வியட் நாமியப் பெண்கள்.

அதிலும் சீனா, வியட்நாம், ஜப்பான், கொரியா, தாய்லாந்து, கம்போடியா நாட்டவருக்கு கடலு ணவுகளுக்குள்ளும் நண்டு , இறால், கணவாய் என்றால் மகாபிரியம்.

யசோதா பத்மநாதன்
அவுஸ்திரேலியா

கட்டாயம் அவர்கள் சாப்பாட்டில் ஒரு கடலுணவு இருக்கும் நண்டின் சதை மட்டும் தனியாகக் கிடைக்கும் அவர்களது கடைகளில். உணவு விடுதிகளில் நண்டினை முழுசாகவும் அதன் பவளநிறம் கெடாமலும் சலாது இலைகளால் அலங்கலரித்துக் கொண்டுவந்து வைத்திருப்பதைப் பார்ப்பதே ஒரு அழகுதான்.

(தொடரும்)

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# கழிவு நீர்ப் பரிகரிப்பில் ஈரநிலங்களின் பயன்பாடு

**தொடர்ச்சி...**

நுண்ணுயிர்களினால் மேற்கொள்ளப்படுகின்ற நைதரசன் பதித்தல், நைதரசன் இறக்கல் செயற்பாடுகளின் விளைவாக கழிவு நீரிலிருந்து நைதரசன் அகற்றப்படுகின்றது. ஒட்சிசன் ஆனது சேதன மாசுக்களின் உயிர்ப் பிரிந்தழிகைக்கு உதவுகின்ற அதேவேளையில் காபனுடன் இணைந்து நைதரசன் பதித்தல் செயன்முறையையும் வலுவூட்டுகிறது. அத்தோடு ஆவியாதல் என்னும் பௌதீகச் செயன்முறையும் நைதரசன் அகற்றலில் முக்கிய பங்களிப்பைச் செய்கிறது. அடிப்படையில் உருவாகும் உயிர்ப்படலங்களும் அடையல்களில் காணப்படும் நுண்ணுயிர்களும் கழிவு நீரிலிருந்து பொசுபரசை அகற்றுவதில் முக்கிய பங்காற்றுகின்றன.



தாவரங்கள் நீரில் கரைந்துள்ள போசணைக் கூறுகளையும் ஏனைய மாசுக்களையும் உள்ளெடுத்து, அவற்றைத் தாவர உயிர்த் திணிவாக மாற்றுகின்றன. இப் போசணைக் கூறுகளும் மாசுக்களும் தாவர உடற்பகுதிகளினூடாக அசைந்து தரைக்கீழ் சேமிப்பு அங்கங்களைச் சென்றடைகின்றன. பின்னர் தாவரங்கள் முதிர்ச்சியடைந்து இறக்கும்போது இவை அடையல்கள் மீது படிவடைகின்றன.

ஈரநிலங்களில் காணப்படும் நுண்ணுயிர்கள் சூழ்நிலைப் பொருட்களைத் திரட்டி, நிலைப்படுத்தி, நீரில் கரைந்துள்ள சேதனப் பதார்த்தங்களையும் சூழ்நிலையிலுள்ள சேதனப் பதார்த்தங்களையும் பல்வேறு வாயுக்களாகவும் புதிய கல இழையங்களாகவும் உருமாற்றி அகற்றுகின்றன. ஈரநிலங்களில் காணப்படும் பெருமளவு நுண்ணுயிர்கள் மரபு ரீதியான உயிரியல் பரிகரிப்புத் தொகுதியில் காணப்படும் நுண்ணுயிர்களை ஒத்தவை.

ஈரநிலத் தொகுதிகளின் செயன்முறை வீதம் பல்வேறு காரணிகளில் (வெப்பநிலை, PH, ஒட்சிசன் கிடைக்கப்பெறும் அளவு, நீரோட்டத்தின் தன்மை, மாசுக்களின் அளவு) தங்கியுள்ளது. சில குறிப்பிட்ட சூழல் நிபந்தனைகளின் கீழ் ஈரநிலத் தொழிற்பாட்டு வீதமானது குறைவடையலாம், முற்றாகத் தடுக்கப்படலாம் அல்லது முற்றிலும் எதிரான அதாவது மாசுக்களை வெளிவிடும் செயற்பாடாக மாறலாம்.

தாவர வேர்ப்பகுதியிலும் உயிர்ப் படலப் பகுதியிலும் நிகழும் உயிரியல் செயற்பாடுகள் மிகவும் உணர்திறன் மிக்கவை. பொதுவாக உயிரியல் செயற்பாடுகளைச் சார்ந்துள்ள மாசகற்றல் பொறிமுறையின் வினைத்திறனானது குறைந்த வெப்பநிலையில் நுண்ணுயிர்களின் அனுசேபத் தொழிற்பாடுகள் குறைவடைவதனால் குறைவடைகின்றது. பெரும்பாலான அனுசேப, இரசாயனச் செயற்பாடுகள் ஊடகத்தின் PHஇல் தங்கியுள்ளன. எனவே ஊடகத்தின் PH ஒரு குறிப்பிட்ட அளவைவிட அதிகரிக்கும்போதும் குறைவடையும் போதும் இச்செயற்பாடுகளின் வினைத்திறன் குறைவடைகின்றது.

நீரோட்ட வீதமும் மாசாக்கிகள் சேரும் வீதமும் ஈரநிலங்களின் பரிகரிப்புக் கொள்ளளவைக் கட்டுப்படுத்துகின்றன. ஈரநிலச் செயற்பாடுகளில் மிதமிஞ்சிய சேதனப் பதார்த்தங்கள், போசணைக்கூறுகள், $O_2$ பற்றாக்குறை போன்ற பிற காரணிகளும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

### ஈரநிலங்களின் அனுகூலங்களும் வரையறைகளும்

கழிவு நீரைப் பரிகரிப்பதற்கு எளிய, செலவு குறைந்த, வினைத்திறன் மிக்க, நம்பகமான தெரிவு ஈரநிலங்கள் ஆகும். ஈரநிலச் செயற்பாடுகளின் பிர்தான அனுகூலங்களாவன:

★ இவற்றின் செயற்பாட்டிற்குச் சூரிய சக்தியே போதுமானது.

★ மிகக் குறைந்தளவு பராமரிப்புடனேயே உயர்மட்ட கழிவுநீர்ப் பரிகரிப்பை அடையலாம்.

★ உறுதியற்ற நீரோட்டத்தினையும் அளவுக்கதிகமான மாசாக்கிகளையும் ஈரநிலங்கள் ஒப்பீட்டளவில் சகித்துக் கொள்ளக்கூடியவை. இதனால் ஈரநிலங்களில் பரிகரிக்கப்பட்ட கழிவு நீரின் தரம் உறுதிப்படுத்தப்படுகின்றது.

★ மரபு ரீதியான கழிவுநீர்ப் பரிகரிப்புத் தொகுதிகளைப் போலல்லாது ஈரநிலங்கள் குறிப்பிட்ட வாழ்க்கைக் காலத்தை கொண்டிருப்பதில்லை. காலத்திற்கேற்ற வகையில் கழிவு நீர்ப் பரிகரிப்புக் கொள்ளளவைப் பேணக்கூடியவை.

★ ஈரநிலத் தாவரங்கள் பசுமையான சூழலை உருவாக்குவதுடன் உயிரினங்களின் வாழ்விடமாகவும் சிறந்த பொழுது போக்கிடமாகவும் ஈரநிலங்கள் அமைய வழிவகுக்கின்றன.

**ஈரநிலங்கள் மேற்கூறிய அனுகூலங்களைக் கொண்டிருந்த போதிலும் அவற்றின் வினைத்திறன் மிக்க செயற்பாட்டிற்குச் சில வரையறைகளும் இருக்கத்தான் செய்கின்றன.**

★ மரபு ரீதியான கழிவு நீர் பரிகரிப்புத் தொகுதிகளுடன் ஒப்பிடுகையில் ஈரநிலங்களில் ஒத்த கழிவுநீர்ப் பரிகரிப்பு மட்டத்தை எய்துவதற்குப் பாரிய நிலப்பரப்புத் தேவைப்படுகின்றது. எனவே பெருமளவில் கழிவு



நீரை உருவாக்கும் நகரங்களில் மையப்படுத்திய கழிவு நீர்ப் பரிகரிப்பினை மேற்கொள்வதற்கு இம்முறை பொருத்தமற்றதாகும்.

★ கழிவு நீர்ப் பரிகரிப்பில் உச்ச வினைத் திறனை அடைவதற்கு ஈரநிலத் தொகுதிகள் நீண்ட காலங்களை குறிப்பாக 2 அல்லது 3 வளர்ச்சிப் பருவங்களை எடுத்துக்கொள்கின்றன.

★ ஈரநிலத் தொகுதிகள் பெரிய நிலப் பரப்புகளில் பரந்து காணப்படுவதால் இவற்றினுடைய செயற்பாடானது புயல், காற்று, வெள்ளப்பெருக்கு போன்ற அனர்த்தங்களால் இலகுவாகப் பாதிப்படைகின்றது.

★ நுளம்புகள், ஏனைய பீடைகள், பூச்சிகள் என்பன ஈரநிலங்களைத் தமது இனப்பெருக்கத்திற்காகப் பயன்படுத்துகின்றன. இது ஒரு பாரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ள போதிலும் அண்மைக்கால நுளம்பின் குடம்பிகளை உண்ணும் மீனினங்களையும் சில வகை பற்றீரியாக்களையும் ஈரநிலங்களில் வளர்ப்பதன்மூலம் நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தலாம் எனக் கண்டறிந்துள்ளன.

**கலாநிதி திருமதி மீனா செந்தில்நந்தனன்,**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
இரசாயனவியற்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

தற்போது எமது பிரதேசத்தில் உரிய முறையில் பரிகரிக்கப்படாது வெளியேற்றப்படும் கழிவு நீரானது யாழ்.குடாநாட்டின் வரப்பிரசாதமான நிலத்தடி நீரை மாசுபடுத்துவதில் பிரதான காரணியாக அமைந்துள்ளது. ஈரநிலத் தொகுதிகள் எமது பிரதேசத்தின் கழிவு நீர்ப் பரிகரிப்புக்கு உகந்த சிக்கனமான, எளிய, வினைத்திறன் மிக்க ஒரு சிறந்த மாற்றுத் தெரிவாக அமையுமென்பதில் சிறிதும் ஐயமில்லை.

(முற்றும்)

## வாரத்திற்கு ஒரு புதிர்! 41


**Dewey Decimal Classification என்பது என்ன தேவைக்காக பயன்படுத்தப்படுகின்றது?**

**விடைகளை 05.06.2011 இற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:**

**Mr.S.Ketheeswaren**
Editor, Section A
Jaffna Science Association
Library
University of Jaffna, Jaffna.

**சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.**

இப் பணப்பரிசினை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட தாவரவியல் துறையில் கலாநிதி பி.செவ்வேளிடம் (தலைவர் பிரிவு A) நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.



**பரிசுக்கு அனுசரணை வழங்குவோர்:**
மக்கள் வங்கி,
யாழ்.பல்கலைக்கழகம்.

**புதிர் 40க்கான 250/-பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**



**கைலாயநாதன் கௌரீஷன்**
**இல.425, நாவலர் வீதி,**
**ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.**

**புதிர் 40 இற்கான கேள்வியும் விடையும்:**

**பாலையும் அதன் உற்பத்திப் பொருட்களையும் பற்றி கற்கும் விஞ்ஞானத்தை எவ்வாறு ஆங்கிலத்தில் அழைப்பர்?**

**- Dairy Technology**

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்
## புதிர் இல. 41

சரியான விடை :........................................
முழுப்பெயர் :........................................
முகவரி :........................................
:........................................
தொ.பே. இல :........................................
கையொப்பம் :........................................

**07) கீழே சில சேவைகள் தரப்பட்டுள்ளன. அவை எந்தெந்தச் சேவைகளின் கீழ் அடங்கும் என அறிந்து அச்சேவைகளின் பெயர்களையும் படத்தில், அம்புக்குறியினால் குறிக்கப்படும் நபர்களின் பெயர்களையும் எழுதுக.**




1) நபரின் பெயர் 1) ............... 1) ............ 1)...........
2) சேவையின் பெயர் 2) ............ 2) ............ 2)...........

*(06 புள்ளிகள்)*

**08) கீழ்வரும் படங்களின் ஆங்கிலச் சொற்களையும் சிங்களச் சொற்களையும் ஒழுங்குமுறையில் எழுதுக.**




ஆங்.- 1) ............ 2) ............ 3) ............ 4) ..........
சிங்.- 1) ............ 2) ............ 3) ............ 4) ..........

*(08 புள்ளிகள்)*

**09) கீழே கூட்டினுள் சில காரணங்கள் தரப்பட்டுள்ளன. அதன் கீழ்வரும் கூற்றுக்களுக்குப் பொருத்தமான காரணங்கள் ஆங்கில எழுத்துக்களை கூற்றுக்களின் எதிரே பொருத்தமாக எழுதுக.**

**காரணங்கள்**


A) நுண்ணங்கிகள் அழிக்கப்படுகின்றமையால்.
B) நஞ்சாக மாறுவதற்கு சந்தர்ப்பம் அதிகம் உள்ளமையால்.
C) விற்றமின் முதலான போசணைச் சத்துக்கள் இழக்கப்படுகின்றமையால்.
D) உடலில் உள்ள நீர் வியர்வையாக வெளியேறுகின்றமையால்.
E) பற்றீரியா பங்கஸ் போன்றவற்றின் தாக்கத்தினால் ஆகும்.

**கூற்றுகள்**

1) உணவுப்பொருட்கள் பழுதடைகின்றன. (.............)
2) பச்சையாக உண்ணும் உணவுகளை உப்புநீரில் கழுவிய பின்னரே உண்ணவேண்டும். (.............)
3) சோறு சமைக்கும்போது மேலதிக நீர் வடிந்து வெளியேறுகிறது. (.............)
4) இஞ்சியையும் மரவள்ளிக்கிழங்கையும் சமநேரத்தில் உணவாக உட்கொள்ளக் கூடாது. (.............)
5) மழைக்காலங்களை விட வெயில் காலங்களில் தாகம் எடுப்பது மிகவும் அதிகமாகும். (.............)

*(05 புள்ளிகள்)*


**10) கீழே நான்கு நண்பர்களின் சுடுநீர் குடுவைகள் காணப்படுகின்றன. அவற்றிலுள்ள தேநீரின் அளவுகளைக் கொண்டு கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.**




1) பாபுவினதும் சோமுவினதும் தேநீரின் அளவுகளைக் கூட்டி எழுதுக.
..........................................................
2) ராமுவினது தேநீரிலிருந்து கோபுவினது தேநீரின் அளவைக் கழித்து எழுதுக.
..........................................................
3) சோமுவினது தேநீரின் அளவுபோல் மூன்று மடங்கு அளவு யாது?
..........................................................
4) பாபுவின் குடுவையிலுள்ள தேநீரின் அளவை நான்கு பேருக்குச் சமமாகப் பங்கிட்டால் ஒருவருக்குக் கிடைக்கும் தேநீரின் அளவு யாது?
..........................................................
5) நான்கு குடுவைகளிலுமுள்ள தேநீரின் அளவினைக் கூட்டி எழுதுக.
..........................................................

*(10 புள்ளிகள்)*

**11) கீழ் உள்ள A, B ஆகியவை இரு சதுரக் காணிகளாகும். அவற்றை அவதானித்து கேட்கப்படும் வினாக்களுக்கு விடை தருக.**





1) i) காணி A யில், D யிலிருந்து E வரையான நீளம் யாது? (.............)
ii) காணி B யில், E யிலிருந்து F வரையான நீளம் யாது?(.............)
iii) காணி B யில், F யிலிருந்து G வரையான நீளம் யாது?(.............)
iv) காணி B யில், I யிலிருந்து E வரையான நீளம் யாது?(.............)

*(04 புள்ளிகள்)*

2) i) காணி A யினது சுற்றளவு யாது? (.........................)
ii) காணி B யினது பரப்பளவு யாது? (.........................)
iii) C யிலிருந்து I ஊடாக F இற்குச் சென்று, G யை அடைய எத்தனை மீற்றர் நடக்க வேண்டும்? (.........................)
iv) D யிலிருந்து F ஊடாக G யிற்கு செல்லும் தூரத்திற்கும், D யிலிருந்து C ஊடாக H இற்கு செல்லும் தூரத்திற்கும் இடையே எத்தனை மீற்றர் வித்தியாசம் உண்டு?
..........................................................


*(08 புள்ளிகள்)*

**12) கீழே இரண்டு ஆரம்ப விஞ்ஞானச் செயற்பாடுகள் காணப்படுகின்றன. அவற்றின் கீழ் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை எழுதுக.**




1) இப்படத்தில் கேத்திலில் நீர் நிரப்பப்பட்டு அடுப்பில் வைத்து சூடாக்கப்படுகின்றது.
i) கேத்தலின் வாயினால் வெளியேறுவது யாது? (.............)
ii) B யில் யாது நிகழும்? (.............)

*(04 புள்ளிகள்)*



2) மெழுகுதிரிச் சுவாலையில் கம்பியொன்று பிடிக்கப்படுகின்றது.
i) கம்பியில் நிகழும் மாற்றம் யாது?(........)
ii) இச்செயற்பாடு எதனைக் கண்டறிவதற்காகச் செய்யப்படுகின்றது? (.............)

*(04 புள்ளிகள்)*

**13) கீழ்வரும் படங்களின் பெயர்களைப் புள்ளிக்கோடுகளில் எழுதுக.**



1) ............. 2) ............. 3) ............. 4) ...............

*(04 புள்ளிகள்)*

**14) கீழுள்ள வித்துக்களின் பெயர்களை வாசித்து, அதன்கீழ் தரப்பட்டுள்ள வாக்கியங்களுக்குப் பொருத்தமான வித்துக்களின் பெயர்களை புள்ளிக் கோட்டில் எழுதுக.**

| | | | |
|---|---|---|---|
| கத்தாப்புக் | கொட்டை | தாமரை | மரமுந்திரி |
| எருக்கலை | குன்றிமணி | தக்காளி | பலா |

1) அவித்தும், பொரித்தும் உண்ணக்கூடிய வித்து எது?
..........................................................
2) மிளகாய் வித்தைப் போன்ற அமைப்பையுடைய இன்னொரு வித்து எது? ..........................................
3) நிழற்தாவரம் ஒன்றின் வித்து எதுவாக இருக்கும்?
..........................................................
4) பழத்தின் வெளியே தள்ளிக் கொண்டிருக்கும் வித்து எது?
..........................................................
5) கறுத்த முகையுள்ள சிவப்பு வித்து எது? ....................
6) நீரினால் பரவும் வித்து ஒன்று எது? ......................
7) வெடித்துப் பரவும் வித்து ஒன்று எது? ....................

*(07 புள்ளிகள்)*

**15) நீர் தொலைக்காட்சியிலோ அல்லது நேரிலோ பார்த்து ரசித்த ஒரு நிகழ்ச்சி பற்றிய உமது உணர்வுகளை நான்கு சொற்களுக்குக் குறையாத 6 வாக்கியங்களில் எழுதுக. (நாடகம், நடனம் மற்றும் உம்மைக் கவர்ந்த ஏதாவது ஒரு நிகழ்ச்சி)**

i) ..........................................................
ii) ..........................................................
iii) ..........................................................
iv) ..........................................................
v) ..........................................................
vi) ..........................................................

*(12 புள்ளிகள்)*

# சிறுவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தாத சிறுவர் இல்லங்களுக்கு எதிராக நடவடிக்கை

## அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

சிறுவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தாத சிறுவர் இல்லங்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக சிறுவர் மற்றும் மகளிர் மேம்பாட்டு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பாக தெளிவூட்டும் நடவடிக்கைகள் சிறுவர் மற்றும் மகளிர் நன்னடத்தை திணைக்களத்தின் ஊடாக மேற்கொள்ளப்படுவதாக அமைச்சர் திஸ்ஸ கரலியத்த சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த காலத்தில் சிறுவர் இல்லங்கள் சிலவற்றில் இருந்து பிள்ளைகள் காணாமற்போன சம்பவங்கள் பதிவாகின.

இந்த சம்பவங்கள் குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். சிறுவர் இல்லங்களிலுள்ள பெண் பராமரிப்பாளர் தொடர்பாக எதிர்காலத்தில் புதிய அறிவுறுத்தல்கள் அறிமுகப்படுத்தப் படவுள்ளன.

அரச மற்றும் தனியார் பிரிவுகளின் ஊடாக ஐநூறிற்கும் அதிகமான சிறுவர் இல்லங்கள் நிர்வகிக்கப்படுவதாக அமைச்சர் திஸ்ஸ கரலியத்த சுட்டிக்காட்டியுள்ளார்.

சிறுவர் இல்லங்களிலுள்ள பிள்ளைகளின் பாதுகாப்பை கருத்திற்கொண்டு எதிர்காலத்தில் முறையான திட்டங்கள் தயாரிக்கப் படவுள்ளதாக அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (ஶ்ரீ-2)

## வருடாந்த பொங்கல்

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் தெல்லியம்பற்றை ஶ்ரீ ஞான வைரவர் சுவாமி ஆலயத்தில் நாளை சனிக்கிழமை காலை 6 மணிக்கு வழுந்துப் பானை வைத்து பெரும் பொங்கல் நடைபெறவுள்ளது.

ஆண்டுக்கு ஒரு முறை நடைபெறும் இப் பொங்கல் விழாவில் அடியவர்கள் அனைவரையும் பங்கேற்குமாறு உபயகாரர் அறிவித்துள்ளார். (ஶ்ரீ-2)


## மகிழ்வூட்டல் செயலமர்வு

(பூநகரி)

கிளிநொச்சி வலயத்தில் விசேட கல்வித் தேவையுடைய மாணவர்களுக்கான மகிழ்வூட்டல் செயலமர்வு கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலக வளவாளர்களால் கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரியிலும், கிளிநொச்சி பூநகரி ம.வி யிலும் நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இன்று இரண்டாவது நாளாக புனித திரேசா பெண்கள் கல்லூரியிலும் எதிர்வரும் 30,31 திகதிகளில் பூநகரி ம.வி யிலும் மகிழ்வூட்டல் செயலமர்வு இடம்பெறவுள்ளது.

கிளிநொச்சி வலயத்தைச் சேர்ந்த விசேட தேவைக்குரிய மாணவர்கள் ஏதாவதொரு நிலையத்தில் பங்குபற்றி பயனடைய முடியுமென தெரிவிக்கப்படுகிறது. (ஶ்ரீ-84)



யூனியன் அஷ்யூரன்ஸ் வாடிக்கையாளருக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவை அவரது உறவினரிடம் விற்பனை முகாமையாளர் கோ. சிறீவரதன் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# இவ்வருடத்தில் 18 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வர்த்தக நிலையங்களில் சட்டமீறல்கள்

(கொழும்பு)

இந்த வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் நுகர்வோர் சட்டங்களை மீறிய பதினெட்டாயிரத்திற்கும் மேற்பட்ட வர்த்தக நிலையங்களில் நுகர்வோர் விவகார அதிகார சபை திடீர் சோதனைகளை நடத்தியுள்ளது.

இந்த வர்த்தக நிலையங்களில் இருந்து 27 மில்லியன் ரூபா அபராதமாக அறவிடப்பட்டுள்ளதாக அதிகார சபையின் தலைவர் ரூமி மர்ஸுக் தெரிவித்தார்.

மேல் மாகாணத்திலேயே அதிகளவிலான வர்த்தக நிலையங்களில் திடீர் சோதனை நடத்தப்பட்டிருப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.

விலைப்பட்டியல் காட்சிப்படுத்தாமை அதிக விலைக்கு பொருட்களை விற்பனை செய்தல், காலாவதியான உணவுப் பொருட்களை விற்பனை செய்தல் உள்ளிட்ட பல்வேறு நுகர்வோர் சட்ட மீறல்கள் தொடர்பான திடீர் சோதனை நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (ஶ்ரீ-2)

# தரம்-5 மாணவர்களுக்கான வழிகாட்டல் பரீட்சை

(பூநகரி)

கிளிநொச்சி கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளிலிருந்து தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான வழிகாட்டல் பரீட்சை இன்று காலை 9.30 மணியளவில் கிளிநொச்சி வலயத்திலுள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் நடைபெறுமென கிளிநொச்சி வலயக் கல்வி பணிப்பாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

சகல பாடசாலை அதிபர்களும் பரீட்சை நடாத்துவதற்கான மண்டபங்களை ஒழுங்கு செய்து பரீட்சை விதிமுறைகளுக்கமைய நேரடியாக மேற்பார்வை செய்து தமது அறிக்கையினையும் விடைத்தாள் பொதிகளில் வைத்து மதிப்பீட்டு நிலையத்துக்கு அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளார்கள்.

இதில் கரைச்சி கோட்ட மதிப்பீடுகள் கிளி. கனகபுரம் ம.வி.யிலும் கண்டாவளை கோட்ட மதிப்பீடுகள் புளியம் பொக்கணை நாகேந்திர வித்தியாலயத்திலும் பூநகரிக்கோட்ட பாடசாலைகளுக்கான மதிப்பீடுகள் செல்வபுரம் அ.த.க.பாடசாலையிலும் பளைக் கோட்டத்திலான மதிப்பீடுகள் சோரன்பற்று கணேச வித்தியாலயத்திலும் நடைபெறும் மெனவும் 25 விடைத்தாள்களுக்கு மேற்பட்ட பாடசாலைகளிலிருந்து ஒரு ஆசிரியரை மதிப்பீட்டுப் பணிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளார்கள். (ஶ்ரீ-84)

# இலங்கைக்கு தங்கக் கட்டிகளுடன் வந்த இருவர் விமான நிலையத்தில் கைது

(கொழும்பு)

இலங்கைக்கு தங்கம் கொண்டு வந்த பயணிகள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களிடமிருந்து ஒவ்வொன்றும் 100 கிராம் எடை கொண்ட 16 தங்கக்கட்டிகளை விமான நிலைய சுங்கத் திணைக்கள புலனாய்வு பிரிவு அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

இந்திய கடவுச்சீட்டை வைத்திருந்த தம்மர் சமுத்திரம் என்பவர் சுங்க பரிசோதனை நிலையத்தில் சோதனைக்குள்ளாக்கப்பட்ட நிலையில் தங்கத்திலான பொருட்களை வைத்துள்ளீர்களாவென்று கேட்ட போது அதற்கு அவர் சரியாக பதிலளிக்கவில்லை. பின்னர் அவரது மலக்குடலிலிருந்து 10 தங்கக்கட்டிகளை சுங்கத்திணைக்கள அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

இதேவேளை இந்திய கடவுச்சீட்டை வைத்திருந்த முத்தையா ஆசைத்தம்பி என்னும் மற்றுமொரு நபர் பெறுமதியான பொருட்கள் எதுவும் கொண்டு வரவில்லையெனக் கூறினாலும் இறுதியில் அவரது மலக்குடலிலிருந்து 6 தங்கக்கட்டிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. (ஶ்ரீ-2)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

### அறிவித்தல்

### பட்டச்சான்றிதழ்கள்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கடந்த வருடங்களில் பட்டம் பெற்று இதுவரை தங்களது பட்டச்சான்றிதழ்களை வந்து பெற்றுக் கொள்ளாமல் இருப்பவர்கள் அச்சான்றிதழ்களை பல்கலைக்கழக சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/ அனுமதிகள் அவர்களின் அலுவலகத்தில் கீழ்வரும் ஆவணங்களைச் சமர்ப்பித்து 03.06.2011 இற்கு முன்பு பெற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகிறார்கள்.

சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்:-

01. பல்கலைக்கழக அடையாள அட்டை
02. பட்டதாரி அங்கியை மீள ஒப்படைத்தமைக்கான ஆவணம்

மேலதிக விபரங்களுக்கு 0212226714 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்
25.05.2011

(சி-3298)



## சிவாச்சார்யாபிஷேகம் சிறப்புற வாழ்த்துகிறோம்



வட்டுக்கோட்டை தெற்கு காக்கையம்பதி காளிகாம்பாள் ஆலயத்தில் சிறு வயதில் இருந்து பூசகராக சிறப்பாக கடமையாற்றி 27/05/2011 குருக்களாக சிவாச்சார்யா பிஷேகம் நிகழ்த்தப்பெறும்

**பிரம்மஶ்ரீ நடராஜசர்மா பிரசாந்தசர்மா**

(சிவாகம சாதக கலாரத்னா)

அவர்கள் அம்பாளின் நல்லருளினால் பல்வேறு உயர்வுகள் பெற்று தலை சிறந்த குருக்களாக விளங்க வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்
ஆலய பரிபாலன சபையும்,
வழிபடுவோரும்.

காளியம்பாள் ஆலயம்,
வட்டு தெற்கு.

(சி-3294)

# ஜனாதிபதி பதவி விலக மறுப்பதால் ஏமனில் உள்நாட்டுப் போர்?

(சனா)

ஏமனில் ஜனாதிபதி அலி அப்துல்லா சலே பதவி விலக மறுத்ததை அடுத்து அங்கு அவரது ஆதரவாளர்களுக்கும் பழங்குடியினருக்கும் ஏற்பட்டுள்ள மோதல் உள்நாட்டுப் போராக மாறும் வாய்ப்பு உருவாகியுள்ளது.

இந்நிலையில் இது உள்நாட்டுப் பிரச்சினை என்பதால் ஐ.நா.வுக்கு இதைக் கொண்டு செல்லமாட்டேன் என்று சலே கூறியுள்ளார்.

ஏமனில் ஜனாதிபதி சலே பதவி விலகுவதற்கான பரிந்துரைகளை வளைகுடா கூட்டுறவுக் கவுன்சில் முன்வைத்தது. அதில் கையெழுத்திடுவதாக மூன்றுமுறை போக்குக் காட்டிய சலே கடந்த 22 ஆம் திகதி வெளியிட்ட அறிக்கையில்,

தான் பதவி விலகினால் நாடு உள்நாட்டுப் போர் மற்றும் அல்கொய்தா வசம் சிக்கி விடும் என்று கூறி பதவி விலக மறுத்துவிட்டார்.

இதையடுத்து கடந்த மூன்று நாட்களாக ஏமனின் தலைநகர் சனாவில் ஜனாதிபதியின் ஆதரவாளர்களுக்கும் எதிர்க்கடசித் தலைவரான ஷேக் சாதிக் அல் அமரின் ஆதரவாளர்களான பழங்குடியினருக்கும் இடையில் கலவரம் வெடித்துள்ளது.

இக்கலவரத்தில் இதுவரை 44 பேர் பலியாகியுள்ளனர். தேசிய செய்தி ஒலிபரப்பு நிறுவனமான சபா தேசிய, விமான நிலைய அலுவலகமான ஏமனியா ஆகியவற்றின் கட்டடங்களை பழங்குடியினர் நேற்று முன்தினம் கைப்பற்றினர். தொடர்ந்து உள்துறை அமைச்சகக் கட்டடத்துக்கு தீ வைக்க முயன்றனர். கலவரம் தீவிரமடைவதை அடுத்து சனாவில் உள்ள மக்கள் அதன் தென்பகுதிக்கு தப்பியோடி வருகின்றனர்.

ஏமனின் முக்கிய எதிர்க்கட்சியான ஹாஷித் என்ற பழங்குடியினரின் கூட்டுக் குழுவின் தலைவராக அமர் செயற்பட்டு வருகிறார். கடந்த 24 ஆம் திகதி அவரது வீட்டின் மீது ஜனாதிபதியின் ஆதரவாளர்கள் சிலர் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியதில் அமைதி ஒப்பந்தம் ஏற்பட பணியாற்றிய ஒரு மூத்த அரசியல்வாதி காயம் அடைந்தார். பலர் பலியாகினர். இந்நிலையில் ஏமனில் இரு தரப்பினரும் உடனடியாக மோதலைக் கைவிட்டு அமைதி நிலவ வகை செய்யும் படி வளைகுடா நாடுகள் அனைத்தும் கோரிக்கை விடுத்துள்ளன. (ஸ்ரீ-2)

## பாகிஸ்தான் கடற்படைத்தளம் அமைப்பதற்கு உதவ சீனா மறுப்பு

(பீஜிங்)

பாகிஸ்தானில் 2 ஆவது கடற்படைத் தளம் அமைப்பதற்கு சீனா உதவ வேண்டும் என்று பாகிஸ்தான் இராணுவ மந்திரி அகமது முக்தார் கேட்டுக் கொண்டார்.


இந்தக் கோரிக்கையை ஏற்க சீனா மறுத்துவிட்டது.

பாகிஸ்தான் கடற்படை தளத்துக்குள் தலிபான்கள் புகுந்து தாக்குதல் நடத்திய தன் எதிரொலியாகத் தான் இவ்வாறு மறுப்பு கூறப்பட்டு இருக்கலாம் என்று தெரிகிறது.

பாகிஸ்தானில் கராச்சி நகரில் ஒரு கடற்படை தளம் உள்ளது. இதுதவிர கவ்தார் என்ற துறைமுகத்தில் இன்னொரு கடற்படை தளம் அமைக்க வேண்டும் என்று பாகிஸ்தான் சீனாவை வலியுறுத்தி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

## அமெரிக்க படையினரிடம் பின்லேடன் சிக்கக் காரணம் அவரது மனைவியே

### பாகிஸ்தான் அமைச்சர் தெரிவிப்பு



அமெரிக்க படையினரிடம் பின்லேடன் சிக்கியதற்கு அவர் இளம் மனைவி அமல் அல்சதா காரணமாக இருக்கலாம் என பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் ரஹ்மான் மாலிக் கூறியுள்ளார்.

அமெரிக்க உளவுத்துறையினர் அளித்த தகவல் படி பின்லேடன் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் இந்த தகவல் 100 சதவீதம் உறுதி செய்யப்படவில்லை எனவும் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா தெரிவித்தார்.

பின்லேடன் அமெரிக்க படையினரிடம் எப்படி சிக்கினார் என்பது பற்றி பாகிஸ்தானில் பல கருத்துக்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

இந்நிலையில் பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் ரஹ்மான் மாலிக் அளித்துள்ள பேட்டியில் கூறியிருப்பதாவது,


உறுதியான தகவல் கிடைக்காமல் அமெரிக்கப்படையினர் அபோதாபாத் மாளிகையில் நுழைந்திருக்கமாட்டார்கள். பின்லேடன் மாளிகையில் உள்ளவர்கள் அவர்களின் வயது உட்பட அனைத்து குறிப்புகளையும் சீல் பிரிவு கொமாண்டோக்கள் விட்டு சென்ற கையேடு புத்தகத்தில் உள்ளது.

இளம் மனைவி அமல் அல்- சதா பின்லேடனை காட்டிக் கொடுத்திருக்கலாம் என மற்ற இரண்டு மனைவிகள் குற்றம் சாட்டுகின்றனர். பின்லேடன் பற்றி அவரது வீட்டில் வசித்த ஒரு நபர்தான் நிச்சயம் தகவல் கொடுத்திருக்க வேண்டும் என ரஹ்மான் மாலிக் கூறியுள்ளார். (ஸ்ரீ-2)




## பாகிஸ்தான் அமெ. தூதரகத்திற்கு அருகில் தற்கொலைத் தாக்குதல்

### 9 பேர் பலி; 38 பேர் காயம்



(பெஷாவர்)

பாகிஸ்தானின் பெஷாவர் நகரில் உள்ள அமெரிக்க தூதரகம் அருகில் உள்ள பொலிஸ் நிலையம் மீது நேற்று முன்தினம் தலிபான் பயங்கரவாதி ஒருவர் நடத்திய தற்கொலைத் தாக்குதலில் ஒன்பது பேர் பலியாகினர். ஒசாமா பின்லேடன் கொலைக்கு பழிக்குப்பழி வாங்குவதற்காக கடந்த 2ஆம் திகதிக்கு பின் தொடர்ந்து பாகிஸ்தானில் குண்டுவெடிப்புகள் நடக்கின்றன. பெஷாவர் நகரில் பல்கலைக் சாலையில் குற்றவியல் புலனாய்வுத் துறை (சி.ஐ.டி) அலுவ லகத்தின் மூன்று மாடிக் கட்டடம் உள்ளது. நேற்று முன்தினம் வெடிபொருட்கள் நிரப்பப்பட்ட ஒரு வாகனம் இக்கட்டடத்தின் மீது மோதியதில் கட்டடம் தரைமட்டமானது.

குண்டுவெடித்த சத்தம் 10 கி.மீ தூரத்துக்கு கேட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். இச் சம்பவத்தில் ஒன்பது பேர் பலியாகினர். 38 பேர் காயம் அடைந்தனர். எனினும் இடிபாடுகளுக்கிடையில் சிக்கிமேலும் பலர் பலியாகியிருக்கக் கூடும் என அஞ்சப்படுகிறது. வாகனத்தில் 300 கிலோ வரையில் வெடிபொருட்கள் இருந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது.

வாகனத்தை ஓட்டி வந்தவரின் உடல் சுக்குநூறாக சிதறிவிட்ட நிலையில் அவரது ஒரு விரல் மட்டும் கிடைத்துள்ளதாக பொலிஸார் கூறியுள்ளனர். இச் சம்பவத்துக்கு தலிபான்கள் பொறுப்பேற்றுள்ளனர் என கூறப்படுகிறது. (ஸ்ரீ-2)

## செய்யாத குற்றத்திற்கு நேர்ந்த அவமானம்

(நியூயோர்க்)

அமெரிக்காவுக்கான இந்திய துணைத் தூதரகத்தில் பணியாற்றும் இந்திய அதிகாரி ஒருவரின் மகள் செய்யாத குற்றத்திற்காக சிறைப்பட்டு அங்கு அவமானப்பட்ட சம்பவம் தற்போது வெளியாகியுள்ளது.

அமெரிக்காவின் நியூயோர்க்கின் மன்ஹாட்டன் பகுதியில் இந்திய தூதரக அலுவலகம் உள்ளது. இங்கு துணைத் தூதரக அதிகாரியாக தேபாஷிஷ் பிஸ்வாஸ் பணியாற்றி வருகிறார். இவரது மகள் கிருத்திகா பிஸ்வாஸ் (வயது 18) இவர் இந்தாண்டில் அப்பகுதியில் உள்ள ஒரு பிரபல பாடசாலையில் படிப்பதற்காக சேர்ந்தார். பாடசாலை ஆசிரியர்கள் பற்றி தரக்குறைவான மின் அஞ்சல்களை அனுப்பியதாக இவர் மீது குற்றம் சாட்டப்பட்டது.




கடந்த பெப்ரவரி மாதம் 8 இல் விசாரணைக்குப் பின் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு 24 மணி நேரத்துக்கும் மேலாக சிறையில் அடைக்கப்பட்டார். மாவட்ட அரசுத் தரப்பு சட்டத்தரணி கிருத்திகா மீதான குற்றச்சாட்டுக்களை நிராகரித்து அதற்கான ஆவணங்களை நீக்கிய பின்பும் கூட அவர் பாடசாலையில் இருந்து ஒரு மாதம் இடைநிறுத்தப்பட்டார்.

குற்றச்சாட்டுக்கள் பொய் என தெரிந்த பின் பாடசாலையில் இருந்து ஒரு மின் அஞ்சல் அவருக்கு வந்தது. அதில் அவர் மீதான குற்றச்சாட்டுக்கள் விலக்கிக் கொள்ளப்பட்டதாகவும் அவர் பாடசாலைக்கு மீண்டும் வரலாம் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இது குறித்து அவர் நேற்று முன்தினம் அளித்த பேட்டியில் கூறியதாவது, எனக்கு தூதரக அதிகாரியின் மகள் என்ற விதத்தில் அதிகாரப் பாதுகாப்பு உண்டு. ஆனால் பொலிஸார் அதைப் பொருட்படுத்தாமல் என்னை விலங்கிட்டு அழைத்துச் சென்றனர். என் மீதான குற்றச்சாட்டுக்களுக்கு எவ்வித ஆதாரமும் கிடையாது. தரக்குறைவான மின் அஞ்சல்களை அனுப்பிய சீன மாணவனை அவர்கள் ஏன் கைதுசெய்யவில்லை என்பது எனக்குத் தெரியவில்லை. ஆனால் என்னைக் கைது செய்யும் படி அதிபர் கடுமையாக நிர்ப்பந்தம் செய்தார் என்று மட்டும் தெரியும் என கிருத்திகா தெரிவித்தார்.

கிருத்திகாவின் சட்டத்தரணி ரவி பத்ரா இது பற்றி கூறியதாவது, கிருத்திகாவை 24 மணி நேரத்துக்கும் மேலாக சிறையில் வைத்திருந்தது சர்வதேச அமெரிக்க மாகாண மற்றும் நியூயோர்க் நகர சட்டங்களுக்கு விரோதமானது. அவரது தந்தை தேபாஷிஷ் பிஸ்வாசுக்கோ, தூதரக தலைமை அதிகாரி பிரபு தயாளுக்கோ கூட இந்த கைது பற்றிய தகவல் தெரிவிக்கப்படவில்லை. அவருக்கு தூதரக அதிகாரியின் மகள் என்ற விதத்தில் அதிகார பாதுகாப்பு உண்டு. ஆனால் அதையும் மீறி அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என அவர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)



ஜி-8 நாடுகளின் உச்சிமாநாடு பிரான்ஸ் தலைநகர் பாரீசில் இடம்பெறுகின்றது. இம் மாநாட்டில் கலந்துகொள்ள வந்த ஜப்பான் பிரதமர் நேட்டோகானை ஜனாதிபதி மாளிகையில் அந்நாட்டு ஜனாதிபதி நிக்கொலஸ் சர்கோஸி வரவேற்பதைப் படத்தில் காணலாம்.

சொல்லியபடி செய்வது கடினமல்ல ; மிக எளிது. ஆனால், அதற்கு முன் சொல்லும்பொழுது யோசித்து சொல்லப் பழகிக்கொள். -கி.ஆ.பெ.விசுவநாதம்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# வாக்கு மாறிப் பேசுகிறார் சரத் பொன்சேகா!

வெள்ளைக்கொடி ஏந்தியவாறு விடுதலைப் புலி தலைவர்கள் எவரும் வரவில்லை. அவர்களை படையினர் சுடவில்லை. இவ்வாறு முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா நீதிமன்றில் சாட்சியமளித்துள்ளார்.

சரத் பொன்சேகா இராணுவத் தளபதியாக இருந்தபோதே வன்னி யுத்தம் நடத்தப்பட்டது. வன்னியில் அப்பாவித் தமிழ் மக்கள் அநியாயமாக கொல்லப்படுவதற்கு இராணுவத்தளபதியாக இருந்த சரத் பொன்சேகாவும் முக்கியமான கர்த்தா என்பதை மறுக்க முடியாது.

போர்க்குற்ற விசாரணை நடத்தப்படுமாக இருந்தால் சரத் பொன்சேகாவை விலக்கி வைத்து விட்டு விசாரணை நடத்தமுடியாது என்பது நிறுத்திட்டமான உண்மை.

அதே சமயம் சரத் பொன்சேகா அடிக்கடி தனது பேச்சை மாற்றிக்கொள்வதையும் காணமுடிகின்றது.

தான் இராணுவத் தளபதியாக் இருந்த போது முக்கியமான உத்தரவுகளை பாதுகாப்பு அமைச்சின் செயலாளரே பிறப்பித்திருந்தார். அவர் பிறப்பித்த உத்தரவுகள் தனக்குத் தெரியப்படுத்தவில்லை எனக் கூறியிருந்த சரத் பொன்சேகா,

விடுதலைப் புலிகளின் தலைவர்கள் எவரும் வெள்ளைக் கொடியுடன் வரவில்லை என்றும் அவர்களில் எவரும் சுட்டுக்கொல்லப்படவில்லை என்றும் இப்போது கூறியுள்ளார்.

பாதுகாப்புச் செயலாளரின் உத்தரவுகளை தெரிந்து கொள்ள முடியாத ஓர் இராணுவத் தளபதி இவ்வாறு சாட்சியமளிப்பது விசித்திரமானதாகும்.

தன்னைப் பாதுகாப்பதற்காக பாதுகாப்புச் செயலாளரை முன்னிறுத்திய அவர் இப்போது தன்மீதும் படையினர் மீதும் விசாரணை முடுக்கி விடப்படலாம் என்ற அச்ச உணர்வு ஏற்பட்டவுடன்,

வெள்ளைக் கொடியுடன் புலித் தலைவர்கள் எவரும் வரவில்லை எனக் கூறியுள்ளார்.

இத்தகைய கூற்றுக்கள் சரத் பொன்சேகாவின் பேரினவாத சிந்தனையை வெளிப்படுத்துவதாக இருப்பதுடன், சிங்களத் தலைவர்கள் எவரும் எந்தக் கட்டத்திலும் தமிழ் மக்களுக்காக குரல் கொடுக்கப் போவதில்லை என்பதையும் சுட்டி நிற்கிறது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் சரத் பொன்சேகாவுக்கே வாக்களித்திருந்தனர்.

தமிழ் மக்களின் ஒரு குறிப்பிட்ட வாக்குகள் சரத் பொன்சேகாவுக்கு செல்வதை அப்போதையகள நிலைமைகளே தீர்மானித்திருந்தன.

பரவாயில்லை, சரத் பொன்சேகா ஜனாதிபதியாகி இருந்தால், நமக்கேதும் செய்திருப்பார் என தமிழர் எவரேனும் எந்தக் கட்டத்திலாவது சிந்தித்திருந்தால் அதனை திருத்திக் கொள்வதற்கு இது நல்லதோர் சந்தர்ப்பம்.

இதற்கு மேலாக தமிழ் மக்களின் உரிமைக் கொடுப்பனவில் சிங்களத்தலைவர்கள் அனைவரும் மோதகமும் கொழுக்கட்டையுமாகவே இருப்பர் என்பது மீண்டும் ஒரு தடவை நிதர்சனமாக காட்டப்பட்டுள்ளது.

# இறைவனின் முழுமையான திருவருளை பெற வழிவகுக்கும் யந்திர பூஜை

அகில சராசரங்களை படைத்து காக்கும் இறைவன் அருவமாக எங்கும் நிறைந்திருக்கிறான். அவன் நிர்மலமானவனாய் பரிபூரணனாய் ஆங்காங்கு கோவில் கொண்டு திருவுருவங்களில் வீற்றிருந்து அருள்பாலிக்கின்றான். ஆகம நெறிமுறைகளுக்குக்கமைவாக மந்திர பூர்வமாக பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் மூர்த்திகளில் உருக் கொண்டு ஜீவ ராசிகளுக்கு அருள் புரியும் ஸ்தா னமே ஆலயமாகும்.

ஒரு ஆலயத்தில் பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் நிகழ்த்த வேண்டுமாயின் அதில் அறுபத்து நான்கு கிரியைகள் ஆற்றப்படுகின்றன. இதன்மூலமே அங்கு இறைசாந்நித்தியத்தை நிலை நிறுத்த முடிகின்றது. இக்கிரியைகளிலே யந்திர ஸ்தாபனம் ஒரு முக்கிய கிரியையாகும்.

ஒலியானது அதிர்வுகள் வடிவில் வெளிப்படுகின்றது. எழுத்துக்களில் இந்த ஒலி ஆற்றலை உணர்த்த ஞானிகள் அவற்றை ஒழுங்குபடுத்தி பல அதிர்வெண்ணுடைய எழுத்துக்களை அவற்றின் அதிர்வெண்களின் அளவுகளை கணக்கிட்டு ஒன்று சேர்ப்பதன் மூலம் பல புதிய அதிர்வெண்களையுடைய சொற்களை தோற்றுவித்தனர். இவ்வாறு ஒன்று சேர்க்கப்பட்ட சொற்கள் மந்திரங்கள் ஆகின்றன. பல சொற்களுக்கு அதிர்வு இருந்தாலும் எவற்றுடன் எவற்றை இணைத்தால் அதிக பலன்களை அடைய முடியும் என்பதை கண்டறிந்து பயன்படுத்தினார்கள்.

பவுண், வெள்ளி, செப்பு, பஞ்சலோக தகடுகளில் அவ்வவ் மூர்த்தங்களுக்குரியவாறு கோடுகள், கோணங்கள் அஷ்டதள பத்மங்கள் ஆகிய ரேகைகளை முறைப்படி வரைந்து அம்மூர்த்திகளின் பீஜாஷரங்களையும், மூல மந்திர-காயத்திரி மந்திரங்களையும் எழுதி ஒரு மண்டலம் (45 நாட்கள்) அல்லது அரை மண்டலம் (24 நாட்கள்) அபிஷேகம் , அவற்றுக்கான பூஜைகள், தர்ப்பணாதி ஹோமங்களை முறைப்படி செய்து அதில் தெய்வ சாந்நித்தியத்தை ஏற்படுத்தி மூலாலயத்தில் ஆசன பீடத்தில் யந்திர ஸ்தாபனத்திற்கென ஒரு நாதகுழி ஏற்படுத்தப்பட்டிருக்கும்.

அவ்நாதகுழியிலே வாசனை திரவியங்களை பூசி மந்திர பூர்வமாக நவரத்தினகற்களை வைத்து அதன் மேல் யந்திர ஸ்தாபனம் செய்யப்பட்டு அதன் மேல் இறைவனின் திருவுருவம் வைக்கப்பட்டு ஆசனபீடத்தையும் இறையுருவையும் அஷ்டபந்தனம் எனும் மருந்தினால் பொருத்தப்படும்.

அதன் பின் மந்திரம், பதம் , வர்ணம், கலை, தத்துவம், புவனம் போன்ற அத்துவாக்களால் அந்த பிம்பத்திற்கு உயிர் ஊட்டப்படுகிறது. தீபஒளி மேல் நோக்கி ஒளிர்வதை போல் யந்திரத்தின் சக்தி பிம்பத்தில் சேர்ந்து குடமுழுக்கின் பயனாக இறைவனின் முழுமையான தெய்வீக திருவருள் பெருகி பொழிகின்றது.



**ஈழத்துச் சிதம்பரத்தில் ஜூன் 6 இல் நிகழவுள்ள மஹா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு அதற்கு முன்னோடியாக 45 நாட்கள் தினமும் காலை 8 மணிக்கு யந்திர பூஜை நடைபெற்று வருகின்றது.**

யந்திரங்கள் தெய்வ பிரதிஷ்டை க்கு மட்டுமின்றி வீடுகளிலும், தொழில் நிலையங்களிலும் காவல் ஏற்படவும் செல்வசெழிப்பு உண்டாகும் பொருட்டும் வைக்கப்படுகின்றன. அத்துடன் தனிநபர்கள் தமது மன எண்ணங்கள் ஈடேறவும், ரக்ஷயின் பொருட்டும் அட்க்ஷர கூடுகளில் (தாயத்து) யந்திரங்களை வைத்து அணிந்து கொள்கின்றனர்.

யந்திரங்கள் முறைப்படி வரையப்பட்டு பூஜை செய்யப்பட்டு புனிதமான முறையில் ஆசாரத்துடன் பேணி பூசித்து வந்தால் நிச்சயம் அவை சிறந்த பயன்களை தரவல்லனவாகும்.

ஈழத்து சிதம்பரம் எனப் போற்றப்படுகின்ற காரைநகர் சிவன் ஆலயத்திலே எதிர்வரும் யூன் மாதம் 6 ஆம் திகதி திங்கட்கிழமை 33 குண்டங்கள் அமைந்த உத்தமோத்த மஹா கும்பாபிஷேகம் நிகழவுள்ளது. அதற்கு முன்னோடியாக ஒரு மண்டலம் (45 நாட்கள்) யந்திர பூஜை தினமும் காலை 8 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறுகின்றது. அடியார்கள் யந்திர பூஜையில் பங்குபற்றி சிவனருள் பெற்று பேரானந்த பெருவாழ்வு வாழ வேண்டுகின்றோம்.

பிரதிஷ்டா சிரோமணி,
சிவஸ்ரீ க.ச.சோமாஸ்கந்தக்குருக்கள்,
பிரதிஷ்டா பிரதமகுரு,
ஈழத்து சிதம்பரம் சிவன் கோவில்,
காரைநகர்.

## வெள்ளி நற்சிந்தனை

21

# செவ்வியல் தமிழில் சீர்மியம்

பக்தி வயப்பட்டவருடைய செயற்பாடுகள் எப்போதுமே வேறுபட்டிருக்கும். இறைவனைப் பற்றிக் கேள்வியுற்ற போதில் அவர் உடலில் ஏற்படும் மாற்றம் அவருடைய பக்திநிலையை உணர்த்தி நிற்கும். இறைவன் பெருமைகளைப் பற்றி பிறர் பேசக் கேட்கும் போது உடல் உறுப்புக்களின் செயற்பாடு மாறுபடும். சிவனுடைய திருக்கோலம் அற்புதமானது. கங்கையின் பெருவெள்ளத்தைத் தாங்கிய விரிந்த சடைமுடி , இடபவாகனத்தில் இருக்கும் தோற்றம். காட்சிப்படுத்திக் காட்டும் போது உள்ளம் ஒன்றிவிடும். விண்ணோர் பெருமானே! என அடியவர் கூறக் கேட்ட மாத்திரத்தே இறைவனை அடைய வேண்டும் என்னும் பெருவிருப்புடைய மனத்தையுடைய அடியவர் பலர் உளர்.

மணிவாசகர் இத்தகைய அடியவர்கள் எல்லோரும் இறைவழிபாட்டிலே ஒன்றி நிற்க அவர்களை ஆட்கொள்ளாமல் தன்னை இறைவன் வலிய வந்து ஆட்கொண்ட விந்தையையெண்ணி யெண்ணி மாய்ந்து போகிறார். அடியவர்களை ஒரு அற்புதமான உவமை மூலம் எமக்குக் காட்டியுள்ளார்.

பள்ளத்திலே பாய்கின்ற நீரைப் போல கீழ் மேலாக பதைத்த மனத்தோடு உன்னை மனம் உருகி வழிபடும் அடியவர் எனக் கூறியுள்ளார்.

உயர்ந்த இடத்திலிருந்து பள்ளத்திலே விழும் வெள்ளம் வேகமாக விழுவது போல அடியவர் உள்ளம் இறைவனை விரைவாகச் சேர வேண்டும் எனப் பெரிதும் விரும்பி நிற்கிறது.

இத்தகைய அடியவர்களைப் போலத் தன்னுடைய உள்ளம் உருகவில் லையே என மணிவாசகர் கவலைப் படுகிறார். தனது உள்ளங்கால் தொடக் கம் உச்சி வரை உடலுறுப்புக்கள் எல் லாம் நெஞ்சாகி தானாக உருகி நிற்கவில்லையே எனத் துன்பப்படுகிறார். தனது நெஞ்சம் உடலுறுப்புகளெல்லாவற்றையும் வழி நடத்த வில்லை என்ற உண்மையை ஒத்துக் கொள்கிறார். அதை விடத்தனது உடம்பு முழுவதும் கண்ணாக நின்று ஆனந்தக் கண்ணீர் பெருக்க வில்லையே என நினைக்கிறார்.

பக்தி வயப்படாத தனது உடலுறுப்புக்களை வெறுப்புடன் இகழ்ந்து பேசுகிறார். தனது மனம் கல் என்கிறார். கண்கள் இரண்டும் மரக்கண்கள் என்கிறார். உண்மையில் நாயேனாகிய என்னை நீ நயந்து வந்து ஆட்கொண்டதை எண்ணி நினது பெருங்கருணையை என் நெஞ்சு நினைக்க வேண்டும்.


உருகி உன்னை வழிபட்டு நிற்க வேண்டும். உள்ளங்கால் முதல் உச்சிவரை உடல் உருகி நிற்க வேண்டும். உடம்பெல்லாம் கண்ணாகி நின்று ஆனந்தக் கண்ணீரைப் பெருக்க வேண்டும். ஆனால் இது எதுவும் நடக்கவில்லை. எனது தீவினையே இதற்கெல்லாம் காரணம் எனக் கூறுகிறார். மனம் ஒன்றாத இறைவழிபாட்டால் பயனில்லை என்பதே அவர் எமக்குத் கூற வந்த விடயமாகும். இறைவன் எம்மைத் தேடி வருகின்ற போது அதனை நாம் உணராமல் உலக இன்பங்களில் மூழ்கியிருப்பதைச் சுட்டிக் காட்டுகிறார். இறைவன் புகழைப் பலர் கூறக் கேட்டும் செவிமடுக்காத மனிதர் நிலையை மாற்றவே மணிவாசகர் முயல்கிறார். தனது செயற்பாடுகளைக் கொண்டு பிறரை வழிப்படுத்த முனைகிறார். தீவினையை அகற்றிப் பக்திநிலையில் வழிபாட்டை மேற்கொள்ள வேண்டுமெனப் பாடுகிறார்.

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

"வெள்ளந்தாழ் விரிசடையாய் விண்ணோர்
பெருமானே யெனக் கேட்டு வேட்ட நெஞ்சாய்ப்
பள்ளந்தாழ் உறுபுனலிற் கீழ்மே லாகப்
பதைத்துருகும் அவர் நிற்க என்னை யாண்டாய்க்
குள்ளந்தாள் நின்றுச்சி யளவு நெஞ்சாய்
உருகாதால் உடம்பெல்லாங் கண் ணாய் அண்ணா
வெள்ளந்தான் பாயாதால் நெஞ் சங் கல்லாங்
கண்ணிணையு மரமாந்தீ வினையி னேற்கே"

# உஜி ஊழலுக்கு மத்திய அமைச்சரவையும் ராஜாவும் தான் முழுப்பொறுப்பு

## முன்னாள் தொலைத்தொடர்பு செயலர் குற்றச்சாட்டு



2ஜி ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீட்டில் நடந்த முறைகேட்டிற்கு மத்திய அமைச்சரவையும் அதற்குப் பொறுப்பு வகித்த ராஜாவும்தான் காரணம் என முன்னாள் தொலைத்தொடர்புத்துறை செயலர் சித்தார்த் பெகுரா தெரிவித்துள்ளார்.

2ஜி ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீட்டில் நடந்த ஊழல் தொடர்பாக முன்னாள் அமைச்சர் ராஜாவுடன் கைதாகி திகார் சிறையில் அடைக்கப்பட்டுள்ளவர்களில் முன்னாள் தொலைத்தொடர்புச் செயலர் சித்தார்த் பெகுராவும் ஒருவர்.

இவர் பிணை கேட்டு சிறப்பு நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்திருந்தார். இது தொடர்பான விசாரணை நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் பெகுரா சார்பில் அவரது சட்டத்தரணி அமன்லே ஆஜராகி வாதாடினார். அப்போது அவர் கூறியதாவது, ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீட்டு விடயத்தில் கொள்கை முடிவை சட்டத்திற்கு புறம்பாக மாற்றியது அப்போது அமைச்சராக இருந்த ராஜாதான். இதற்கு அமைச்சரவை எவ்வித எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை. இதன் பின்னும் அவர் பிரதமர் மற்ற அமைச்சர்களின் நம்பிக்கையைப் பெற்றிருந்தார். தொலைத்தொடர்புக் கொள்கையை உருவாக்கியதில் பிரதமர் மற்றும் நிதி, சட்ட அமைச்சர்களுக்கு பொறுப்புள்ளது. இதில் அரசு அதிகாரியான எனது கட்சிக்காரர் எப்படிப் பொறுப்பேற்க முடியும். அரசின் கொள்கையை அமுல்படுத்தியதற்கு பொறுப்பேற்க முடியாது. இந்த ஒதுக்கீட்டில் நடந்த முறைகேட்டிற்கு முழுப் பொறுப்பும் அப்போதைய அமைச்சர் ராஜா மற்றும் மத்திய அமைச்சரவையையே சேரும்.

ராஜா தொலைத்தொடர்பு அமைச்சராக இருந்தபோது தவறான கொள்கையை கடைப்பிடித்ததால் அரசுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது. செயற்படுத்த திட்டம் ஏற்புடையது இல்லை என்றால் அது பிரதமர் தலைமையிலான அமைச்சரவையின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கும். இது குறித்து முக்கிய பொறுப்பில் இருந்த அமைச்சர்கள் பொருத்தமான நடவடிக்கை எடுத்திருந்தால் இதைத் தடுத்திருக்க முடியும். இதைத் தாண்டிச் செயற்படுத்தும் நிலையில் இருக்கும் அதிகாரியால் எப்படி பொறுப்பேற்ற முடியும். இவ்வாறு அமன்லே வாதாடினார்.

ஸ்பெக்ட்ரம் ஊழலில் காங்கிரஸ் கட்சிக்கும் தி.மு.க.வுக்கும் பங்குள்ளது. ஆனால் இந்த விடயம் குறித்துப் பேசும்போது இரு கட்சிகளும் பொதுவில் கொஞ்சிக் குலாவிக் கொள்கின்றனர். தனிப்பட்ட முறையில் குறை கூறிக் கொள்கின்றனர் என்று பாரதிய ஜனதா செய்தித் தொடர்பாளர் ஜகத் பிரகாஷ் கூறினார்.

டில்லியில் நேற்று முன்தினம் நிருபர்களிடம் பேசிய ஜகத் பிரகாஷ் கூறியதாவது, டில்லிவந்த கருணாநிதியை அமைச்சர்கள் சிதம்பரமும் குலாம் நபி ஆசாத்தும் சந்தித்து கனிமொழி கைது தொடர்பாக அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றனர். இதற்கு பின்னால் பார்த்தால் ஊழலுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது போல காட்டிக் கொள்கின்றனர். 2ஜி ஊழலுக்கு தி.மு.க.தான் முழுக்காரணம் என்று பழிபோட காங்கிரஸ் முயற்சிக்கிறது. உண்மையில் இந்த ஊழலுக்கு ஆரம்பம் முதல் காங்கிரஸும் தி.மு.க.வும்தான் காரணம் என பாரதிய ஜனதா கூறி வருகிறது. (ஸ்ரீ-2)

## தமிழக மீனவர்கள் அச்சம் உயர் நீதிமன்றில் வழக்கு

தமிழக மீனவர்களுக்கு சென்னையைச் சேர்ந்த சட்டத்தரணி ஞானேஸ்வரன் உயர் நீதிமன்றில் பொதுநல வழக்கு தொடர்ந்துள்ளார்.

அவர் தாக்கல் செய்த மனுவில் சர்வதேச கடல் எல்லையில் கடந்த சில ஆண்டுகளாக 400 இற்கும் மேற்பட்ட மீனவர்கள் துப்பாக்கிச் சூட்டில் பலியாகினார்கள். அவர்கள் பல்வேறு கொடுமைகளுக்கு உள்ளானார்கள். இதனால் தமிழக மீனவர்கள் நடுக்கடலில் மீன் பிடிக்க அஞ்சுகின்றார்கள்.

இதைத் தடுக்க தமிழக கடல் எல்லைக் கோட்டை அடையாளம் காட்டும் தானியங்கி தொடர்நிலையங்களை அமைக்க வேண்டும். அனைத்துப் படகுகளிலும் ஜி.பி.எஸ். கருவிகளை இலவசமாகப் பொருத்தும்படி அரசுக்கு உத்தரவிட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# பாரதச் செய்திகள்

## டில்லி அருகே பயங்கரம்

# வீட்டின் மீது விமானம் விழுந்து 10 பேர் பலி



(பரிதாபாத்)

புதுடில்லி அருகே வீட்டின் மீது அம்புலன்ஸ் விமானம் மோதி விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த விமானப் பணியாளர், நோயாளி உட்பட 10பேர் பலியாகினர். 2பேர் காயமடைந்துள்ளனர்.

பீகார் பாட்னாவிலிருந்து நேற்று முன்தின மிரவு டில்லிக்கு சிறியரக அம்புலன்ஸ் விமானம் ஒன்று புறப்பட்டுச் சென்றது. அதில் விமானிகள் உட்பட எட்டுபேர் பயணம் செய்தனர்.

இந்நிலையில் இரவு 10.45 மணியளவில் பரிதாபாத் அருகே விமானம் சென்றபோது பலத்த சூறைக்காற்று வீசியதாகக் கூறப்படு கிறது.

அப்போது கட்டுப்பாட்டை இழந்த விமானம் அப்பகுதியில் உள்ள குடியிருப்பு பகுதி யில் உள்ள ஒரு இரண்டு மாடி வீட்டின் மீது விழுந்து நொறுங்கியது. அப்போது அந்த வீட்டில் 10பேர் வரை இருந்ததாகக் கூறப் படுகிறது. இந்த விபத்தில் 10 பேர் இறந்து விட்டதாகவும் அவர்களது உடல் மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

2பேர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். தகவலறிந்த அரியானா பொலிஸார் மற்றும் மீட்புக்குழுவினர் சம்பவ இடம் சென்று மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

பாட்னாவில் சிறுநீரக கோளாறு காரணமாக அவதிப்பட்டு வந்த ராகுல் ராய் என்பவரை மருத்துவர்களுடன் டில்லி மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் போது இந்த விபத்து ஏற்பட்டது. (ஸ்ரீ-2)

# கனிமொழியின் கைதையடுத்து தி.மு.க.-காங்கிரஸிடையே விரிசல்

(சென்னை)

மாநிலங்களவை உறுப்பினர் கனிமொழியின் கைது முன்னாள் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதியை பெரிதும் பாதித்துள்ளதுடன் காங்கிரஸ்-தி.மு.க. உறவில் விரிசல்களை ஏற்படுத்தியுள்ளதாக சென்னை ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

கனிமொழியின் கைது நடவடிக்கைகளை தடுப்பதற்கு தி.மு.க உயர்பீடம் பெரும் பிரயத் தனங்களை மேற்கொண்டிருந்த போதும் கனிமொழியை காப்பாற்றுவதற்கு மத்திய காங்கிரஸ் அரசு சிறிதும் உதவவில்லை என்ற விடயம் தி.மு.க தரப்பில் பெரும் புகைச்சலை கிளப்பியுள்ளது.

இந்நிலையில் இன்று பத்திரிகையாளர்களிடம் பேசிய கலைஞர் கருணாநிதி காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியே அழைப்பு விடுத்தாலும் நான் அவரை சந்திக்கமாட்டேன். கனிமொழி சிறையில் உள்ள நிலையில் சோனியாவை சந்திப்பது சரியாக இருக்காது என கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் சென்னை அண்ணா அறிவாலயத்தில் தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டத்திற்கு பின் நிருபர்களிடம் பேசிய அவர், ஸ்பெக்ட்ரம் விவாகரத்தில் மாநிலங்களவை உறுப்பினர் கனிமொழி, சட்ட ரீதியாக நீதி நிலை நாட்டப்படும் என்ற உறுதியுடனும் துணிவுடனும் இருப்பதாக குறிப்பிட்டார். கனிமொழி கைது விவகாரம் கருணாநிதியை பெரிதும் பாதித்திருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருப்பதாக சென்னை ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (ச-5)



தமிழக சட்டமன்றத் தேர்தலில் தே.மு.தி.க. எதிர்க்கட்சி அந்தஸ்தை பெற்றதற்காக அக்கட்சியின் தலைவர் விஜயகாந்தை சமத்துவ மக்கள் கட்சித் தலைவர் சரத்குமார், நடிகர் விஜயகுமார், நடிகைகள் நளினி, பாத்திமா பாபு, பசி சத்யா ஆகியோர் நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவிப்பதைப் படத்தில் காணலாம்.

# சிறுநீரக பாதிப்புக்கு சிகிச்சை ரஜினி லண்டன் பயணம்

(சென்னை)


சிறுநீரக பாதிப்புக்கு தொடர் சிகிச்சை பெற நடிகர் ரஜினிகாந்த் இன்னும் இரு தினங்களில் லண்டன் செல்ல இருக்கிறார்.

நடிகர் ரஜினிகாந்த்துக்கு நெருக்கமான திரைப்படத் துறையினர் இதை ஊர்ஜிதப் படுத்தினர்.

திரைப்படத் துறையினரின் உதவியுடன் அவர் லண்டன் செல்ல இருக்கிறார்.

கடந்த மாதம் மயிலாப்பூர் தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டது முதலே நடிகர் ரஜினி க்கு சிறுநீரக பாதிப்பு பிரச்சினை இருந்து வருகிறது.


இப்போது அவர் ஸ்ரீ ராமச் சந்திரா மருத்துவமனையின் தனிப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார்.



நடிகர் ரஜினிகாந்த் தற்போது நலமாக உள்ளார். தெலைக்காட்சி பார்க்கிறார். குடும்பத்தினருடன் நேரத்தைச் செலவிடுகிறார். எனினும் சிறுநீரக பாதிப்புக்கு தொடர் மருத்துவ கண்காணிப்புக்கு மற்றும் சிகிச்சை பெற அவரை லண்டன் அழைத்துச் செல்ல குடும்பத்தினர் திட்டமிட்டு வருகின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# முதல்நாள் ஆட்டம் மழையால் பாதிப்பு

# இலங்கை அணி நிதான ஆரம்பம்




(கார்டிவ்)

பரணவித்தான, டில்சானின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் இலங்கை அணி முதல் நாள் ஆட்டநேர முடிபில் அதன் முதலாவது இன்னிங்ஸில் 2 விக்கெட்டுக்களையிழந்து 133 ஓட்டங்களை எடுத்தது.

இங்கிலாந்துக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி 3 டெஸ்ட், 5 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்ட் நேற்று கார்டிவ்பில் ஆரம்பமானது. இப் போட்டி மழை காரணமாக மதிய போசன இடைவேளையின் பின் ஒரு மணி நேரம் தாமதமாகவே ஆரம்பமானது.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணித்தலைவர் திலகரட்ண டில்சான் முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தார்.

இதன் அடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு பரணவித்தான-டில்சான் ஜோடி நிதானமான ஆரம்பத்தை வழங்கினர்.

இதில் அணித்தலைவர் டில்சான் 92 பந்துகளில் அரைச்சதம் கடந்தார். எனினும் டில்சான் 94 பந்துகளில் (7 பவுண்டரிகள் உட்பட) 50 ஓட்டங்களை எடுத்து சுவானின் சுழலில் ஆட்டமிழந்தார்.

அடுத்துவந்த குமார் சங்கக்கார 16 பந்துகளில் (2 பவுண்டரிகள் உட்பட) 11 ஓட்டங்களை எடுத்தபோது அன்டர் வீசிய பந்தில் விக்கெட் காப்பாளர் பிறிரிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இவ் ஆட்டமிழப்பை கள நடுவர் கலிம் டார் வழங்க மறுக்க, அணித்தலைவர் ஸ்ரொரஸ் மூன்றாவது நடுவரிடம் மேல் முறையீடு செய்து உறுதிப்படுத்தினார்.

தொடர்ந்து களமிறங்கிய மஹேல ஜெயவர்த்தனா நிதானமாக ஆட, மறுமுனையில் பரணவிதான 145 ஆவது பந்தில் அரைச் சதத்தை எட்டினார்.

இந் நிலையில் நேற்றைய முதல்நாள் ஆட்ட நேர முடிபில் இலங்கை அணி 48 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களையிழந்து 133 ஓட்டங்களை எடுத்தது.

இதில் பரணவிதான 58 ஓட்டங்களுடனும் மஹேல ஜெயவர்த்தனா 04 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்திலுள்ளனர்.

பந்துவீச்சில் அன்டர்சன், சுவான் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர். இப் போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் இன்றாகும்.

# சென்னையுடன் மோதுவது யார்?

# மும்பை-பெங்களூர் இன்று சந்திப்பு

(சென்னை)

ஐ.பி.எல். பிளே ஒப் சுற்றில் இன்று மும்பை இந்தியன்ஸ், பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணிகள் மோதுகின்றன. இதில் வெற்றிபெறும் அணி இறுதிப்போட்டிக்கு தகுதி பெறும் என்பதால் ஆக்ரோஷமான மோதலை எதிர்பார்க்கலாம்.



சச்சின் ஹர்பஜன் சிங்

நான்காவது ஐ.பி.எல். தொடர் இறுதி கட்டத்தை எட்டியுள்ளது. இன்றைய பிளே ஒப் சுற்றின் கடைசி நொக்-அவுட் போட்டியில் சச்சினின் மும்பை இந்தியன்ஸ் அணியும், விக்டோரியின் பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணியும் சந்திக்கின்றன.

மும்பை அணியின் துடுப்பாட்டம் மற்றும் பந்துவீச்சு கடந்த இரு போட்டிகளில் சிறப்பாக உள்ளது. ஆரம்ப வீரர் பிரச்சினைக்கு பிளிசாட் முடிபு கட்டியுள்ளார். கொல்கத்தாவுக்கு எதிராக சச்சினுடன் இணைந்து அசத்திய இவர் அரைச்சதம் கடந்து நம்பிக்கை தந்தார்.

### பிராங்க்ளின் அபாரம்

நடுத்தர வரிசையில் அம்பதி ராயுடு, ரோகித் சர்மா திடீரென சறுக்கலை சந்தித்து வருவது பலவீனமாகியுள்ளது. தவிர, போலாட் இன்னும் போர்முக்கு திரும்பாதது அதிர்ச்சி தான். பிராங்கிளினின் சமீபத்திய நங்கூரம் போன்ற உறுதியான ஆட்டம் தான் அணியை காப்பாற்றிவருகிறது. இன்றும் இவர் அசத்தும் பட்சத்தில் மும்பை அணி தொடர்ந்து இரண்டாவது முறையாக இறுதிப் போட்டிக்கு தகுதி பெறலாம்.

### முனாப் அபாரம்

வேகப்பந்து வீச்சைப் பொறுத்தவரை மலிங்க, முனாப்பட்டேல் மீண்டும் எழுச்சி பெற்றுள்ளனர். சுழலில் ஹர்பஜன் சிங் தன்னால் முடிந்தளவுக்கு அசத்த காத்திருக்கின்றார். இன்று எப்படியாவது ஹயிலை ஆரம்பத்திலேயே அரங்கு அனுப்பினால் பெங்களூர் அணியின் ஓட்டக்குவிப்பை தடுக்கலாம்.

### துடுப்பாட்டபலம்

பெங்களூர் அணியின் துடுப்பாட்டம் கிறிஸ் ஹயிலின் வருகைக்குபின் அபார வளர்ச்சி கண்டுள்ளது. இது வரை நடந்த போட்டிகளில் அதிக ஓட்டம் குவித்துள்ள ஹயில் (519) இன்று ஏமாற்ற மாட்டார் என நம்பலாம்.

தவிர சென்னைக்கு எதிரான போட்டியில் ஹயில் கைவிட்டபின்பும் 175 ஓட்டங்கள் குவித்தது., பின்வரிசை வீரர்களின் துடுப்பாட்ட பலத்தைக் காட்டுகிறது.

இதில் விராட் ஹோலி (514), பாமர்ஸ்பச், சௌரப் திவாரி, டி வில்லியர்ஸ் போன்றவர்கள் முக்கியமானவர்கள்.

### சாகீர் நம்பிக்கை

சகீர்கானின் எழுச்சி, எதிரணி துடுப்பாட்ட வீரர்களுக்கு பெரும் தொல்லையாக உள்ளது. இவரது சகா அரவிந்த் தன் பங்குக்கு அசத்தலை தொடர்கிறார். சுழலில் அனுபவத் தலைவர் விக்டோரி, அபிமன்சு மிதுன் போன்றவர்கள் மீண்டும் நம்பிக்கைத் தருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த போட்டிகளில் பெங்களூர் பந்து வீச்சாளர்கள் கடைசி 4 ஓவர்களில் மட்டும் 58 ஓட்டங்களை வாரிவழங்கியது தோல்விக்கு காரணமாக அமைந்தது. இதை இன்று திருத்திக் கொள்வார்கள் என்று நம்பலாம்.

### பழி தீர்க்குமா?

ஐ.பி.எல். தொடரில் மும்பை, பெங்களூர் அணிகள் இது வரை 8 போட்டிகளில் மோதியுள்ளது. இதில் பெங்களூர் 5 இல் வென்றுள்ளது. மும்பை 3இல் மட்டும் வெற்றி பெற்றுள்ளது.

கடந்த 2010 ஐ.பி.எல். அரையிறுதியில் மும்பை அணி பெங்களூரை 35 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறியிருந்தது. இதனால் இன்று மும்பை அணியை வென்று பெங்களூர் பழி தீர்க்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# துளித் துளியாய்...

### ஐ.சி.சிக்கு டிமிக்கி கொடுத்தார் ஹசான் திலகரட்ண

இலங்கை கிரிக்கெட் அணி வீரர்கள் 1992 முதல் சூதாட்டத்தில் ஈடுபட்டுவருவதாக முன்னாள் அணித்தலைவர் ஹசான் திலகரட்ண பரபரப்புக் குற்றம் சாட்டினார்.

அவரிடம் விசாரிக்க ஐ.சி.சி.குழு வந்தது. ஆனால் அவரை நேரில் சந்திக்க முடியவில்லை. தொலைபேசியில் பேசிய போது சூதாட்டம் தொடர்பான கேள்விகளுக்கு பதிலளிக்க மறுத்து விட்டார். அவருக்குத் தேவையான பாதுகாப்பு அளித்தால் மட்டுமே சூதாட்டம் குறித்து அறி விப்பதாக தெரிவித்தார்.

### பாகில் விளையாட டில்சான் மறுப்பு

இலங்கை கிரிக்கெட் அணி 2009ஆம் ஆண்டு பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் செய்தபோது லாகூரில் வைத்து தீவிரவாதிகள் திடீர் தாக்குதல் நடத்தினார்கள். அதன்பின் இலங்கை அணி பாகிஸ்தான் செல்லவில்லை.

தற்போது 3 டெஸ்ட், 5 ஒருநாள் போட்டிகள் மற்றும் ஒரே ஒரு இருபது-20 போட்டியில் விளையாட ஒக்ரோபர் மாதம் பாகிஸ் தான் வரும்படி இலங்கை அணிக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இது பற்றி அறிந்ததும் இலங்கை அணித் தலைவர் டில்சான் பாகிஸ்தான் செல்ல மறுத்து விட்டார்.

### பாகிஸ்தான் அணியின் அடுத்த தலைவர் ஹபீஸ்

பாகிஸ்தான் அணித்தலைவர் பதவியிலிருந்து அப்ரிடி நீக்கப்பட்டதற்கு கடும் எதிர்ப்பு வலுத்துள்ளது. இதுபற்றி பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தலைவர் இஜாஸ்பட் கூறுகையில்,

அணியில் இரண்டு அணித்தலைவர்கள் இருந்தால் வீரர்கள் மத்தியில் பிளவு ஏற்படுகிறது. அப்ரிடி டெஸ்ட் போட்டியிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டார். எனவே டெஸ்ட், ஒருநாள் போட்டி மற்றும் இருபது-20 ஆகிய 3 போட்டிகளுக்கும் ஒரே அணித்தலைவராக மிஸ்பாவை நியமித்திருக்கிறோம். அவர் அடுத்த சிலமாதங்கள் அணித்தலைவராக இருப்பார். அவருக்குப்பின் முகமெட் ஹபீஸ் அனைத்துப் போட்டிகளுக்கும் அணித்தலைவராக நியமிக்க முடிபு செய்யப்பட்டுள்ளது என்றார்.

### காம்பீருக்கு 6 வாரம் ஓய்வு

கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணித்தலைவர் காம்பீருக்கு தோல்பட்டையில் காயம் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து அவர் 6 வாரம் வரை ஓய்வெடுக்க வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேற்கிந்தியத்தீவுகள் செல்லும் இந்திய அணிக்கு காம்பீர் அணித்தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். அவர் மேற்கிந்தியத்தீவுகள் தொடரில் பங்கேற்க முடியாத சூழ்நிலை உருவாகியுள்ளது. எனவே புதிய அணித் தலைவராக ரெய்னா அல்லது யுவராஜ்சிங் நியமிக்கப்படலாம் என தெரிகிறது.

### மவுரஸ்மோவுக்கு திடீர் தடை

பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் போட்டியில் விளையாடிவரும் வீரர்களுக்கு ஊக்கமருந்து சோதனை மற்றும் அது தொடர்பான நிகழ்ச்சிகளில் பங்கேற்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஆனால் பிரான்ஸ் வீராங்கனை மவுரஸ்மோ இதில் பங்கேற்க மறுத்துவிட்டார். எனவே அவர் பிரெஞ்சு ஓபன் கலப்பு இரட்டையர் பிரிவில் விளையாட தடை விதிக்கப்பட்டது.

### கொல்கத்தாவுக்கு அடித்து லக்

2011ஆம் ஆண்டு சம்பியன் லீக் போட்டிகளில் இந்தியாவில் நடைபெற்றுவரும் ஐ.பி.எல். போட்டிகளில் முதல் 3 இடங்களைப் பிடிக்கும் அணிகள் தகுதி பெறுவது வழக்கம். இந்த முறை 4 அணிகளைச் சேர்க்க ஐ.பி.எல். ஆட்சிமன்ற குழு முடிபு செய்துள்ளது.

இதன் அடிப்படையில் கொல்கத்தா ஐ.பி.எல். பிளே ஒப் சுற்றில் வெளியேறினாலும் சம்பியன் லீக்கில் ஆடும் தகுதியை பெற்றுள்ளது. இந்தப் போட்டிகள் செப்டம்பர் 23 முதல் ஒக்டோபர் 9 வரை இந்தியாவில் நடக்கும்.

## நிரு ரியூசன் சென்ரர் கோண்டாவில்

O/L DAY CLASS -2011

பிரிவு II

ஆரம்பம் : 30.05.2011 திங்- 8 மணி

(3898)



அனேகரின் வேண்டுகோளுக்கு இணங்க
மீண்டும் யாழ்ப்பாணத்தில்

**எந்த முதலீடும் இல்லாமல் மாதம் ரூபா 50,000/= க்கு மேல் சம்பாதிக்க ஆசையா.....?? !!!!**



யாழ் குடாநாட்டு இளைஞர் யுவதிகளுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம் இணையத்தளம் மூலம் மாதம் ரூபா 50,000/= மேல் வீட்டிலிருந்தபடியே சம்பாதிப்பதற்கு ஓர் இலகு வழிகாட்டல் வகுப்பு

இல்லத்தரிசிகளே நீங்களும் உங்கள் குடும்பத்தை முன்னேற்ற நினைக்கிறீர்களா????ஆனால் என்ன வேலை செய்வது. என்று தெரியவில்லை???? முதலீடு இல்லை மற்றும் குழந்தைகளை விட்டு வெளியே சென்று வேலை செய்ய யோசிக்கிறீர்களா? கவலையை விடுங்கள் உங்கள் வீட்டிலிருந்தபடியே மாதம் ரூபா 50,000/=மேல் சமபாதித்து கொள்ளுங்கள்

உங்களிடம் இருக்க வேண்டியது ஓர் கணணியும் இணைய வசதியும் மட்டுமே.

குறிப்பு : கணணி பற்றி அறிவில்லாதவர்களும் பயப்படாமல் எம்முடன் இணைந்து கொள்ளலாம்.

வகுப்பு நடை பெறும் நாள் : 28.29 ந்திகதிகளில் சனி ஞாயிறு பி.ப 2.30க்கு

இடம்: யாழ் வேம்படி மகளிர் கல்லூரி (Vempady Girls college)

பயிற்சி கட்டணம்: 3250/= மட்டுமே

பதிவுக்கட்டணம் எதுவுமில்லை

மேலதிக விபரங்களுக்கு 021 222 0918 ,021 567 5916

வறுமைக்கோட்டிற்கு கீழ் பட்டவர்களுக்கு விசேட கட்டணம்




# இன்டர்போலின்...

யிருந்தார். அதனைத் தொடர்ந்து இந்தியாவின் நீதிமன்ற தேடப்படுவோர் பட்டியலில் விடுதலைப்புலிகளின் முன்னாள் அனைத்துலக உறவுகளுக்கான பொறுப்பாளர் குமரன் பத்மநாதன் பெயர் உள்ளடக்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து இன்டர்போல் பொலிஸாரும் தமது பட்டியலில் அவரது பெயரை மீளவும் உள்ளடக்கியுள்ளனர். (ச-5)

# மனிதவுரிமை...

இலங்கை அரசாங்கம் ஐ.நா. அமைதிப் படையில் பணியாற்ற அனுப்பவேண்டும் என்ற நிபந்தனைகளை ஐ.நா. முன்வைத்துள்ளதாக தெரிகிறது. இந்த உடன்பாட்டில் இலங்கையின் சார்பில் ஐ.நாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி பாலித ஹோகன கையெழுத்திட்டுள்ளதாகவும், அப்போது ஐ.நாவுக்கான தூதுவர் மேஜர் ஜெனரல் சவீந்திரசில்வா முன்னிலை வகித்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேஜர் ஜெனரல் சவீந்திர சில்வா போர்க் குற்றங்களுடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகியிருக்கும் நிலையில்- அவரது முன்னிலையில் மனிதவுரிமைகளுடன் தொடர்புடைய உடன்பாடு ஒன்றை ஐ.நா. செய்துகொண்டுள்ளது முரண்பாடானது என்று விமர்சனங்கள் எழுந்துள்ளன.

இது பற்றி கருத்து வெளியிட்டுள்ள ஐ.நா. பொதுச் செயலரின் பேச்சாளர் மார்ட்டின் நெர்ஸ்க்கி, இந்த உடன்பாடு செய்துகொள்ளப்பட்டுள்ளது இலங்கை என்ற உறுப்பு நாட்டுடனேயே தவிர, மேஜர் ஜெனரல் சவீந்திர சில்வா என்ற தனி நபருடன் அல்ல என்று கூறியுள்ளார். (எ-1)

# கே.பி. அரசின் கைதி;...

பழிவாங்கல் நோக்கத்திற்காகவே நான் சிறைவைக்கப்பட்டுள்ளேன். இராணுவ நீதிமன்றத்தில் நடந்த விடயங்கள் ஊடகவியலாளர்களின் ஊடாக வெளியிட அனுமதி மறுக்கப்பட்டது.

அத்தோடு இராணுவ நீதிமன்றத்தில் சட்டத்தரணிகளுடன் கலந்துரையாட எனக்கு இடமளிக்கவில்லை. இராணுவ நீதிமன்றத்தின் தலைவராக ஜனாதிபதிக்கும், படைத்துறைச் செயலாளருக்கும் தேவைக்கேற்ப செயல்படக்கூடியவர்கள் நியமிக்கப்பட்டனர்.

என்னைச் சிறையில் அடைத்து வைத்தாலும் எனது அரசியல் கொள்கைமாறாது. அதனை எவராலும் அழிக்கவும் முடியாது. சுயாதீன நீதிமன்றமோ அல்லது இயற்கையோ என்னைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தியவர்களை சரியான நேரத்தில் தண்டிக்கும். இது நிச்சயம்.

பிரதம நீதியரசராக புதியவர் ஒருவர் பதவியேற்றுள்ளார். நீதிமன்ற 19ஆம் இலக்க அரசியலமைப்பு சீர்திருத்தத்தினை அரசாங்கம் கொண்டுவர முயல்கிறது. இதன் மூலம் ஜனாதிபதி நீதிமன்றக் கட்டமைப்பின் சகல அதிகாரங்களையும் பெற முயற்சிக்கிறார்.

நீதிமன்றக் கட்டமைப்பும், நீதிச் சேவைகள் ஆணைக்குழுவும் ஜனாதிபதியின் கைப்பிடிக்குள் மாற்றுவதற்கு ஜனாதிபதி முயல்கிறார். ஐக்கிய நாடுகள் சபையினாலும், சர்வதேச சமூகத்தினாலும் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள இராணுவம் தொடர்பான அனைத்துக் குற்றச்சாட்டுக்களுக்கும் பதிலளிக்கக் கூட்டிய சரியான நபர் நானே.

நாட்டை மீட்டெடுத்த எனக்கோ அரசியல் கைதியாக பட்டம் சூட்டப்பட்டுள்ளது. நான் படைத் தளபதியாக பதவியேற்றதன் பின்னர் எனக்கு அடுத்துவரும் படைத்தளபதிக்கு யுத்த சூழ்நிலையை மீதம் வைக்க மாட்டேன் என உறுதியளித்திருந்தேன். அந்த வாக்குறுதியை நான் நிறைவேற்றியிருந்தேன். அந்த வாக்குறுதியை நான் நிறைவேற்றியிருக்காவிட்டால் இன்னும் யுத்தம் தொடர்ந்திருக்கும்.

நான் எனது கண்காணிப்பால் திறமை மிக்க அதிகாரிகளாக மாற்றிய பல படையதிகாரிகளை அரசாங்கம் பழிவாங்கியுள்ளது. அவர்களுக்கு ஓய்வூதியம் கூட மறுக்கப்பட்டுள்ளது. ஆனால் சவேந்திர சில்வா போன்ற பலவீனமுற்ற அதிகாரிகளுக்கு வெளிநாடுகளில் சிறந்த பதவிகளும், பதவி உயர்வுகளும் வழங்கப்பட்டுள்ளன என்றார்.

இவ் வழக்கு விசாரணை எதிர்வரும் 31ஆம் திகதிக்கு தீபாலி விஜயசுந்தர தலைமையிலான நீதிபதிகள் அடங்கிய குழு ஒத்திவைத்துள்ளது. (ச-5)

# போர் வெற்றி விழா...

ரிகள் மற்றும் 4ஆயிரத்து 806 இராணுவத்தினரும், 20 அதிகாரிகள் மற்றும் ஆயிரம் கடற்படையினரும், 20 அதிகாரிகள் மற்றும் ஆயிரம் விமானப் படையினரும், சிறப்பு அதிரடிப்படை உள்ளிட்ட பொலிஸார் 20 அதிகாரிகள் மற்றும் 500 பேரும், 20 அதிகாரிகள் மற்றும் 500 குடிமக்கள் பாதுகாப்புப் படையினரும் இந்த அணிவகுப்பில் பங்கேற்கவுள்ளனர்.

இராணுவத்தின் ஆயுத தளபாடங்கள் அனைத்தும் அணிவகுப்பில் பங்கேற்கவுள்ள அதேவேளை, கடற்படையின் போர் கலங்கள் கடலிலும், விமானப்படை விமானங்கள் வானிலும் அணிவகுத்துச் செல்லவுள்ளன. இந்த வெற்றிவிழா நிகழ்வுகளை முன்னிட்டு கொழும்பில் இன்று உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

**போர் வெற்றி விழாவில் ஐ.தே.கவும் பங்கேற்பு**

கொழும்பில் இன்று நடைபெறவுள்ள போர் வெற்றிவிழாவில் எதிர்க்கட்சியான ஐ.தே.க. பங்கேற்கப் போவதாக அறிவித்துள்ளது.

காலி முகத்திடலில் இன்று காலை நடைபெறவுள்ள பாரிய படை அணிவகுப்பு நிகழ்வுகளில் ஐ.தே.கவின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க கலந்துகொள்ளவுள்ளார்.

சரத் பொன்சேகாவைப் புறக்கணித்துவிட்டு நடத்தப்படும் வெற்றி விழாவில் பங்கேற்கப் போவதில்லை என்று ஐ.தே.க. கடந்த ஆண்டு அறிவித்திருந்தது.

இந் நிலையில் இந்த ஆண்டு வெற்றிவிழா நிகழ்வுகளில் ஐ.தே.க அதிகார பூர்வமாக பங்கேற்கவுள்ளதாக அறிவித்துள்ளது. (ச-5)


## குமரகுரு வாணிபம்

### வைகாசித் திருவிழா மலிவு விற்பனை

அன்பிற்கினிய எமது வாடிக்கையாளர்கட்கு, எதிர்வரும் 30.05.2011 தொடக்கம் 30.06.2011 வரை விசேட சிறப்புக் கழிவு விற்பனையாக ரெடிமேட்

ஆடைகளுக்கு இரண்டுக்கு ஒன்று இலவசமாக வழங்கவுள்ளோம். அத்துடன் ஏனைய பொருட்கள் (10,000) பத்தாயிரம் பெறுமதியான கொள்வனவுக்கு உங்கள் அதிர்ஷ்டப் பெட்டியில் இருந்து உங்களால் தெரிவுசெய்யப்படும் பரிசுப் பொருட்கள் உடனுக்குடன் வழங்கவுள்ளோம் என்பதனையும் சித்திரைப் புதுவருடப் பிறப்பிற்கு அதிர்ஷ்டம் பார்க்கப்பட இருந்த இரண்டு மோட்டார் சைக்கிள்களும் 20.06.2011 அன்று பிற்பகல் 4.00 மணிக்கு குமரகுரு மல்ரிசொப் முன்றலில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டு மோட்டார் சைக்கிள்கள் வழங்கவுள்ளோம் என்பதனையும் எமது வாடிக்கையாளர்களுக்கு தெரியப்படுத்துகின்றோம்.

இச் செய்தியை உங்கள் நண்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும் தெரியப்படுத்துவீர்கள் என்றும் நம்புகின்றோம்.

இப்படிக்கு உங்கள் ஆதரவின் கீழ்

குமரகுரு மல்ரிசொப்.
பிரதான வைத்தியசாலை முன்பாக,
A-9 வீதி, ஆனந்தபுரம், கிளிநொச்சி.

குமரகுரு புடைவையகம்,
A-9 வீதி, கச்சேரி முன்பாக,
கிளிநொச்சி.

விரைவான சேவைக்கு குமரகுரு

(சி-3296)


# யுத்தத்தில் கொல்...

கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டது யாரால் என்பது தொடர்பாக நாம் ஆராயவரவில்லை. கொல்லப்பட்ட மக்களுக்கு அஞ்சலி செலுத்தவே நாம் அழைப்புவிடுத்தோம் எனவும் தெரிவித்தனர்.

மேலும் ஆளும் தரப்பினால் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்ட போதிலும் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் இரு நிமிட அக வணக்கம் செலுத்தினர். இதன்போது ஆளும் தரப்பு உறுப்பினர்கள் மேசையில் அடித்து சத்தம்போட்டதோடு அக வணக்கத்தை குழப்பவும் முயற்சித்தனர்.

இதற்கிடையில் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக சபையை விட்டு வெளிநடப்புச் செய்தார்.

இதனால் நேற்றைய மாதாந்தக் கூட்டம் பரபரப்பின் மத்தியில் முடிபடைந்தது.

கூட்டம் முடியும்வரை நல்லூர் ஆலய சூழலிலிருந்து யாழ். மாநகர சபை வரையான பகுதியில் இராணுவத்தினர் கடுமையான வீதிச் சோதனையில் ஈடுபட்டிருந்தனர். (ந-6)

# மனிதவுரிமை மீறல்களை...

வைக்கப்பட்டதாக அவா மேலும் கூறியுள்ளார்.

அதேவேளை, ஐந்து நீதிபதிகளைக் கொண்ட இக் குழுவில் மூன்று சிங்களப் பிரதிநிதிகளுடன், முறையே ஒரு தமிழ்ப் பிரதிநிதியும், முஸ்லிம் பிரதிநிதியும் இடம் பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயர் நீதிமன்றத்தின் அல்லது மேல் முறையீட்டு நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதிகளே இக் குழுவுக்கு நியமிக்கப்படவுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தனது பணிகளை அடுத்த மாதம் முதல் ஆரம்பிக்கவுள்ள இக் குழு, மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையின்கீழ் சுதந்திரமாக செயற்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் வரலாற்றில் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள முன்னர் நியமிக்கப்பட்ட குழுக்களின் செயற்பாடுகள் சிறிது காலத்தில் அரசாங்கத்தால் நிறுத்தப்பட்டமை குறித்து சர்வதேச மனிதவுரிமை அமைப்புக்கள் சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# சீனாவின்...

இந்தியா அதனை நிராகரித்துள்ளது.

மே 30ஆம் திகதி தொடக்கம் ஜூன் 2ஆம் திகதி வரை இந்திய பாதுகாப்புத்துறை அதிகாரிகளுக்கு இறுக்கமான நிகழ்சிநிரல் இருப்பதால், சீன இராணுவ ஜெனரலை சந்திக்கமுடியாது என்று இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே. அந்தோனி கூறியுள்ளார்.

எனினும் சீன ஜெனரல் இலங்கைக்கான பயணம் மேற்கொள்வது தொடர்பாக சீன அதிகாரிகளோ, இலங்கை அதிகாரிகளே இன்னமும் தகவல் எதையும் வெளியிடவில்லை.

சிறிலங்காவில் நடைபெறவுள்ள போர்க்கருத்தரங்கில் சீன ஜெனரல் பங்குபற்றுவாரா? அல்லது அதற்கு பின்னர் இலங்கை வரவுள்ளாரா? என்ற தெளிவான தகவல்கள் ஏதும் இதுவரை வெளியாகவில்லை. (ச-5)


## சாரதி தேவை

பிரபல தேயிலை வியாபார நிறுவனத்துக்கு கனரக வாகனச் சாரதி ('A'Class) தேவை. தகுதி உள்ளோர் (10.06.2011இற்கு முன்னர்) கீழ்வரும் முகவரிக்கு சுயவிபரக் கோவையை அனுப்பிவைக்கவும்.
தொ.பே. இல. 0777437377

முகாமையாளர்,
இல.248, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். (5017)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.05.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.